திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

அக்டோபர் 2019, விலை ரூ.5/-



திருமலையப்ப ஸ்வாமி

வருடாந்திர பிரம்மோத்ஸவம்

30-09-2019 முதல்
08-10-2019 வரை

மேயான் வேங்கடம் காயாமலர் வண்ணன்
பேயார் முலையுண்ட வாயான் மாதவனே

- நம்மாழ்வார்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வருடாந்திர பிரம்மோத்ஸவம்

**23-11-2019**
**முதல்**
**01-12-2019**
**வரை**

**23-11-2019**
சனிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

**24-11-2019**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : பெரிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**25-11-2019**
திங்கட்கிழமை
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**26-11-2019**
செவ்வாய்க்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

**27-11-2019**
புதன் கிழமை
பகல் : பல்லக்கு உற்சவம்
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**28-11-2019**
வியாழக்கிழமை
பகல் : சர்வபூபால வாகனம்
இரவு : கருட வாகனம்

**29-11-2019**
வெள்ளிக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**30-11-2019**
சனிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**01-12-2019**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்-பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்

பச்யைதாம் பாண்டு$_2$புத்ராணாம் ஆசார்ய மஹதீம் சமூம் |
வ்யூட$_4$ாம் த்$_3$ருபத$_3$புத்ரேண தவ சிஷ்யேண தீ$_4$மதா ||

ஆசார்யரே! உங்களுடைய புத்திசாலி
சீடனான துருபதனின் குமாரன்
திருஷ்டத்யும்னனால் அணி வகுக்கப்பட்ட
பாண்டு புத்திரர்களின் இந்த மிகப்
பெரிய படையைப் பாருங்கள்.

- ஸ்ரீமத் பகவத் கீதை 1-3

ஹி தமிதி ஜகத் த்ருஷ்ட்யா க்லுப்தை ரக்லுப்த பலாந்தரை:
அமதிவிஹிதை ரந்யைர் தர்மாயிதைச் ச யத்ருச்சயா |
பரிணத பஹுச் சத்மா பதமாஸஹாய தயே ஸ்வயம்
ப்ரதிசஸி நிஜாபிப்ரேதம் ந: ப்ரசாம்ய தபத்ரபா ||

ஸ்ரீநிவாஸனுடைய தயாதேவியே! உலகத்தின் நினைவுப்படி புண்ணியமென்று கொள்ளப்பட்ட நற்காரியங்களாலும், (உன்னால்) வேறு பயனைத் தருவனவாக ஸங்கல்பிக்கப்படாத, அறியாமல் செய்யப்பட்ட புண்ணியங்களாலும், தற்செயலாக, தருமமாக ஆன புண்ணியங்களாலும், இன்னும் மற்ற புண்ணியங்களாலும், பரிபக்குவமான (நேர்ந்த) பல காரணங்களே உள்ளனவாகக் கொண்ட நீ வெட்கம் நீங்கியவளாய், தானாகவே எங்களுக்கு நாங்கள் விரும்பியதை கொடுத்தருள்கின்றாய்

- ஸ்ரீதயா சதகம்





# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருடம் புரட்டாசி/ஐப்பசி மாதம் தக்ஷிணாயணம் வர்ஷ/ஸரத்ருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120அக்டோபர் 2019

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 14 | செவ் | திரு | சுவா | திதித்வயம், மாத சதுர்த்தி. |
| 2 | 15 | புதன் | சது | விசா | ஆடைகள் தயாரிக்க. |
| 3 | 16 | வியா | பஞ் | அனு | சஷ்டி, சுக்ரன் துலாம், ப்ளுட்டோ, வ.நி. கரிநாள். |
| 4 | 17 | வெள்ளி | சஷ் | கேட் | சரஸ்வதி ஆவாஹணம், திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை |
| 5 | 18 | சனி | சப் | மூல | திருமலையப்ப ஸ்வாமி தங்கத்திருத்தேர், தேவி திரிராத்திரி விரதம், சரஸ்வதி பூஜை |
| 6 | 19 | ஞாயிறு | அஷ் | பூரா | துர்காஷ்டமி. |
| 7 | 20 | திங்கள் | நவ | உத்ரா | ஆயுத பூஜை, மஹா நவமி, திருமலையப்ப ஸ்வாமி திருத்தேர். |
| 8 | 21 | செவ் | தச | திவோ | ச்ரவணம், விஜயதசமி, திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் நவராத்திரி உத்ஸவம் நிறைவு, உபமாக ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 9 | 22 | புதன் | ஏகா | அவி | பாசாங்குச ஏகாதசி, திருமலையப்ப ஸ்வாமி பாக் சவாரி உத்ஸவம். |
| 10 | 23 | வியா | துவா | சத | பத்மநாப துவாதசி. |
| 11 | 24 | வெள்ளி | திர | பூரட் | பிரதோஷம், வால்மீகிபுரம் (வாயல்பாடு) ஸ்ரீபட்டபிராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம், |
| 12 | 25 | சனி | சசி | உத்ரட் | நடராஜர் அபிஷேகம், சத்ரவாடா ஸ்ரீகரிவரதராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 13 | 26 | ஞாயிறு | பௌ | உத்ரட் | பௌர்ணமி, வால்மீகி ஜயந்தி, தனிய நாள், சத்ரவாடா ஸ்ரீகரிவரதராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு |
| 14 | 27 | திங்கள் | பிர | ரேவ | ஆஸ்வீஜ பஹுள, இயற்கை பாதிப்பு, வால்மீகி புரம் (வாயல்பாடு) ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 15 | 28 | செவ் | துவி | அஸ் | கடன் தீர்க்க. |
| 16 | 29 | புதன் | திரு | பர | கிருத்திகை, விருத்தி திதி, கரி நாள்.சந்த்ரோதய கௌரிவிரதம், (அட்ளதத்தே). |
| 17 | 30 | வியா | திரு | கார் | சங்கடஹர சதுர்த்தி, வ்ய-சிரா, சூரியன் துலாம், இ.1ம.03நி. (47நா.37வி.). துலா விஷு புண்ய காலம். |
| 18 | 1 | வெள்ளி | சது | ரோகி | சஷ்டி,துலாகாவேரி ஸ்நானம். |
| 19 | 2 | சனி | பஞ் | மிரு | .... |
| 20 | 3 | ஞாயிறு | சஷ் | திரு | இயற்கை பாதிப்பு. |
| 21 | 4 | திங்கள் | சப்/அஷ் | புன | காலாஷ்டமி, க்ஷயதிதி, திருமலைநம்பி உத்ஸவம் ஆரம்பம். |
| 22 | 5 | செவ் | நவ | பூச | செவ்வாய் கி.உதயம். |
| 23 | 6 | புதன் | தச | ஆயி | கரி நாள், புதன்-விருச்சிகம், ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம், ஸ்ரீமணவாள மாமுனிகள் உத்ஸவம் ஆரம்பம். |
| 24 | 7 | வியா | ஏகா | மக | சர்வ ஏகாதசி. |
| 25 | 8 | வெள்ளி | துவா | பூர | கோவத்ஸ துவாதசி, பிரதோஷம், தனிய நாள். |
| 26 | 9 | சனி | திர | உத்/ஹஸ் | வைத்-சிரா, மாத சிவராத்ரி தனத் திரயோதசி நரகச் சதுர்தசி ஸ்நானம், ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு, வேதாந்த தேசிகர் உத்ஸவாரம்பம். |
| 27 | 10 | ஞாயிறு | சசி | சித் | தீபாவளி, கேதார கௌரி விரதம், தனலக்ஷ்மி பூஜை, அமாவாசை, திருமலையப்ப ஸ்வாமி தீபாவளி ஆஸ்தானம். |
| 28 | 11 | திங்கள் | அமா | சுவா | கோவர்தன் பூஜா, பலிபாட்யமி, சுக்ரன் விருச்சிகம், வாஸ்து கா.7.42-8-18. |
| 29 | 12 | செவ் | பிர/துவி | விசா | க்ஷய திதி, சந்திர தர்சனம், கார்த்தீக-சுத்த. |
| 30 | 13 | புதன் | திரு | அனு | சுப நாள், திருமலை நம்பி சாத்துமுறை |
| 31 | 14 | வியா | சது | கேட் | மாத சதுர்த்தி. நாகுல சதுர்த்தி, புதன். வ.ஆ. |





*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

*பிரதான ஆசிரியர் :*
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

*ஓவியம் :*
**திரு. P.சிவப்பிரஸாத் (தி.தி.தே.ஓய்வு)**
டி.டி.பி.
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
*தி.தி.தே. திருப்பதி.*

*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

***பிரதிகளுக்கு:***
**THE CHIEF EDITOR,**
**“Sapthagiri”, T.T.D., Tirupati-517 507.**
**0877- 2264543, 2264359**
**2264360**

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள் /கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| **தனிப்பிரதி** | **ரூ.5/-** |
| **வருடச்சந்தா** | **ரூ.60/-** |
| **ஆயுள் சந்தா** | **ரூ.500/-** |
| **அயல்நாட்டு வருடச்சந்தா** | **ரூ.850/-** |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்.-பிரதான ஆசிரியர்



மலர் 50 — இதழ் 05


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| **வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்** *- திரு. கே.பி. தேவராஜன் ஸ்வாமி, பெங்களூரு.* | 7 |
| **திருமலையே தெய்வம்** *- திரு. கிடம்பி நாராயணன் ஸ்வாமி, சென்னை.* | 13 |
| **ஆழ்வாராசாரியர்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் சிந்து பூ மகிழும் வேங்கடம்** *- திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.* | 15 |
| **திவ்ய திருத்தலம்–திருமலை** *- திரு. வேங்கடரமணா, திருப்பதி.* | 19 |
| **நமது திருக்கோயில் : ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், –தொண்டமநாடு** *- திரு. கே.வி. கல்யாண், திருப்பதி.* | 22 |
| **சிறார் வாக்கு : திருமலையில் “கருட” சேவை** *- செல்வன். சி.வாசுதேவா, திருப்பதி.* | 26 |
| **பச்சை தோரணம் : பிரம்மோத்ஸவ சேவையில் அஷ்டத்திக் பாலகர்கள்** *- திருமதி. ஏ. அருணா, திருப்பதி.* | 31 |
| **யான் விரும்பும் திருவேங்கடம்** *- திரு. ஆர். கண்ணன், பெங்களூரு.* | 35 |
| **ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–பிருது சக்கரவர்த்தி முக்தியடைதல்** *- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.* | 38 |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** *- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.* | 41 |
| **108 திவ்யதேச வைபவம் – திருவஹீந்த்ரபுரம்** *- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.* | 44 |
| **பகவத் கீதை–இளைய சமுதாயம் அறிவுறுத்துதல், கடமையை போதித்தல்** *- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.* | 48 |
| **ஆயுர்வேதம் – நாவல் பழம்** *- திருமதி. வி.உஷா, திருப்பதி.* | 50 |
| **2019, அக்டோபர் மாத ராசி பலன்** *- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.* | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : **ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமி, திருமலை**
பின்னட்டை : **தங்க(திரு)த்தேரும், திருசக்கர ஸ்நானமும்**

உங்களுடன்...



# பரந்தாமனின் பத்து நாள் பண்டிகை

அண்டங்கள் முழுவதும் அற்புதமாக பரவியுள்ள ஒரு திவ்வியப் பேரொளியே நேராக வைகுண்டத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்து, சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புரட்டாசி மாதம், திருவோண நட்சத்திரத்தில், வேங்கடாசல திருத்தலத்தில் சுயம்புவாக எழுந்தருளி ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அன்று முதல் இன்று வரை அந்த திவ்ய மங்கள மூர்த்தியை "திருவேங்கடவன்" என்றும், அந்த புனிதத் திருத்தலத்தை "வேங்கடாசலம்" என்றும் அழைக்கப்படுகின்றது. கேட்கும் வரங்களை அளிப்பவராகவும், பக்தர்களுக்கு கற்பக விருக்ஷமாகவும், காமதேனு வாகவும், நோய்களைப் போக்கக்கூடிய திவ்ய ஔஷதமாகவும், பிரம்மாதி தேவர்களால் பூஜிக்கப்படுகின்றவரும், புகழப்படுகின்றவருமான திருவேங்கடமுடையானுக்கு அக்காலம் முதல் எத்தனையோ சேவைகள், எத்தனையோ உத்ஸவங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றிற்கெல்லாம் மகுடமாக வருடத்திற்கு ஒரு முறை பத்து நாட்கள் நடை பெறுகின்ற பிரம்மோத்ஸவ வைபவத்தை வார்த்தைகளால் கூற இயலாது.

இங்ஙனே சுயம்புவாக தோன்றி கொலுவீற்றிருக்கக்கூடிய திருவேங்கடமுடையானுக்கு புரட்டாசி மாதம் திருவோண திருநட்சத்திரத்தன்று முடியும் படியாக, பத்து நாட்கள் சதுர்முக பிரம்மாவால் மிக வைபவமாக நடத்தப்பட்ட பிரம்மோத்ஸவமே இன்றும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வருடம் புரட்டாசி மாதம் திருவேங்கட முடையானின் பிரம்மோத்ஸவம் ஆஸ்வயுஜ சுத்த தசமி திங்கட்கிழமை (செப்டம்பர் 30 இரவு) முதல் ஆரம்பமாகி, ஆஸ்வயுஜ சுத்த தசமி செவ்வாய்க்கிழமை திருவோண நட்சத்திரத்தன்று காலை சக்ரஸ்நானத்துடன் (அக்டோபர் 8 காலை) நிறைவடைகிறது.

முதல் நாள் இரவு பெரிய சேஷ வாகனத்தோடு ஆரம்பமாகும் இத்திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வேளையும் வெவ்வேறு வாகனங்களில், வெவ்வேறு அலங்காரத்துடன் பக்தர்களை மெய்மறக்கச் செய்து, ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது. ஒவ்வொரு வாகனத்திலும் ஆனந்த நிலையானின் அலங்காரம் அற்புதம்! இவற்றில் முக்கியமாக ஐந்தாம் நாள் இரவு "கருட சேவை"யிலும் எட்டாம் நாள் "திருத்தேர்" உத்ஸவத்திலும் பங்கு பெறும் லட்சக்கணக்கான பக்தர்களின் கோலாகல கொண்டாட்டத்தை காண கண் கோடி வேண்டும். திருமலை பிரம்மோத்ஸவத்தில் ஸ்வாமியின் வாகன சேவை ஒருபுறம் சிறப்புற்றிருக்க அந்த வாகன சேவை நடைபெறுகின்ற திருமாட வீதிகளில் பக்தர்களை மெய்மறக்கச் செய்யக்கூடிய பஜனைகள், வேத திவ்ய பிரபந்த பாராயணம், புராண பிரசங்கம் என ஒன்றா! இரண்டா! எத்தனையோ அவை வார்த்தைகளால் வருணிக்க முடியாதவையாகும். இவற்றை காண இரு கண்கள் போதாது.

பிரம்மோத்ஸவத்தில் ஸ்வாமியின் வாகன சேவை வைபவத்தோடு, ஆனந்தத்தை அளிக்கக்கூடிய வண்ண மின் விளக்கு அலங்காரங்கள், புஷ்ப அலங்காரங்கள், மலர் கண்காட்சிகளை காண்பதற்கு லட்சக்கணக்கில் பக்தர்கள் கூட்டம் திருமலைக்கு வருகின்றனர். ஸ்ரீவராஹ ஸ்வாமி ஆலயம், ஸ்வாமி புஷ்கரணி, க்யூ வரிசை, ஸ்வாமி ஆலயம், அன்னப்பிரசாத கட்டிடம், சத்திரங்கள், பேருந்து நிலையம், பூங்காக்கள்...இப்படி திருமலையில் எங்கு பார்த்தாலும் பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.

இப்பக்தர்களின் கூட்டத்தை மனதிற்கொண்டு க்யூ வரிசை, அன்னதான மையங்கள், வாகன சேவை... என பல இடங்களில் தேவஸ்தான மேற்பார்வையில் ஊழியர்கள், ஸ்ரீவாரி சேவகர்கள், சாரணர், வழிகாட்டிகள், காவலர், மருத்துவக்குழு... என பலர் பக்தர்களின் சேவையில் பங்கு கொள்கின்றனர். ஸ்வாமி தரிசனத்திற்காக வரும் பக்தர்கள் அவரவர்கள் பாதுகாப்பாக இருந்தும், அவசரம், கோபம் இன்றி க்யூ வரிசையில் பொறுமையைக் கடைபிடித்தும், தேவஸ்தானத்தாருக்கு தகுந்த ஒத்துழைப்பு நல்கி, அமைதியான முறையில் தம்முடைய திருமலை யாத்திரையை பரிபூரணமாக்கிக் கொள்ளும்படியும் ''பரந்தாமனின் பத்து நாள் பண்டிக்கை''க்கு அன்புடன் வருக எனவும் அழைக்கின்றது எ(உ)ங்கள் ஸப்தகிரி மாத இதழ்.

# வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்

திரு.கே.பி. தேவராஜன் ஸ்வாமி,
பெங்களூரு



ஆழ்வார்கள் வெறும் பறவைகளையும், வண்டினங்களையும், மேகங்களையும் தூதுவிடுகிறார்கள் என்று நம் பூருவர்கள் கொள்வதில்லை. அவர்கள் ஆசார்யர்களைத் தூதுவிடுகிறார்கள் என்றே தூதுவிடும் பாசுரங்களுக்கு ஸ்வாபதேசம் அருளுகிறார்கள். இது ஆசார்யஹ்ருதயத்தில் *''சேர்ப் பாரைப் பக்ஷிகளாக்கி''* என்று தொடங்கும் சூத்ரத்தில் தெளிவாகக் காட்டியுள்ளார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். ஸ்ரீவேதாந்த தேசிகரும் *''தேசிகாஸ்தத்ர தூதா:''* என்றருளியிருப்பதும் காண்க. இவ்வண்ணம் பார்க்கையில் ஆண்டாள் தூது விடுகையில் விளிக்கும் விளிகள் அனைத்தும் எம்பெருமானாரைக் குறிப்பதாக அமைந்துள்ளது என்று ஸ்ரீ.உ.வே. காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி தம் உபந்யாஸங்களில் அருளுவர். திருவரங்கத் தமுதனார் ராமாநுஜரை "குணந்திகழ் கொண்டல்" (திருக்கல்யாண குணங்கள் பொதிந்துள்ள மேகம்) என மேகமாகவே அருளுகிறார். ஆசார்ய ஹ்ருதயத்தில் *''பூண்ட நாள்... அன்பு கூருமடியவர், உறையிலிடாதவர், புயற்கை அருள் மாரி, குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேகம் என்னும்''* என்றுள்ள சூர்ணிகையில், முதலாழ்வார்கள், திருமழிசைப்பிரான், திருமங்கையாழ்வார், எம்பெருமானார் ஆகியோர் மேகமாகக் கூறப்பட்டிருப்பதும் இக்கருத்துக்கு வலிமை சேர்க்கும். ஒவ்வொரு பாசுரத்திலும் உள்ள விளி எம்பெருமானாருக்குப் பொருந்தும் பிரகாரத்தைச் சுருங்க நோக்குவோம்.

1. *''விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்''* – ஆகாயத்தில் விதாநம் கட்டியதுபோல் மேகங்கள் உள்ளன. *''சென்றால் குடையாம்''* என்றும், *''யஸ்தே விதாநம்''* என்றும் ஆதிசேஷன் கூறப்படுகிறானன்றோ? எம்பெருமானாரும் ஆதிசேஷாவதாரமானபடியால், விதாநம் போலுள்ள மேகம் என்பது எம்பெருமானாரையேயன்றோ?

2. *''மாமுத்த நிதி சொரியும் மாமுகில்காள்''* – மேகம் நீராகிற நிதியைப் பொழிவதுபோல் எம்பெருமானாரும் நவநிதி என்று சொல்லலாம்படியான ஒன்பது நூல்களை அருளிச் செய்துள்ளாரன்றோ?

3. *''அளியத்த மேகங்காள்''* – மேகம் மிக்க கருணையுடன் உயிர்கள் வாழ மழை பொழிகிறது. அதுபோன்றே எம்பெருமானாரும் ஜீவர்களிடம் கொண்ட கருணையினால் தம் உபதேசத்தாலும் அநுஷ்டாநத்தாலும் வாழ்வித்தமை அளவிறந்தவை. *''அனைத்துலகும் வாழப்பிறந்த எதிராச மாமுனிவா''* என்றன்றோ எம்பெருமானர் போற்றப்படுகிறார். அமுதனார் *''காரேய் கருணையிராமாநுசா''* என்றாரன்றோ?

4. *''மின்னாகத்தெழுகின்ற மேகங்காள்''* – மேகங்கள் தம்மிடையில் மின்னலைக் கொண்டுள்ளது. அது போன்றே மின்னல்போல் பிரகாசிக்கும்



## அர்ச்சாவதாரம்

**ஸ்ரீ:பதியான ஸ்ரீமந்நாராயணன் தம்முடைய பர, வியூக, விபவ, அந்தர்யாமி ஸ்வரூபாதிகளில் உள்ள குண விசேஷங்கள் அனைத்தையும் பூலோகத்தில் உள்ள பாகவதோத்தமர்கள் கண்குளிர சேவித்து அனுபவித்து போற்றி துதிக்கும் விதமாக தாமுகந்த திவ்ய தேசங்களிலும், அபிமான தலங்களிலும் அர்ச்சாவதாரமாக எழுந்தருளி, நின்றும், இருந்தும், கிடந்தும் சேவை சாதித்தருளுகிறார். மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் திவ்ய தேசங்கள் தோறும் எழுந்தருளி பாசுரங்களால் எம்பெருமானை துதித்துப் போற்றி மங்களாசாசனம் செய்து நாலாயிரத்தையும் அருளினர். ஆசாரிய மகநீயர்களும் திவ்யதேசப்பெருமைகளை முற்றும் உணர்ந்து அனுபவித்து வாழ்ந்திருந்து வியாக்கியானங்கள் இயற்றி ஸ்ரீவைஷ்ணவத்தை பரிபாலித்தருளினர்.**

பிராட்டியுடன் கூடிய எம்பெருமானைத் தம் திருவுள்ளத்தில் எப்பொழுதும் கொண்டவரன்றோ எம்பெருமானார்?

5. *''வான் கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்''* – மேகங்கள் ஆகாயத்தைக் கபளீகரித்துக் கொண்டு எழுமவை. அது போன்றே எம்பெருமானாரும் பரமாகாசமாக உள்ள பரமபதத்தைத் தன் வசப்படுத்திக் கொண்ட அனைவருக்கும் பரமபதப் பிராப்தியைப் பண்ணுவிப்பராக அமைந்துள்ளாரன்றோ? *''ஸ்ரீவிஷ்ணுலோக மணிமண்டப மார்கதயீ''* (விஷ்ணு லோகத்தின் திருமாமணிமண்டபத்துக்கு வழியளிப்பவர்) என்றன்றோ தாடீபஞ்சகம் கூறும்.

6. *''சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள்'* – மேகங்கள் சமுத்திர ஜலத்தை முகந்துகொண்டு மேலேறி அனைவரும் பருகும் வகையில் பொழியுமவை. அதுபோன்றே எம்பெருமானாரும் சாஸ்த்ரங்களாகிற கடலினுட் புகுந்து அதில் அமுதன்னவற்றையன்றோ தம்மைத் தஞ்சமென்று பற்றினார்க்கு அருளுவது. கத்யத்ரயம் இத்தகைத்தன்றோ? மேலும் திருக்கோஷ்டியூர் அஷ்டாங்கவிமாநத்தில் உள்ள தெற்காழ்வார் ஓலக்கத்தில் ஆசையுடையோரை அழைத்து ரஹஸ்யார்த்தத்தை அருளினாரன்றோ?

7. *''சங்கமா கடல் கடைந்தான் வேங்கடத்துத் தண்முகில்காள்''* – மேகங்கள் திருவேங்கட மலையில் சஞ்சரிக்கின்றன. அதுபோன்றே எம்பெருமானாரும் திருவேங்கடமுடையான் திவ்யாஸ்தாநத்தில் வேதார்த்த ஸங்ரஹம் உபந்யஸித்தாரன்றோ?

8. *''கார்காலத் தெழுகின்ற கார்முகில்காள்''* – மழை வேண்டுங்காலத்தில் மேகங்கள் எழுந்து மழை பொழிகின்றன. அது போன்றே எம்பெருமானாரும் வேண்டுங்காலத்தில் அர்த்த விசேஷங்களை பாஹ்ய குத்ருஷ்டிகளின் கருத்துக்களை மறுத்து நூல்கள் அருளிச் செய்தாரன்றோ?

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. சிரஞ்சீவிகள் எத்தனை பேர்?
2. பொய்கையாழ்வார் அவதாரத்தலம் எது?
3. மக்கள் போற்றும் காவியங்கள் எது?
4. ஸ்ரீமகாலட்சுமிக்கு உகந்த விருக்ஷம் எது?
5. நரசிம்ம அவதாரம் யார் பொருட்டு நடந்தது?
6. மகாபாரதம் வேறு எந்நாட்டு மொழியில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது?
7. ஸ்ரீவைகுண்ட திவ்ய தேசத்தை மங்களா சாசனம் செய்த ஆழ்வார் யார்?
8. நாலாயிர திவ்ய பிரபந்தத்தை ராகம், தாளத்தோடு இன்னிசையாய் இசைப்பது?
9. விப்ரநாராயணருக்கு உள்ள வேறு பெயர் எது?
10. வைணவத்தின் இரண்டு ஆகமங்கள் எவை?

விடைகளுக்கு 51ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : திரு. கோவிந்தன், கடலூர்.

9. *''மதயானை போலெழுந்த மாமுகில்காள்''* – மத்தகஜம் போலே எழும் மேகங்கள். அதுபோன்று எம்பெருமானாரும் *''பண்டரு மாறன் பசுந்தமிழ் ஆநந்தம் பாய்மதமாய் விண்டிட எங்களிராமாநுச முனி வேழம்''* என்று அமுதனாரும் அருளினாரன்றோ?

"விண்ணீல மேலாப்பு" பதிகத்தில்,

*''மதயானை போலெழுந்த மாமுகில்காள்! வேங்கடத்தைப்*
*பதியாக வாழ்வீர்காள்! பாம்பணையான் வார்த்தை என்னே!*
*கதியென்றும் தானாவான் கருதாது ஓர் பெண்கொடியை*
*வதைசெய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே''*

என்றருளுகிறாள் ஆண்டாள். இப்பாசுரத்தின் திரண்ட பொருள் "திருவேங்கட மலையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்கின்றவையாயும் மத்தகஜம் போலே செருக்குடன் கிளர்ந்தெழுந்தவையாயுமுள்ள காளமேகங்களே சேஷசாயியான எம்பெருமானுடைய வார்த்தையானது யாது? அவ்வெம்பெருமான்தான் எப்பேதைக்கும் ரக்ஷகனாயிருந்துவைத்தும், தன் ரக்ஷகத்வஸ்வரூபத்துக்குக் கேடுவருமே என நினையாமல் ஒரு பெண்பிள்ளையை கொலை பண்ணினான் என்கிற சொல்லை உலகிலுள்ளவர்கள் ஒரு பொருளாகக் கொள்ளார்களோ?" என்பதாம். இனி இப்பாசுரத்தில் வரும் *''வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்''* என்ற சொற்றொடருக்கு நம் ஆசார்யர்கள் அருளியுள்ள அர்த்த விசேஷங்களையும் அதற்குத் தொடர்பானவற்றையும் சிறிது விரிவாகப் பார்ப்போம். இப்பாசுரத்தில் மேகத்தை இரண்டு விளிகள் கொண்டு விளிக்கிறாள். ஒன்று *''மதயானை போலெழுந்த மாமுகில்காள்''* என்பது. மற்றொன்று *''வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்''* என்பது. இப்பொழுது, அதில் இரண்டாம் விளியே அனுபவத்துக்கு விஷயமாம்.

வேங்கட மலையை உங்கள் இருப்பிடமாகக் கொண்டு வாழும் மேகங்களே என்று ஆண்டாள் அருளியிருப்பதன் அழகும் நயமும் சொல்லிலடங்கா. இங்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளுமது, *''திருநாள் சேவித்துப் போவாரைப் போலே போராதே அங்கே நித்ய வாசம் பண்ணப் பெறுவதே நீங்கள்''* என்பது வ்யாக்யான சொற்றொடர்.

"திருவேங்கட மலைக்குப் பல லக்ஷக் கணக்கில் பக்தர்கள் வந்து கூடுகின்றனர். அவர்கள் ஓரிரு நாள் அங்குத் தங்கி எம்பெருமானையும் அவனுடைய நித்ய பக்ஷ மாஸ ஸம்வத்ஸரோத்ஸவங்களாகிற திருநாளைச் சேவித்து விட்டுத் தங்களிருப்பிடம் சேர்ந்து விடுகின்றனர். ஆனால் மேகங்களே நீங்கள் உங்கள் இருப்பிடமாகவே எம்பெருமான் நித்ய வாசம் பண்ணும் திருவேங்கட திவ்ய க்ஷேத்ரத்தைக் கொண்டிருக்கிறீர்களே" என மேகத்தை வியந்து கொண்டாடுகிறாள் ஆண்டாள். மேலும் வ்யாக்யாதா நவில்வன கேளீர். பரமபதத்துக்குச் செல்லும் முக்தர்கள் ஒரு காலத்தில், ஸம்ஸார ஸம்பந்தத்துடனிருந்து, பிறகு எம்பெருமானருளால் இந்த ஸம்ஸாரமாகிற ப்ரக்ருதி ஸம்பந்தம் நீங்கப் பெற்று எம்பெருமானை அனுபவிப்பவர்களாயுள்ளார்கள். அதாவது அவர்கள்

## வித்தகன் வேங்கட வாணன்

**திவ்ய தேசங்கள் அனைத்தும் ஒவ்வொரு விதத்தில் பெருமை பெற்றவை. அவ்வகையில் திருமலை திவ்ய தேசத்தில் சேவை சாதிக்கும் திருவேங்கடமுடையான் தொண்டரடிப்பொடியாழ்வார் தவிர்த்து மற்றைய ஆழ்வார்கள் பதின்மரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற போற்றுதலுக்கு உரிய பெருமாள் ஆவார். ஸ்வர்ணம், தனம், ஜனம் இவற்றினை ஸ்வாதீனமாக ஆகர்ஷித்து தன்பால் ஈர்த்து கொள்ளும் பெருமையுடைய ஆற்றல் பெற்றவராக, திருமலையில் ஒரு பேரதிசயம் நிகழ்த்துபவராக பாகவதோத்தமர்களின் அனைத்து ப்ரார்த்தனைகளையும் நிறைவேற்றிய வண்ணம் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதித்தருளுகிறார் வேங்கடவன். அதிசயிக்கத்தக்க ஆற்றலினையும், வியக்கத்தக்க விவேகத்தினையும், பாராட்டத்தக்க பராக்கிரமத்தினையும், ஒரு செயலை தம்மைத் தவிர யாராலும் செய்ய முடியாது என்கிற தனித்தன்மையினையும் கொண்டு செயலாற்றும் தேர்ச்சியுடையவன் வித்தகன் எனப்படுகிறான். இத்தகைய தன்மைகளை தன்னகத்தேக் கொண்டு திருமலையில் சேவை சாதிக்கும் எம்பெருமானை ஆழ்வார்கள் வித்தகன் என்று கொண்டாடியும், வேங்கட மலையில் வாழ்ந்திருந்து அருளுவதால் வாணன் என்றும் குறிப்பிட்டும் *''வித்தகன் வேங்கட வாணன்''* என்று பாசுரமிட்டருளியுள்ளனர்.**





# வேங்கட வாமனன்

*"மன்னு நமுசியை வானிற் சுழற்றிய*
*மின்னு முடியனே! அச்சோ அச்சோ*
*வேங்கட வாணனே! அச்சோ! அச்சோ!"* – பெரியாழ்.தி.மொழி 1–8–8.



**குள்ளமான பிரமச்சரிய வேடத்தினை புனைந்தவனாய், மகாபலியிடம் மூன்றடி தானம் பெற்றவுடன் விண்ணோக்கி தம் திருவுருவை பெருக்கிய வண்ணம் எம்பெருமான் வளர்ந்து தம் திருவடியால் பூமியினை அளக்க முற்படுகையில், மகாபலியின் புதல்வனான நமுசி என்பவன் எம்பெருமானைத் தடுத்து,வாமன உருவினாலேயே வையத்தினை அளக்க வேண்டும் என்றான். அத்தகைய நமுசியைப் பற்றி வானில் சுழற்றி எறிந்தவனான எம்பெருமான் மின்னுகின்ற கிரீடத் தினை தரித்தவனாய் திருமலையிலே சேவை சாதித்தருளுகின்றான்.**

அழுக்கடைந்து கிடந்த ரத்னத்தை அழுக்குத் தீரச் சாணையிலிட்டு சுத்தப்படுத்தினாற்போல் முக்தர் களின் நிலை. ஆனால் பரமபதத்திலுள்ள நித்யர்க ளான அநந்த கருட விச்வக்சேனர் முதலானோர், ஒரு நாளும் சம்ஸார சம்பந்தமே இல்லாதவர் களாய் அழுக்கடையாத மாணிக்கம் போன்றவர் கள். ஆழ்வார் *"துவளில் மாமணிமாடம்"* என்று தொலை வில்லி மங்கலத்தின் மாளிகைகளின் ரத்னத்தைக் கூறினார். அது சம்சாரிகள் முக்திய டைந்தாற் போன்ற சுத்தி. அதாவது ஒரு காலத்தில் அழுக்கிருந்து அது நீக்கப் பெற்றது என்று பொருள். ஆனால் ஆண்டாள் ஒரு கோபிகையின் திருமாளிகையை *"தூமணிமாடம்"* என்றருளுகிறார். அது நித்யர்களைப் போலே ஒருநாளும் அழுக்க டையாத சுத்தியை உடைய ரத்னமாம். அது போலவே மேகங்களே நீங்களும் மற்றையோர் களைப் போலே வெளியிடங்களிலே இருந்து விட்டு அவற்றின் ஸ்பர்சத்தாலே அசுத்தியடைந்து பின்பு திருவேங்கடத்துக்கு வந்து சுத்தியடைந்தவர் களைப் போன்றிராமல், இயல்பாகவே திருவேங் கடத்திலேயே சுத்தியுடன் கூடிய வாழ்ச்சியை உடையவர்களாயிருப்பவர்கள் என்று பொருள்.

உலகில் வசித்தல் (வர்த்தித்தல்) என்றும், வாழ்தல் என்றும் ஓரிடத்தில் இருத்தல் இரண்டு வகையாகக் குறிப்பிடப்படுகின்றன. வசித்தல் என்றால் வேளைக்கு எதையேனும் உண்டு, உடுத்து, அநுபவிக்க வேண்டுமவற்றை அனுபவிக் கும் பேறு கிட்டாமல் ஏதோ ஒருவிதத்தில் காலத்தைக் கழித்துக் கொண்டிருத்தலாகும். ஆனால் வாழ்தல் என்பது பெற்று அனுபவிக்க வேண்டுமவற்றைப் பெற்று மகிழ்வுடன் இருத்தலாம். உலகில் தன் கணவன் மக்கள் இவர்களுடன் மகிழ்கின்ற பெண்ணை "வாழும் பெண்" என வழங்குவதையும் காண்கிறோம். இங்கு மேகங்களை ஆண்டாள் "வாழ்வீர்காள்" என்கிறாள். அதாவது மேகங்கள் திருவேங்கடத்தில் வசித்தலே வாழ்தலாம். *"அங்குத்தை வர்த்தனத்தையிறே வாழ்வாகச் சொல்லுகிறது"* என்றருளுகிறார் பெரியவாச்சான்பிள்ளை.

இரண்டாறுகளாம் வடதிருக்காவேரி, தென்திருக்காவேரி களின் நடுவே வசிப்பதே வாழ்ச்சி என்றன்றோ நம்பூர்வர்கள் கொண்டிருப்பது. *"நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணையார்"* என்று ஆண்டாளும் அருளியிருக்கிறாள். இங்கு எப்படித் திருவேங்கடத்திலும், திருவரங்கத்திலும் இருக்கும் இருப்பு வாழ்ச்சியாகும்? என்றொரு வினாவெழுகிறது. பகவானைத் தவிர்ந்த மற்ற விஷயங்கள் விஷயாந்தரங்கள் எனப்படுகின் றன. அவற்றில் உள்ள ஈடுபாடு நம்மை நரகப்படுகுழியில் தள்ளுமவையானபடியாலே அவை விநாசத்துக்குக் காரண மாக அமைந்து விடுகின்றன. ஆனால் எம்பெருமானிடம் உள்ள ஈடுபாடு ஆத்மோஜ்ஜீவநத்துக்கு உடலாகிறது. ஆகவே மற்ற இடங்கள் நமக்கு விஷயாந்தரங்களில் ஈடு பாட்டை உண்டு பண்ணுகிறபடியால் அங்கிருத்தல் வெறும் வர்த்தநம் (வசித்தல்) மட்டுமே. வாழ்ச்சியாகாது. இப்படி விஷயாந்தரங்கள் நடையாடுமிடங்களைக் கண்டு ஆழ்வார் அஞ்சிக் கதறும் பாசுரங்கள் அனேகங்கள்.

## 72. சாஸ்த்திர நீதிகள் :

அக்நி ஹோத்ரம் க்ருஹம் க்ஷேத்திரம்
கர்ப்பிணீ வ்ருத்த பாலகௌ।
ரிக்த ஹஸ்தே நநொ பேயாது
ராஜா ந தைவதம் குரும்॥

நித்யாக்னி ஹோத்ரம் செய்து வரும் ப்ராம்மணர்களது வீட்டிற்கு போகும் போதும், யாரையாவது பார்க்க வீடுகளுக்குச் செல்லும் காலத்திலும், கர்ப்பம் தரித்துள்ள கர்ப்பவதியை காணும் போதும், முதியோர்கள், ராஜா, சிறுவர்கள், தெய்வ சன்னதிகள், குருவை சந்திக்க போகும் காலத்தில் வெறும் கையோடு செல்லல் ஆகாது! எனவே ஹோமம் செய்யும் இடத்திற்கு பசுநெய், சமித்து, நவ தான்யங்களுடனும், மற்ற இடங்களுக்கு பழங்களும் கொண்டு கொடுத்து நமஸ்காரம் செய்து ஆசிபெற வேணும்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

இவ்வண்ணம் நம்மை இந்திரியங்கள் நலியாதிருக்க வேண்டுமெனில் எப்பொழுதும் பகவானைப் பற்றிய சிந்தனையிலேயே இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ப்ராப்த விஷயமான எம்பெருமானையே அனுபவித்துக் கொண்டிருக்கலாம். அதுவன்றோ வாழ்ச்சி. அப்படிப்பட்ட வாழ்ச்சி நமக்குக் கிடைக்குமிடம் திவ்ய தேசங்களாகும். ஆகவே திவ்ய தேசங்களில் பகவதனுபவம் செய்து கொண்டிருத்தலே வாழ்ச்சியாகும் என்பது *''வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்''* என்ற சொற்றொடரின் தேர்ந்த கருத்தாகும்.

இப்படி வேங்கடத்தைப் பதியாக வாழ்ந்த மற்றும் வாழ்கின்ற மஹாத்மாக்கள் பலர். திருமலையிலேயே இருந்துகொண்டு திருவேங்கடமுடையானுக்குக் கைங்கர்யம் ஆற்றிக் கொண்டு வந்த திருமலை நம்பிகள், திருவேங்கடமுடையானின் பரத்வத்தைப் பலருமறிய ஸ்தாபித்த எம்பெருமானார், அவ்வெம்பெருமானாரின் நியமனத்தை ஏற்று திருவேங்கடமுடையானுக்குக் கைங்கர்யங்களைச் செய்த ஆண்பிள்ளையான திருமலை அநந்தாழ்வான், மாமுனிகளின் நியமனப்படியாகத் திருவேங்கடமுடையான் நிச்சலும் விடியற்காலை வேளையில் திருச்செவி சாத்தும் ஸ்ரீவேங்கடேச ஸுப்ரபாதம், ஸ்தோத்ரம், ப்ரபத்தி, மங்களம் ஆகியவற்றை அருளிய ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா, எம்பெருமானாராலும் மணவாள மாமுனிகளாலும் நியமிக்கப்பட்டு திருவேங்கடமுடையானின் தொண்டிலேயே ஈடுபட்டிருக்கும் பெரிய கேள்வியப்பன், சிறிய கேள்வியப்பன் என்கிற ஜீயர் ஸ்வாமிகள் இருவர், ஆசார்ய புருஷர்கள், அர்ச்சக ஸ்வாமிகள், இன்னமும் திருவேங்கடமுடையானின் அத்தாணிச் சேவகத்தில் ஈடுபட்டுள்ள பெரியோர் ஆகியோர் அனைவருமே வேங்கடத்தைப் பதியாக வாழ்பவர்களே. இவர்களுக்குப் பல்லாண்டு பாடி அமைகிறேன்.

ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா

## வேங்கட இராமன்

*''தென்னிலங்கை மன்னன் சிரம்தோள் துணி செய்தும்*
*மின்னிலங்கு பூண் விபீடண நம்பிக்கு*
*என்னிலங்கு நாமத்தளவு மர சென்ற*
*மின்னலங்காரற்கோர் கோல் கொண்டுவா*
*வேங்கட வாணற்கோர் கோல்கொண்டுவா''*

– பெரியாழ்வார் திருமொழி 2–6–9.



**இராவணனின் தலைகளையும் தோள்களையும் அம்புகளால் அறுத்து வீழ்த்தி சம்ஹாரம் செய்து அவன் தம்பியான விபீடணனுக்கு அரச பட்டாபிஷேகம் செய்வித்து, அரச அலங்காரத்தில் ஒளிவீசும் ஆபரணங்களை அணிந்த விபீடணனிடம் தம் திருநாமம் அவனியில் உள்ளவரை அரசாட்சி செய்வாயாக என்றருளிய இராமபிரான் திருவேங்கடவனாக மின்னலை போன்று ஒளிவீசும் அலங்காரங்களுடனே திருமலையில் சேவை சாதித்து அவனி உள்ளவரை பாகவதோத்தமர்களுக்கு வேண்டிய வரங்களை அருளுவதாக பெரியாழ்வார் பாசுரமிடுகிறார்.**



ஸ்ரீ ரா மா ஸ்ரீ ரா மா ஸ்ரீ ரா மா ஸ்ரீ ரா மா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா ஸ்ரீராமா

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 38

## இடமிருந்து வலம்

1. சங்கு, சக்கரம், கதையுடன் ஸ்ரீராமர் அருள் பாலிக்கும் தலம்....(5)
5. திருக்கோயில்களில் லட்சம் முறை பகவானின் நாமங்களை ஓதுவதை... ....(7) என்று அழைக்கப்படுகிறது.
6. நம்மாழ்வாரின் இயற்பெயர்....(5)
7. .....(3)சேவை தோளில் சாத்தப்படும் சேவை.
17. கௌரவர்களில் மூத்தவன்... (6)
21. கல்லால் ஆன கருட வாகனம் உள்ள திவ்ய தேசம்...(6)
23. பிரகலாதனுக்கு ஹரி மந்திரத்தை உபதேசித்தவர்....(4)

## வலமிருந்து இடம்

3. பத்மாவதி தாயார் குடி கொண்டிருக்கும் தலம்....(6)
4. ராமாநுஜரின் அந்தரங்க சீடர்...(4)
9. அர்ஜுனனுக்கு சிவபெருமான் வழங்கிய ஆயுதம்...(8)
16. கலியுகத்தில் ஸ்ரீமகாலட்சுமியின் பதியாக இருப்பவர்....(5)
18. திருப்பாவை ஏழாவது பாசுரத்தில் கோதை குறிப்பிடும் பறவை.... (7)
19. நரசிம்மரின் வலது திருநேத்திரமாய் இருப்பவர்....(4)
20. பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூன்று ஆழ்வார்களையும்....(8) என்பர்.
22. “எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே” என்று குலசேகராழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசம்...(5)

## மேலிருந்து கீழ்

1. அத்திரி முனிவரின் தவம் கண்டு மகிழ்ந்த திருமால் நரசிம்மராக காட்சியளித்த தலம்...(8)
2. விஷ்ணு என்ன பிரியன்?...(10)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | | | | 3 |
| | | | | 4 | 5 | | | | | | |
| | | ■ | ■ | ■ | | ■ | 6 | | | | |
| | | 7 | | | | 23 | | | | ■ | ■ |
| | | | | | | | | | | 8 | 9 |
| | | | | | | | ■ | | | | ■ |
| | | | | | | | ■ | | 10 | | ■ |
| | | 24 | 11 | | | | ■ | 12 | ■ | | ■ |
| ■ | 13 | ■ | ■ | 14 | | 15 | | | | | 16 |
| 17 | | | | | | | | | | | 18 |
| | | | 19 | | | | | | | | 20 |
| 21 | | | | | | ■ | | | | | 22 |

தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.

விடைக்கு 49 ம் பக்கம் பார்க்கவும்.

8. கிருஷ்ணரின் சகோதரி....(4)

## கீழிருந்து மேல்

10. வேதத்தை அபகரித்த அரக்கர்களில் ஒருவன்...(4)
11. அயல்நாட்டு திவ்ய தேசம்....(4)
12. தை மாதம் வளர்பிறையில் வரும் ஏகாதசியின் பெயர்...(4)
13. பலராமனை ......(8) என்றும் அழைப்பர்.
14. அனுமனுக்கு சாஸ்திர ஞானம் அளித்த குரு...(4)
15. லட்சுமிக்கு விருப்பமான மலர்...(5)
24. திருவிக்ரமனின் திருவடியை பூஜித்தவர்....(4)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்



# திருமலையே தெய்வம்

திரு. கிடம்பி நாராயணன் ஸ்வாமி. சென்னை.

*''சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை*
*நின்று வினை கெடுக்கும் நீர்மையால் - என்றும்*
*கடிக்கமல நான்முகனும் கண் மூன்றத்தானும்*
*அடிக்கமல மிட்டேத்துமங்கு.''*

ஸ்ரீயப்பதியான எம்பெருமானாலே மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். எம்பெருமான் கண்ணபிரானாக அவதாரம் செய்தான். இரண்டு குலங்களைப் பெற்றான். அந்த எம்பெருமானைப் போலவே, இரண்டு குலங்களைப் பெற்றவர் ஒரு ஆழ்வார். அவர்தான், திருமழிசை ஆழ்வார். ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்று எல்லாரும் அறிந்து கொள்ளும்படியாக, பாசுரங்கள் அருளிச் செய்தவர் திருமழிசை ஆழ்வார். அந்த ஆழ்வார், திருமலையில் எழுந்தருளியிருக்கும், திருவேங்கடமுடையானைக் கொண்டாடி, பக்தி பெருக்கெடுத்து, 12 பாசுரங்களை, நான்முகன் திருவந்தாதி என்ற பிரபந்தத்தில் பாடி உள்ளார். அந்த, 12 பாசுரங்களில், ஒரு பாசுரம் தான், நாம் மேலே அனுபவித்த பாசுரம். இது 42 வது பாசுரம்.

இதற்கு, முந்தைய 41வது பாசுரத்தில், திருமலைக்குச் சென்று, எம்பெருமானை சேவிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார். எம்பெருமான், திருமலையை விட்டுப்பிரிந்து, இவருடைய உள்ளத்திற்கு வர ஆசைப் பட்டான். இவரோ, திருமலைக்குச் சென்று எம்பெருமானை சேவிக்க ஆசைப்பட்டார்.

*''வேம் கடங்கள் மெய் மேல் வினை முற்றவும்''* என்று நம்மாழ்வார் திருவாய் மொழியில் அருளிச் செய்தார். பாவங்களைப் போக்கடிப்பது திருவேங்கடம் என்று இதற்கு அர்த்தம்.

திருமலைக்குச் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்ட திருமழிசை ஆழ்வாரிடம் சில அடியார்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பினார்கள்.

"நாம் ஆசைப்பட்டது எதுவோ, அதை அடைய வேண்டும். அதற்கு இஷ்டத்தை அடைதல் என்று பெயர். இஷ்ட ப்ராப்தி என்றும் கூறுவார்கள்.

நாம் எதை வேண்டாம் என்று விலக்க ஆசைப்படுகிறோமோ, அதை நாம் அடையக் கூடாது. இதை அநிஷ்டத்தை விலக்குதல் என்று கூறுவார்கள். அநிஷ்ட நிவ்ருத்தி என்றும் பெயர். திருவேங்கட யாத்திரை செய்தால், நாம் இஷ்டப்பட்டதை அடைய முடியுமா? இதற்கு, இந்த 42வது பாசுரத்தில், பதில் கூறினார் திருமழிசை ஆழ்வார்.

"திருமலையில் ஏறி, திருமலையப்பனை சேவிக்க வேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் கிடையாது. நீங்கள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? திருமலைக்குப் பக்கத்தில் செல் லுங்கள். அருகாமையில் போய் நில்லுங்கள். அதுவே போதும். எம்பெருமானுக்கு எப்படி நீர்மை குணம் உண்டோ, அதே போல், எம்பெருமான் எழுந்தருளி இருக்கும் திரு மலைக்கும் நீர்மை குணம் உண்டு. திருமலையே, தன் ஸ்வபாவத்தினால், உங்கள் பாவங்களைப் போக்கும். நீங்கள் ஆசைப்பட் டதை, திருமலையே, உங்களுக்கு அளிக்கும்."

எம்பெருமானுக்கு, "திருவேங்கடத்தான், திருவேங்கடவன்" என்று திருநாமம். பாவங்களைப் போக்கும் திருமலையை தனக்கு நித்ய வாசஸ்தலமாகக் கொண்டவன் என்று, இந்த திருநாமங்களுக்கு அர்த்தம். இப்படி, புகழினாலும், அளவாலும் மிகவும் உயர்ந்த வேங்கடத்தை சென்று வணங்குங்கள்". *''சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை''* என்று முதல் அடியில் அருளிச் செய்தார் திருமழிசை ஆழ்வார். ஆகாசம் முழுவதும் விரிந்து, பரந்து இருப்பது திருமலை. "இந்த திருமலையை வணங்குவதற்கு நீண்ட தூரம் நடந்து வர வேண்டுமே என்று பயப்படுகிறீர்களா? அவ்வாறு பயப்பட தேவையில்லை. நீங்கள் உங்கள் ஊரிலிருந்து புறப்படும் போதே, திருமலை உங்கள் கண்களுக்குத் தெரிந்து விடும்." வியாக்யான சக்ரவர்த்தி, பெரியவாச்சான்பிள்ளை இந்த இடத்தில், பெரியாழ்வார் அருளிச் செய்த பாசுரத்தை உதாரணமாகக் காட்டியுள்ளார். *''சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்''* என்று பெரியாழ்வார் திருவேங்கடத்தைப் பாடியுள்ளார். மிகவும் உயர்ந்து விளங்கும் மலை திருமலை. ஆகாசம் முழுவதும் பரந்து இருப்பது திருமலை என்றும், அப்பாசுரத்திற்கு பொருள் இந்த மலையில் எழுந்தருளி இருக்கும் திருவேங்கடமுடையான் என்கிறார் பெரியாழ்வார்.

*''நின்று வினை கெடுக்கும் நீர்மையால்''* என்று திருமழிசை ஆழ்வார் இரண்டாவது அடியாகப் பாடினார். எம்பெருமான் தன் அடியார்களின் பாவங்களைப் போக்கடிப்பதில் உறுதியாய் இருப்பவன். நிலை நிற்பவன். அதே போல், அவன் எழுந்தருளியிருக்கும் திருமலையும், தன்னிடத்தில் வரும் அடியார்களின் பாவங்களை போக்குவதில், நிலையாக இருக்கும். எனவே தான் "வேங்கடம்" என்று பெயர் பெற்றது. எனவே, நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டாம். உங்களின் இஷ்ட ப்ராப்தியையும், அதிஷ்ட நிவ்ருத்தியையும், திருமலையே கொடுத்து விடும் என்கிறார். இரண்டாவது அடியால்,

*''கடிக்கமல நான்முகனும் கண் மூன்றத்தானும்*
*அடிக்கமலம் இட்டு ஏத்தும் அங்கு''*

என்று, திருமழிசை ஆழ்வார், மூன்றாம் அடியாலும், நான்காவது அடியாலும், எம்பெருமான் பெருமையை விவரிக்கிறார். இதன் பொருள், "அந்த திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானான திருமலையப்பன் திருவடிகளில், நான்முகனான ப்ரும்மாவும், முக்கண்ணனான சிவபிரானும் தாமரை புஷ்பத்தை வைத்து வணங்குவார்கள். துதிப்பார்கள்." இதை விவரிக்கிறார் வியாக்யான சக்ரவர்த்தி பெரியவாச்சான்பிள்ளை.

பிரும்மா தொடக்கமாக, தேவர்கள்தான் நாம் எதைப் ப்ரார்த்தித்தாலும் கொடுக்கிறார்கள் என்று நாம் நினைக்கின்றோம். அந்த நான்முகனான ப்ரும்மாவும், முக்கண்ணனான சிவபெருமானும் அவர்கள் பதவியை எவ்வாறு பெறுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? "ப்ரும்மாவும், சிவபெருமானும் திருமலை செல்கிறார்கள். திருமலையப்பன் திருவடிகளில் தலை மடுத்து வணங்குகிறார்கள். இவர்கள் இருவரும், எம்பெருமான் திருவடிகளில், தினமும் தாமரை புஷ்பங்களாலே அர்ச்சனை செய்கிறார்கள். அவனை துதித்துப் பாடுகிறார்கள். அதன் பயனாக, தாங்கள் ஆசைப்பட்டதை அடைகிறார்கள். ஆகவே நீங்கள், உங்கள் இஷ்ட பிராப்தியை நினைத்து கவலைப்பட வேண்டாம். சந்தேகப்பட வேண்டாம். திருமலையை வணங்குங்கள்" என்று இந்த பாசுரத்தில், திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்தார்.



## வேங்கட கிருஷ்ணன்

*"கோதுகலமுடைக்குட்டனேயோ!*
*குன்றெடுத்தாய்! குடமாடு கூத்தா!*
*வேதப் பொருளே! என் வேங்கடவா!*
*வித்தகனே! இங்கே போதராயே''*

– பெரியாழ்வார் திருமொழி 2–9–6.

**கோவர்த்தன மலையினைத் தாங்கியும், குடக்கூத்தினை ஆடியும் ஆயர்கள் அனைவரும் மகிழும்படியான சேஷ்டிதங்களை புரிந்த வித்தகனான எம்பெருமான் வேதத்தின் பொருளாக திருவேங்கட மலையிலே சேவை சாதித்தருளுகிறார்.**





# சிந்து பூ மகிழும் வேங்கடம்

திரு.எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

இதோ பிரம்மோத்ஸவம் வந்து விட்டது. ஒவ்வொரு ஆலயங்களிலும் பிரம்மோத்ஸவம் நடந்தாலும், திருமலை பிரம்மோத்ஸவம் என்பது, உலகப்புகழ் பெற்றது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எண்ணங்களுக்கும் எட்டாத இறைவன், வண்ணப் பேரழகிலும், வற்றாத வடிவழகிலும், கண் குளிரக் குளிரக் காட்சி தர இருக்கின்றான். மதுரகவியாழ்வாரும், தொண்டரடிப் பொடியாழ்வாரும் தவிர, அனைத்து ஆழ்வார்களும் இப்பெருமானைப் பாடிப் பரவி இருக்கின்றனர். சுவாமி நம்மாழ்வார், தம்முடைய சரணாகதியைத் திருமலையப்பன் திருவடிகளிலே செய்கிறார். ***"புகல் ஒன்றும் இல்லாத அடியேன் உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே"*** என்பது அவருடைய சரணாகதி.

விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு நிதியாக விளங்குகின்ற எம்பெருமான், இங்கே நம்மாழ்வாருக்குத் திருக்காட்சி தந்து, சரணாகதியை அங்கீகரிக்கிறான். அதன் விளைவாக, உயிர் இருக்கும் வரை, இந்த எம்பெருமான் திருவடிகளிலே, இடைவிடாது தொண்டு (அடிமை) செய்ய வேண்டும் என்று விரும்புகின்றார்.

மூன்றாம் பத்து மூன்றாம் திருமொழி முதல் பாசுரத்திலே இந்த எண்ணம் அவர் மனதில் ஆழங்கால் பட்டு இருந்ததை அற்புதமாக வெளிப்படுத்துகிறது.


***"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்"***

இதில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் அர்த்த பாவம் நிறைந்தது. எல்லாக் காலங்களிலும், எல்லா தேசங்களிலும், எல்லா நிலைகளிலும், ஒரு விநாடியும் விடாது, தொண்டு செய்ய வேண்டும் என்று மனம் பாரிக்கிறார்.

இந்தத் தூய தொண்டுக்கு இலக்கணமாக யாரைச் சொல்லலாம். ஆதிசேஷனைச் சொல்லலாம். அம்சமான இளைய பெருமாளைச் சொல்லலாம். இந்த எண்ணம் தான் வைணவத் தத்துவத்தின் ஆணி வேராகும். சகல சாத்திரங்களின் திரண்ட பொருளாகும். ஆன்மா பெறுகின்ற பேறாகும்.

ஒவ்வொரு ஆத்மாவும் முதலில் தன்னை உணர வேண்டும். அடுத்து தம் தேவையை உணர வேண்டும். தேவை யாரிடம் எங்கே யாரால் நிறைவேறும் என்பதை அறிய வேண்டும். இப்படிப்பட்ட அறிவைப் பெறுவதை வைணவத்தில் அர்த்த பஞ்சக ஞானம் பெறுதல் என்று கூறுவார்கள்.

நம்மாழ்வார், முதலில் தன்னுடைய ஆன்மாவின் இயல்பை உணர்கிறார். அதாவது ஆன்மா என்பது எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதற்கே ஏற்பட்டது. அவருக்கே அடிமையானது. சேஷத்துவமே ஆன்ம லட்சணம் என்பதை முதலில் உணர்ந்து கொள்கின்றார்.



*"இடந்தது பூமி எடுத்தது குன்றம்*
*கடந்தது கஞ்சனை முன் அஞ்ச - கிடந்ததும்*
*நீரோதமாகடலே நின்றதுவும் வேங்கடமே*
*பேரோத வண்ணர் பெரிது."*

– முதற்றிருவந்தாதி – 39.

## வேங்கட கிருஷ்ணன்

**கடலில் மூழ்கிய பூமியினை வராக அவதாரமெடுத்து வெளியே கொணர்ந்து தன் கொம்பின் நுனியிலே தாங்கியும், இந்திரன் கல்மழை பொழிந்து தாக்கியபோது கோவர்த்தன மலையினை பெயர்த்தெடுத்து விரல் நுனியிலே தாங்கி ஆயர்களை இரட்சித்தும், கம்சனை சம்ஹாரம் செய்தும், அவதாரங்கள் அனைத்திற்கும் மூலவித்தாய் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளிய எம்பெருமான் தற்போது கலியுக மாந்தரெல்லாம் உய்வடையும்படி ஸ்ரீவைகுண்டத்திலிருந்து நேரே இறங்கி திருமலையிலே நின்ற திருக்கோலத்தில் சேவை சாதித்துக் கொண்டிருக்கிறார்.**

அவன் தலைவன்; நாம் அடிமை என்பது ஒன்பது வகை உறவில் (நவவித சம்பந்தத்தில்) ஒரு உறவாகச் சொல்வது மரபு.

அவனுக்கும் நமக்குமான உறவை தெரிந்து கொள்வதன் மூலம், நாம் மிகப்பெறும் பேறாக அவனுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பினைப் பெறுகிறோம். இதை உணர்த்தி, ஒவ்வொரு ஆன்மாவையும் உய்வு பெற வைப்பதற்காகவே, பகவான் முதலில் சாஸ்திரங்களைக் கொடுத்தான். வேதாந்தங்களைக் கொடுத்தான். இவை யாவும் பயன்படாது போகவே, தானே அவதாரம் செய்தான்.

ஆழ்வார், இதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறார். "ஐயோ, பகவான் தந்த அத்தனை வழிகளும் நம் விஷயத்தில் பயனற்றுப் போய்விட்டதே" என்பதை நினைத்து, உள்ளம் வெம்மி துடித்த அவர், இனி இவ்வுலகில் வாழ்ந்து பெறுவது என்? என்று நினைக்கின்ற பொழுது, எம்பெருமான் அவருக்குத் திருமலையப்பனாகக் காட்சி தந்து ஆறுதல் சொல்கின்றான். "ஆழ்வீர் கவலைப்படாதீர்!" உமக்காகவே நான் இந்தத் திருமலையில் வந்து தங்கி இருக்கின்றேன். நித்ய சூரிகளுக்கும் கிடைக்காத அருட்காட்சியை கொடுப்பதற்காகவே இங்கு நான் நின்று கொண்டிருக்கிறேன். இது உமக்கு எத்தனை அருமை தெரியுமா... உமக்கு மட்டுமல்ல எல்லா ஆன்மாக்களுக்கும் இது என்னை அடைந்து அனுபவிக்கக் கூடிய எளிய நிலையல்லவா...?"

மிகுந்த வான் போகம்(மோக்ஷம்) பெறலாம் என்று ஆத்மாக்கள் நினைத்தாலும் கூட அதற்குச் சில தடைகள் உண்டு. 1) முதலில் இந்த உடம்போடு (ப்ராக்ருத) அங்கு செல்ல முடியாது. 2) புற உடம்பும் (ஸ்தூல தேகம்) அக உடம்பும் (சூக்கும தேகம்) ஆகிய விரோதிகள் கழிந்து, அற்புதமானதோர் அப்ராக்ருத தேகம் (புனிதமான அழிவற்ற ஒளி உடம்பு) பெற்றுத்தான், நித்ய விபூதியில் (வைகுந்தத்தில்) கைங்கரியம் செய்ய முடியும். 3) அதற்கு வேண்டிய ஞான, பக்தி வைராக்கியங்களைப் பெற்று வைகுந்தம் சேர்ந்து கிட்டி நிற்பது என்பது எல்லா ஆத்மாக்களுக்கும் அரிதான செயல். ஆனால், அதை எண்ணித் துடிப்பவர்க்கு உபாய உபேயமாக (ஆறும் பேறுமாக) நாமே வந்து இங்கு திருமலையில் காட்சி தந்து கொண்டிருக்கிறோம். இங்கு, நித்ய சூரிகள் சோலைகளும், காடுகளும், மரம், செடி, கொடி, மந்தி, யானை, பறவை, உள்ளிட்ட உயிரினங்களுமாக நம்மோடு இருக்கின்றார்கள். இடைவிடாது, நம் நாமத்தைச் சொல்லுகின்றனர். அழிவில்லாத ஆனந்தமான தொண்டினைச் செய்கின்றனர்.

"குயில்கள் கீதத்தை இசைக்கின்றன. நறுமணமிக்க பூக்கள் நம் மீது சொரிந்து ஆனந்தம் அடைகின்றன. அருவிகள் நம்மைத் தழுவி நலம் பெறுகின்றன. மலைகளும் நம்மைச் சுமந்து விண்ணுக்கும் மண்ணுக்குமாய் ஒளிர்ந்து நிற்கின்றன. இங்கே உம் கைங்கர்யத்தை நாம் கொள்ள இருக்கின்றோம்" என்று சொன்ன உடனே ஆழ்வார் மனம் மகிழ்ந்து பாடுகிறார்.

"திருமலையப்பனே சர்வ ரட்சகன்" என உணர்ந்த நம்மாழ்வார், வேங்கட மலையில் தங்கி, திருமலையப்பனுக்கு, ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும் என்று விரும்பிய விருப்பமே மூன்றாம்பத்து மூன்றாம் திருமொழியாக மலர்கிறது.

எம்பெருமானுக்குத் தான் அடிமை செய்ய வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம் அடிமையை

செய்வதற்காகத் தான் தன்னுடைய ஏழு தலைமுறையும் இருந்தது என்பதை ஒரு அருமையான பாசுரத்தால் விளக்குகின்றார்.

*"எந்தை தந்தை தந்தை தந்தைக்கும்*
*முந்தை வானவர் வானவர் கோனொடும்*
*சிந்து பூ மகிழும் திருவேங் கடத்து*
*அந்தமில் புகழ்க் காரெழில் அண்ணலே"*

–திருவாய் 3.3.2.

ஆழ்வார், அவர் தந்தை, தந்தைக்கு தந்தை, என்று ஏழு தலைமுறைகளைக் காட்டுகின்றார். காரணம் திருமலையப்பனோடு உள்ள ஒழிக்க "ஒண்ணா உறவு" தலைமுறை தலைமுறையாக வருகிறது. ஆத்மா உணர வேண்டிய அரிதான மெய்யான உறவு இது.

*"எந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்*
*ஏழ்படிகால் தொடங்கி*
*வந்து வழிவழியாட் செய்கின்றோம்*
*திருவோணத்திருவிழவில்"*

என்று நம்மாழ்வாரின் கருத்தை பெரியாழ்வார் திருப்பல்லாண்டு பாசுரத்தில் வழி மொழிகிறார். இதிலே "திருவோணத்திருவிழா" என்பது மறைமுகமாகத் திருமலையப்பனின் பிரம்மோத்ஸவத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பெரியாழ்வார் திருமலையப்பனிடம் கொண்ட ஈடுபாட்டைத் தான் *"சென்னியோங்கு தன் திருவேங்கடமுடையாய் உலகு தன்னை வாழ நின்ற நம்பி"* என்று கொண்டாடுகிறார். தந்தையான பெரியாழ்வாரின் அடி ஒற்றி, ஆண்டாள் பிராட்டியும்,

*"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தனக்கு*
*உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்*
*மற்றை நம் காமங்கள் மாற்று"*

என்று பாடுகிறாள், காரணம் வேங்கடவற்கு என்னை விதி என்று இருந்தவளல்லவா ஆண்டாள். திருமலை யானை ஏழுமலையான் என்றே சொல்கிறோம். ஏழு மலைகள் யுகம் யுகமாக அவனைத் தாங்கி நிற்கின்றன.

சேஷாத்திரி, அஞ்சனாத்ரி, கருடாத்ரி, என்றெல்லாம் மலைகளுக்குத் திருநாமமிட்ட பின்னணியைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த பிரம்ம உற்சவத்தில் கருட மலை பகவானைச் சுமப்பதை கருட சேவையாக நாம் அனுபவிக்க இருக்கிறோம்.

அஞ்சனாத்ரி மலை சுமப்பதை அனுமத் வாகனமாக நாம் சேவிக்க இருக்கிறோம். சேஷாத்திரி எனப்படும் ஆதிசேஷன் மலை வடிவம் தாங்கி அஞ்சன வண்ணனைச் சுமப்பதை நாம் பெரிய சேஷ வாகனம், சிறிய சேஷ வாகனம் என்று இரண்டு வாகனங்களாகக் காண இருக்கின்றோம். சூரிய, சந்திரர்களும் அவனுடைய அருள் பெற்று ஒளி பெறுவதை, சூரிய பிரபைகளிலும், சந்திர பிரபைகளிலும் காண இருக்கின்றோம். காடுகளில், அவனையே நம்பித் திரிகின்ற யானைகளுக்கும், குதிரைகளுக்கும், அருள் தரும் வள்ளலான அவன் கஜ வாகனத்தின் மீதும், குதிரை வாகனத்தின் மீதும் கோலாகலமாக அமர்ந்து வீதி வலம் காண இருக்கிறான். திருமலையில் இருக்கக்கூடிய சோலைகள், கற்பகச் சோலைகள் என்பதைக் காட்டும் அடையாளமாக, கற்பக விருட்ச வாகனத்தில் காட்சி தர இருக்கின்றான்.

## வேங்கட கிருஷ்ணன்

*"சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்*
*எத்தனை செய்யினும் என்மகன் முகம் நேரொவ்வாய்*
*வித்தகன் வேங்கடவாணன் உன்னை*
*விளிக்கின்ற*
*கைத்தலம் நோவாமே அம்புலீ!*
*கடிதோடிவா"*

– பெரியாழ்வார் திருமொழி 1-4-3

**"தம்மைச் சுற்றி அழகான ஒளி வட்டத்தினை ஏற்படுத்தி அதன் மையத்திலே வெண்சோதிமயமாய் ஒளி வீசிக்கொண்டிருக்கும் சந்திரனே! நீ எத்தனை பிரயத்தனம் செய்தாலும் திருவேங்கடமுடையானின் திருமுகத்தின் சோதியழகினுக்கு ஒப்பாக மாட்டாய். ஜகத் நிர்வாகனான எம்பெருமான் அவதார விசேஷத்தினாலே திருக்கைகள் நீட்டி உன்னை அழைக்கின்றான். திருவேங்கட மலையிலே சேவை சாதிக்கும் எம்பெருமானின் அருமை அறியாமல் நின்று போக்குக்காட்டாமல் அவன் திருக்கைகள் நோவதற்குமுன் ஓடி வந்து அவன் திருக்கைகளில் தவழ்ந்து கொள்" என தாய்ப் பாசுரத்தில் யசோதையாக பெரியாழ்வார் பாசுரமிடுகிறார்.**



இப்படி உலகத்தின் இயற்கையிலிருந்து, ஒவ்வொரு உயிர்களும், அந்த உத்தமனை அண்டி, அவன் மீது கொண்ட அளவற்ற அன்பால், தொண்டு செய்ய பாரிப்பதைத்தான் **''செம்பவள வாயால் திருவேங்கடமென்னும் எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே''** என்று பாடிப்பரவினார் குலசேகர ஆழ்வார். ஒவ்வொரு உயிரையும், அவன் அங்கீகரிக்கிற விதம் தான், பிரம்மோத்ஸவத்தின் வாகனக் காட்சிகளாக விரிகின்றன.





நம்மாழ்வார் இப்பாசுரத்தில் **''வானவர் வானவர் கோனொடும்''** என்று பாடுகின்றார். இதிலே வானவர் என்பது நித்ய சூரிகளையும், வானவர்கோன் என்பது அந்த நித்ய சூரிகளின் தலைவராகவும், எம்பெருமானுடைய சேனாதி பதியாகவும் விளங்கக்கூடிய விஷ்வக்சேனர் என்கிற சேனை முதலிகளைக் குறிக்கும். வைணவத்திலே எந்த பூஜை, வழிபாடு செய்தாலும், முதல் ஆராதனையானது விஷ்வக்சேனருக்கு உரியது. இறைவனை, **''வானின் இளவரசு''** என்று ஆழ்வார் கொண்டாடும்போது, எம்பெருமானின் ஆணை களைப் பெற்று அண்டாதி அண்டங்களுக்கு ஏற்ற சட்டதிட்டங்களையெல்லாம் இயற்றி, மண் நாட்டையும், விண்ணாட்டையும் ஆள்பவர் விஷ்வக்சேனர். ஒவ்வொரு வழிபாட்டிலும், அவரை மஞ்சளிலோ, தர்ப்பை கூர்ச்சத்திலோ, நாம் ஆவாகனம் செய்து ஆராதித்த பின்னே தான், பெருமாளிடம் செல்லுகின் றோம். இந்த மரபைத்தான், பிரம்மோத்ஸவத்தின் முதல் நாள் விஷ்வக்சேனர், வீதி புறப்பாடாக நடத்தி, அவர் அனுமதி பெற்று, பெருமாள் புறப்பாடு நடத்து வதைக் காணலாம். இதை ஆழ்வார் காட்டுகின்றார் **''வானவர் வானவர் கோனொடும்''** என்று.





ஒழிவில் காலமெல்லாம் எம்பெருமானோடு இருப்பதால், அவரோடு சேர்ந்து இந்த பிரம்மோற்சவ காட்சியைக் காணவும், எம்பெருமானுடைய திருவடிவாரத்தில் தஞ்சம் புகும்போது, புருஷகாரம் வேண்டியும், நம்மாழ்வார் சேனை முதலியாராகிய விஷ்வக்சேனரைப் பற்றிக் கொண்டு **''வானவர் வானவர் கோனொடும்''** என்கிறார். இந்தத் திருமலையில் பூக்கள் சிந்திக்கிடப்பதை **''சிந்து பூ மகிழும்''** என்கிறார். பூக்கள் தங்களுக்கு கிடைத்த கைங்கர்யப் பேற்றினை எண்ணி மகிழ்ந்து சிந்துகின்றன. இது ஒரு பொருள். இன்னொரு பொருள் உண்டு. அனுபவிக்கப்படும் பொருள் பூக்கள். அனுபவிப்பவன் திருமலையப் பன். மகிழ்ச்சி அனுபவிப்பவனுக்குரியது. இந்தக் கைங்கர்யத்தை அவன் உகந்து ஏற்றுக் கொள்வதால், பூக்கள் கொத்து கொத்தாகச் சிந்தும் திருவேங்கடம் என்றும் எண்ணலாம்.





திருமலையில் பூக்கும் பூக்கள் (சிந்து பூ) எல்லாம் திருமலையப்பனுக்கே உரியது என்பதால் இன்று வரை யாரும் சொந்த உபயோகத்திற்கு அப்பூக் களைப் பயன்படுத்துவதில்லை. இதிலிருந்து நம்மாழ்வார் நமக்குத் தெளிவு படுத்தும் விஷயம் மூன்று. 1) புஷ்ப கைங்கர்யமே உயர்ந்தது. (சிந்து பூ மகி ழும்). 2) திருமலையப்பனுக்கே அத்தொண்டு உரியது. (வழுவிலா அடிமை) 3) அவனை பிரம்மோற்சவத்தில் சேவிப்பது சிறந்தது. (வானவர் கோனொடும்) இப்பாசுரத்தை மனதில் கொண்டு, சிந்து பூ மகிழும் திருவேங்கடம் சென்று, எதிர் வரும் பிரம்மோற்சவத்தில் நம்மாழ்வார் வழி நின்று, திருமலையப்பனைச் சேவித்து அவர் திருவடிகளில் சரணம் புகுவோம்.

**வாழ்க்கை நெறிகள் தொடரும்...**





க்ஷேத்ர வைபவம்

# திவ்ய திருத்தலம் திருமலை


தெலுங்கு மூலம் : திரு. ஜெ. பாலசுப்பிரமண்யம்
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா


### வினோதமான பெயர் :

திருமலைவாசனுக்கு பல பெயர்கள் உண்டு. அவை அனைத்தும் மிகவும் வினோதமானவையாகும். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அனைத்து பெயர்களையும் பக்தர்கள் பக்தியுடனும் விருப்பத்துடனும் அழைக்கின்றனர்.

அப்பெயர்களில் மிகவும் புகழ் பெற்றது ஏழுமலையான் என்பதுதான். சேஷாத்ரி, வேங்கடாத்ரி, நாராயணாத்ரி, கருடாத்ரி, வ்ருஷபாத்ரி, வ்ருஷாத்ரி, அஞ்சனாத்ரி ஆகிய ஏழு மலைகளில் எழுந்தருளியுள்ளதால் ஏழுமலையான் ஆகினார். அவ்வாறே "வேம்" என்றால் பாவங்கள், "கடம்" என்றால் போக்குபவர் எனவே வேங்கடவன் என்ற சொல்லுக்கு, "பாவங்களைப் போக்குபவர்" என்பது பொருள். மேலும் "திருமலைவாசன்" என்றும் "ஸ்ரீநிவாசன்" என்றும் அழைக்கின்றனர்.

அனைத்து பெயர்களை விட மிகச் சிறப்பான பெயர் ஒன்று உண்டு. அது தான் "ஸ்ரீ–நிவாசன்". அவர் மனைவியின் பெயர் கொண்டு அழைக்கப்படுவது. வக்ஷஸ்தலத்தில் உள்ள "வ்யூக லக்ஷ்மி" பக்தர்களின் கோரிக்கைகளை ஸ்வாமிக்கு சிபாரிசு செய்து தீர்த்து வைப்பார். அந்த லக்ஷ்மி தேவியின் பெயர் தான் ஸ்ரீ. "ஸ்ரீ" ஆன லக்ஷ்மி தேவி ஸ்வாமியின் வக்ஷஸ்தலத்தில் நிவாசிப்பதால் "ஸ்ரீநிவாசன்" என்று அழைக்கப்பெற்றார். பக்தர்கள் ஆகிய நாம் அந்த எம்பெருமானை எப்பெயர் கொண்டு அழைத்தாலும் சரி, நமக்கு அருள்புரிவார். நம் கோரிக்கைகளை நிறைவு செய்து மன நிம்மதியைத் தருவார்.

### விதவிதமான வேண்டுதல்கள் :

பக்தர்களின் பழக்க வழக்கங்கள் வேறு வேறாக இருந்தாலும், அவர்கள் பேசும் மொழி ஒன்றாக இல்லை என்றாலும், அவர்களின் வேண்டுதல்கள் வெவ்வேறு விதமாக இருந்தாலும் அனைத்தையும் விருப்புடன் ஏற்று வேண்டும் வரங்களைத் தந்து அருள்பவர் தான் ஸ்வாமி திருமலைவாசன்.

ஆண், பெண், பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடு இன்றி தம் தலைமுடியை காணிக்கையாகச் செலுத்துகின்றனர். தலைமுடியை பெற்றுக் கொண்டு நம் வாழ்க்கையில் சிக்கல்களை தீர்த்து வைக்கும் எம்பெருமான் தான் திருவேங்கடமுடையான்.

சாதாரண மக்கள் மட்டுமல்ல. அனைத்து மக்களும் ஸ்வாமிக்கு தலைமுடியை காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

விஜய நகர சக்கரவர்த்தி ஸ்ரீகிருஷ்ணராயர் 1513 ஆம் ஆண்டு முதல் 1521 ஆம் ஆண்டு வரை ஏழுமுறை திருமலை யாத்திரை செய்து ஸ்வாமிக்கு நவரத்தினங்கள் பதித்த ஆரங்களையும், பால் அருந்துவதற்காக தங்க கிண்ணங்களையும், மகர தோரணத்தையும், தங்க விமானத்தையும் கொடுத்து தம் வேண்டுதல்களை



## அற்புதத்தைத் தரும் ஆபரணங்கள்

**நம் திருவேங்கடமுடையான் தலை முதல் பாதம் வரை பலவித ஆபரணங்களை அணிந்து கொண்டு பக்தர்களுக்கு வியப்பைத் தருவதுடன் ஆனந்தத்தையும் அளிக்கின்றான்.**

**தங்க பத்மபீடம், தங்க பாத கவசம், தங்கப்பீதாம்பரம், தங்க நந்தகம் எனும் வாள், வைரத்தாலான சூரிய கடாரி, வைகுண்டஹஸ்தம் (வரத ஹஸ்தம்) கடிஹாஸ்தம், தங்கக் கவசங்கள், சாலக்கிராம ஹாரங்கள், சங்கு சக்கர தங்கக்கவசம், லக்ஷ்மி ஹாரம், சஹஸ்ர வைரக்கிரீடம், மகர தோரணம் எனப் பல ஆபரணங்களை அணிந்து கொள்பவர் திருவேங்கடமுடையான்.**

**சிறப்பு நாட்களில் இவைகளை ஸ்வாமிக்கு அலங்கரிப்பர். இவை அனைத்தும் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன? யார் கொடுத்தது? என்றால் இவை அனைத்தும் பக்தர்கள் அளித்தனவே. எத்தனை பக்தர்களுக்கு வரங்களை கொடுத்தாரோ, எத்தனை பக்தர்களுக்கு சந்தான பாக்கியத்தை அளித்தாரோ, எத்தனை பக்தர்களின் பசியை போக்கினாரோ, எத்தனை பக்தர்களுக்கு பார்வையை அளித்தாரோ, கால்களைக் கொடுத்தாரோ, யாருக்குத் தெரியும்.**

**இதோ! அவ்வாறு வேண்டும் வரங்களை அளித்து ஆனந்தத்தை வழங்க, அந்த பக்தர்கள் கொடுத்த காணிக்கைகளே இந்த அபூர்வ ஆபரணங்கள். அந்த ஆபரணங்களை அணிந்து கொண்டு பக்தர்களை பக்தி வெள்ளத்தில் மூழ்க வைக்கின்றார். அந்த எம்பெருமான் எந்த பக்தருக்கு என்ன வரத்தைக் கொடுத்தார் என்பது அவர் ஒருவருக்குத் தான் தெரியும்.**

நிறைவு செய்து கொண்டார். அவ்வாறே அச்சுதராயலு, வெங்கடபதிராயலு ஆகியோரும் தங்களின் வேண்டுதல்களுக்கு எத்தனையோ ஆபரணங்களை ஸ்வாமிக்கு சமர்ப்பித்தனர். இவர்களுக்கு முன்பாக 614 ஆம் ஆண்டில் பல்லவ ராணி சாமவை வெள்ளியால் செய்த ஸ்ரீநிவாசரின் சிறிய விக்ரகத்தை வேண்டுதலாக சமர்ப்பித்து, பிரம்மோத்ஸவத்திற்கு முன் திருவீதி உலாவரச் செய்ய வேண்டும் என்று கூறினாராம்.

துலாபாரம், ஆலய பிரதக்ஷிணம், அங்கப்பிரதக்ஷணம், அகண்ட தீபாராதனைகள்... என ஸ்ரீநிவாசருக்கு சமர்ப்பிக்கப்படும் வேண்டுதல்கள் எத்தனையோ யாரும் அறியார்.



## ஸ்வாமிக்கு நிவேதனம்

**ஆனந்த நிலையன், அலங்காரப்பிரியன்! அதை விட சிறந்த ஆகாரப்பிரியனும் ஆவார். எத்தனையோ வகை பலகாரங்களான லட்டு, வடை, தோசை, அப்பம், க்ஷீரான்னம், பாயசம், கதம்ப சாதம், மிளஹோரை, பொங்கல், சீரான்னம், கேசரி போன்ற பிரசாதங்களை ஸ்வாமிக்கு நாள்தோறும் நிவேதனம் செய்வர். ஸ்வாமி நாள்தோறும் மண்வட்டிலிலேயே (உடைந்த மண்பானை) உண்பார். ஒருமுறை உணவு உண்டபின் அந்த வட்டிலை எறிந்து விடுவர். மறுபடியும் உணவு உண்ண புதிய வட்டிலையே உபயோகிப்பர். விசித்திரமாக இருக்கின்றதல்லவா! அவை என்னவென்றால் மண்ணால் தயாரித்த "மட்பாண்டம்", அதுவும் பாதியாக உடைந்த மண்பானை. இதனை ஓடு என்பர் (திருஓடு). நாள்தோறும் திருவோட்டில் மட்டுமே உணவை உட்கொள்வார். இது ஓர் ஆச்சரியம் அல்லவா! இவ்வாறு எதனை உட்கொண்டாலும் அதனை பக்தர்களுக்கே வழங்குகிறார். அந்தப் பிரசாதத்தை பக்தர்கள் உட்கொண்டு தம் கோரிக்கைகளை நிறைவு செய்து கொள் கின்றனர். முழுமையான ஆரோக்கியத்தை அடைகின்றனர்.**

### விசித்திரமான வரங்கள் -ஆனந்தமான லீலைகள்:

*"கொண்டல ராயன் வேண்டும் வரங்களை அள்ளித் தரும் ராயன்"* என்று ஒரு பாடலில் அன்னமய்யா புகழ்ந்து பாடியுள்ளார்.

சிலருக்கு கண்பார்வையைக் கொடுத்தார். நடக்க சக்தியைக் கொடுத்தார். வேலை செய்ய கைகளைக் கொடுத்தார். சிலருக்கு பேசும் சக்தியைக்கொடுத்தார். சிலருக்கு உயிர் பிச்சைக் கொடுத்தார். உயிர் கொடுத்தார். வயிரார உண்ண உணவைக் கொடுத்தார். சிலருக்கு சந்தான பாக்கியத்தை கொடுத்தார்.

*"ஸ்ரீநிவாசா! ஹூக்த்யாகிம்? பக்த சர்வா நாசனே*
*சர்வார்த்த புராணே சாபி த்வத்ஸமோன்டே*
*ந குத்ரசித்"*


பக்தர்களுக்கு வேண்டும் வரங்களை எல்லாம் அள்ளிக் கொடுக்கும் ஸ்வாமி நம் வேங்கடவன். அவர் போல் (பிரம்மாண்டத்தில்) உலகத்தில் எங்கும் யாரும் இல்லை. இனி எங்கும் இருக்கவும் மாட்டார்கள் என புகழப்படுபவர் திருமலைவாசன்.

திருமலையானது 7 மலைகளை கொண்டதால் "ஏழுமலை" என்றும் "சப்தகிரி" என்றும் அழைக்கப்பட்டது. ஏழு பெயர்கள் மட்டுமல்லாமல் இன்னும் எத்தனையோ பெயர்கள் உள்ளன. அவ்வாறே இந்த புண்ணிய தலத்தில் தரிசனம் அளிக்கும் திருவேங்கடமுடையானுக்கு ஏழுமலையான், சேஷாசலபதி, ஸ்ரீவேங்கடபதி, அஞ்சனாத்ரீஸ்வரர், வ்ருஷபாத்ரீஸ்வரர், திருமலேசர், ஸ்ரீநிவாசர் என்றும் பல பெயர்கள் வழங்கப்பட்டன.

பக்தர்களுக்காக வைகுண்டத்தில் இருந்து இறங்கி வந்த திருவேங்கடமுடையானை நினைத்தால் போதும்! பாவங்கள் எல்லாம் அழிந்து போகும். அந்த ஸ்வாமியை வணங்கினால் போதும் நம் வேண்டுதல்கள் எல்லாம் நிறைவேறும். அந்த தேவாதிதேவனை பார்த்தால் போதும். முக்தி கிடைக்கும். அப்படிப்பட்ட ஸ்வாமியை நித்யமும் வணங்குவோம்! வழிபடுவோம்!

*ஸ்மரணா த்ஸர்வபாபக்னம் ஸ்தவனா திஷ்டவர்ஷிணம்*
*தர்சனா ந்முக்தி தம் சேஷம் ஸ்ரீநிவாசம் பவேநிசம்*

திருமலை வைபவம் தொடரும்...



திருவேங்கடமுடையான் பல இடங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் புரிந்து வருகிறார். அத்தகைய சிறப்பு வாய்ந்த இடங்களில் ஒன்றாக கருதப்படும் ஆலயம் தொண்டமநாட்டில் அமைந்துள்ளது. தொண்டைமான் சக்கரவர்த்தியின் கோரிக்கைபடி ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஸ்ரீதேவி பூதேவியுடன் இங்கு எழுந்தருளியுள்ளார். ஆகாச ராஜன் ஆண்டு வந்த நாராயணவன ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியை தொண்டைமான் ஆண்டு வந்தான். ஆதலால் இப்பகுதியை தொண்டை மண்டலம் என்றும் அழைத்தனர். விஜய நகர அரசர்கள் காலம் வரை அப்பெயராலேயே புகழ் பெற்று விளங்கியது. இவ்வாலயம் திருப்பதி–ஸ்ரீகாளஹஸ்தி மார்க்கத்தில் திருப்பதியிலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்திலும், ஸ்ரீகாளஹஸ்தியிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

**தலப்புராணம் :**

தொண்டைமான் சக்கரவர்த்தி அரசாட்சி செய்த இப்பகுதியில் ஸ்வாமி கொலுவீற்று இருப்பதன் பின்னணியில் எத்தனையோ கதைகள் உள்ளன. திருமலை ஸ்ரீநிவாசர் மேல் இவ்வரசருக்கு மிகுந்த பக்தியுண்டு. இவர் நாள்தோறும் சுரங்கப்பாதையின் வழியாக திருமலையை அடைந்து ஸ்வாமியை வழிபட்ட பின்னரே தம் பணியைத் தொடங்குவாராம். அவ்வாறு ஒரு நாள் ஸ்வாமி ஸ்ரீதேவி பூதேவிகளுடன் கூடியுள்ள சமயத்தில் ஆலயம் உள்ளே சென்று விட்டார். அப்பொழுது தேவியர்கள் தொண்டைமானைப் பார்த்தவுடன் ஒருவர் தங்கக் கிணற்றிற்குள்ளும் மற்றொருவர் வக்ஷஸ்தலத்திலும் சென்று மறைந்து கொண்டனர். அப்பொழுது ஸ்வாமிக்கு கோபம் வர, இனிமேல் நீ வராதே நானே உம்மிடத்திற்கு வருகிறேன் என்று கூறியதாக ஒரு கதை உண்டு. எனக்கு வயதாகி விட்டது. திருமலைக்கு இனி என்னால்

# ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம்– தொண்டமநாடு

வரமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது என்று ஸ்வாமியிடம் தொண்டைமான் கூற, ஸ்வாமியே இங்கு வந்து கொலுவீற்று நாள்தோறும் தரிசனமளித்தார் என்பது இரண்டாவது கதை. ஒரு முறை பிராம்மணர் ஒருவர் காசி யாத்திரைக்கு செல்லும் போது, தொண்டைமான் சக்கரவர்த்தியிடம் வந்து, தான் காசி யாத்திரைக்கு செல்வதாகவும் தன் மனைவி மக்களை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். தொண்டைமானும் சரி என்றார். தொண்டைமானோ அவர்களை ஒரு அறையில் வைத்து உணவு கொடுக்க மறந்து அவர்களை பாதுகாக்காமல் மறந்து விட, அவர்களும் இறந்து விட்டனர். சில நாட்களுக்குப் பிறகு பிராம்மணர் திரும்பி வந்தார். அவர் தொண்டைமானிடம் தன் மனைவி மக்களை



தெலுங்கு மூலம் : திருமதி. உத்தரபல்குணி
தமிழாக்கம் : திரு. கே.வி. கல்யாண்

தன்னுடன் அனுப்புங்கள் என்று கேட்டார். அப்பொழுது தான் அவர்களை முழுமையாக மறந்து விட்ட நினைவு அவருக்கு வந்தது. அந்த பிராம்மணரிடம் உன் மனைவி மக்கள் ஸ்வாமியின் தரிசனத்திற்காக திருமலை சென்றுள் ளனர், நாளை வருவர். நாளை வந்து அழைத்து செல்ல வும் என்று கூறினார். அதன் பின் ஸ்வாமியிடம் சென்று அவர்களை எப்படியேனும் உயிர் பிழைக்க வையுங்கள் என்று வேண்டினார். ஸ்வாமியும் அவர்களுக்கு உயிரைத் தந்தார். அப்பொழுது முதல் ஸ்வாமி தொண்டைமான் சக்கரவர்த்தியுடன் பேசுவதை மறுத்து விட்டார். இது ஒரு கதை. காரணங்கள் பல இருந்தாலும் ஸ்வாமி தொண்டை மான் உள்ள இடத்திற்கு வருகைபுரிந்து பூஜைகளைப் பெற்று கொண்டு இருக்கிறார். ஸ்வாமிக்கும், தொண்டை மான் சக்கரவர்த்திக்கும் உள்ள சம்பந்தம் என்ன? என் பதை இப்பொழுது அறிந்து கொள்ளலாம்.

### தொண்டைமானின் முந்தைய பிறவி வரலாறு:

முற்காலத்தில் கோபிநாதன் என்ற வைகானச மஹாமுனிவர் ஸ்ரீகிருஷ்ணர் மேல் மிகுந்த பக்தி கொண்டி ருந்தார். ஸ்ரீகிருஷ்ணரை கண்ணாரக் காண வேண்டும் என்று உணவு உறக்கமின்றி தவம் புரிந்தார். அவர் தவத்தைக் கண்டு மனம் மகிழ்ந்த மஹாவிஷ்ணு அவர் முன்பாகத் தோன்றி, உமக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்க, அவர், நான் ஸ்ரீகிருஷ்ணரை கண்ணாரக் கண்டு மகிழ வேண்டும் என்று கூறினார். அதற்கு மஹா விஷ்ணு, தற்போது சேஷாத்ரி மலையில் ஸ்ரீகிருஷ்ணரே ஸ்ரீநிவாசராக ஒரு புற்றில் அவதரித்துள்ளார். அவரை சேவித்து மகிழ்வாயாக என்று கூறினார்.

கோபிநாதன் மனம் மகிழ்ந்து ஸ்வாமியைக் காண புற்றின் அருகே சென்றார். அந்த ஸ்வாமியை மலர்களால் பூஜித்தால் ஸ்வாமி எவ்வளவோ மகிழ்ச்சி கொள்வார் என்று நினைத்து, தன் சேவகனான ரங்க தாசனிடம் ஒரு பூந்தோட்டத்தை உருவாக்கக் கூறினார். ரங்கதாசனும் முதலில் ஒரு கிணறு வெட்டினார். அதற்கு பூங்கிணறு என்று பெயர் சூட்டினார். பிறகு பெரிய நந்தவனத்தை உருவாக்கி நாள்தோறும் பல வண்ண மலர்களைக் கொய்து கோபிநாதனிடம் தந்தார்.

இவ்வாறு இருக்கும்போது, ஒரு நாள் ஒரு கந்தர்வ ராஜன் தன் மனைவியுடன் பூங்கிணற்றிற்கு அருகில் உள்ள ஸ்வாமி புஷ்கரணியில் நீராடிக் கொண்டிருந்தார். ஸ்வாமி சேவைக்காக மலர் கொய்ய வந்த ரங்கதாசர், அவர்கள் நீராடுவதைக் கண்டு மெய்மறந்து நின்று விட்டார். ஸ்வாமியின் பூஜைக்கு நேரமாகி விட்டது என் பதைக் கூட மறந்து விட்டார். காலத்தாமதமாக பூக்களைக் கொய்து கொண்டு சென்ற ரங்கதாசரைக் கண்டு கோபி நாதன், ஏன் தாமதம்? என்று வினவ அங்கே நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறி, தன்னை மன்னிக்குமாறு வேண்டி னான்.

அப்பொழுது ஸ்ரீநிவாசர் தோன்றி ஓ ரங்க தாசரே, கவலைப்படவேண்டாம். நீ என் மாயமோகத்தால் கந்தர் வர்களின் இன்பத்தில் மூழ்கி விட்டாய். இதில் உன் தவறு ஏதும் இல்லை. என்னை சேவிக்கும் பாக்கியத்தை உனக்குத் தருகிறேன். ஆகையால் நீ இந்த சரீரத்தை விடுத்து நாராயண புரத்தை ஆட்சி புரியும் சுதர்ம ராஜா குமாரனாக “தொண்டைமான்” என்ற பெயரில் பிறந்து ராஜ போகங்களை அனுபவித்து என்னை வழிபடுவாயாக என்று கூறி மறைந்தார். அந்த ரங்கதாசரே அடுத்த பிறவி யில் ஆகாச ராஜா தம்பியான தொண்டைமானாகப் பிறந்தார்.

### தொண்டைமானின் முதுமை :

திருப்பதிக்கு அருகில் நாராயணபுரத்தை தலை நக ராகக் கொண்டு சுதர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவரின் மூத்தமகன் பெயர் ஆகாசராஜன். சுதர்மன் ஒரு நாள் வேட்டைக்குச் செல்லும் போது ஓர் நாகக் கன்னிகையை கந்தர்வ மணம் செய்துக் கொண்டார். இவர்களுக்கு பிறந்த மகனே “தொண்டைமான்”. சில நாட்களுக்குப் பின் சுதர்மன் ஆகாசராஜாவிற்கு முடி சூட்டி, தம்பியான தொண்டைமானுக்கு அனைத்து கடமைகளையும் ஒப்படைத்து விட்டு இயற்கை எய்தி னார். ஆகாச ராஜனின் மனைவி தரணி தேவி. அந்த தம்பதியினர் தம் நாட்டு மக்களை தன் வயிற்றில் பிறந்த மக்களைப் போன்று நினைத்து அரசாட்சி புரிந்தனர்.

### பத்மாவதி ஸ்ரீநிவாசரின் திருமணம் :

ஆகாஷ ராஜன், தரணி தேவியருக்கு நீண்ட காலம் குழந்தைகள் இல்லை. அதன் பின் தெய்வ அருளால் ஓர் பெண் குழந்தை பூமியில் கிடைத்தது. அந்த குழந்தைக்கு பத்மாவதி என்று பெயர் சூட்டினர். பின் தரணி தேவிக்கு ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. அந்த குழந்தையின் பெயர் வசுதாசன்.

ஆகாசராஜன் தன் மகளான பத்மாவதிக்கு வேங்கடா சலத்தில் வாசம் செய்யும் ஸ்ரீநிவாசருக்கு மணம் முடித்து

வைத்தார். புது மணத்தம்பதிகள் ஆறு மாத காலம் மலை ஏறக்கூடாது என்பதால் ஸ்வர்ணமுகி நதிக்கரையில் அகத்தியர் ஆசிரமத்தில் தங்கி இருந்தனர். ஒரு நாள் ஆகாசராஜன் மரணப்படுக்கையில் உள்ளார் என்பதை அறிந்து, நாராயணபுரத்திற்கு இருவரும் வந்தனர். அப்பொழுது ஆகாச ராஜன் ஸ்ரீஸ்ரீநிவாசரிடம் என் தம்பியையும், மகனையும் தங்களிடம் ஒப்படைக்கிறேன். அவர்களை கவனமுடன் பார்த்துக் கொள்ளவும் என்று கூறி உயிர் துறந்தார். அதன் பின் பத்மாவதி ஸ்ரீநிவாசர் அரசுரிமையை தொண்டைமானுக்கும் வசுதாசனுக்கும் ஒப்படைத்து விட்டு அகத்திய ஆசிரமத்திற்குச் சென்று விட்டனர்.

ஆகாச ராஜனின் மரணத்திற்குப் பின் நாட்டை ஆளும் பொறுப்பிற்காக தொண்டைமானும், வசுதாசனும் சண்டையிட்டனர். இருவரும் ஸ்ரீநிவாசரிடம் சென்று தமக்கு உதவி புரியுமாறு முறையிட்டனர். அப்பொழுது ஸ்ரீநிவாசர் தொண்டைமானிற்கு சங்கு சக்கரங்களைக் கொடுத்து, வசுதாசன் பக்கம் இருந்து போர் புரிந்தார். இதனையறிந்த பத்மாவதி தேவி அங்கு வந்து இருவருக்கும் அரசை சமமாகப் பிரித்துக் கொடுத்தார். அதாவது தொண்டைமானுக்கு துண்டீர மண்டலத்தையும், வசுதாசனுக்கு நாராயணபுரத்தையும் கொடுத்தார்.

ஒருநாள் தொண்டைமான் ஸ்ரீநிவாசரை தரிசிக்க வந்தபோது, தனக்கொரு ஆலயத்தை நிர்மாணிக்கும்படி ஸ்வாமி கேட்டார். ஸ்வாமியின் கோரிக்கையின்படி ஸ்வர்ண கலசத்தால் ஒளிரக்கூடிய ஆலயத்தை நிர்மாணம் செய்தார். அந்த ஆலயத்தைச் சுற்றி மூன்று பிராகாரங்களுடன் கூடிய மூன்று பிரதக்ஷண மார்க்கங்கள், மண்டபங்கள், மடப்பள்ளி, தங்கக்கிணறு ஆகியவற்றை கட்டினார். அந்த ஆலயத்தை ஆனந்த நிலையம் என்பர். ஆனந்த நிலைய விமானத்தில் ஸ்ரீநிவாச மூர்த்தியை பிரதிஷ்டை செய்தார். இவரை விமான வேங்கடேஸ்வர ஸ்வாமி என்று கூறுவர்.

தொண்டைமான் ஸ்ரீநிவாசருக்கு நாள்தோறும் தங்கத்தாமரைகளால் பூஜை செய்வார். இவ்வாறு பூஜை செய்து கொண்டு இருக்கும்போது ஒரு நாள் மண்ணால் செய்யப்பட்ட மலர் அவர் கண்களுக்குப்பட்டது. அந்த மண் மலரைக் கண்ட தொண்டைமான் இந்த மலரை

## வேங்கட விளக்கு

*"மத்த நன்னறுமலர் முருக்கமலர் கொண்டு முப்போதும் உன்னடி வணங்கி*
*தத்துவமியென்றுநெஞ்செரிந்து வாசகத் தழித்துன்னை வைதிடாமே*
*கொத்தலர் பூங்கணைதொடுத்துக் கொண்டு கோவிந்தன் என்பதோர் பேரெழுதி*
*வித்தகன் வேங்கட வாணனென்னும் விளக்கினில் புகவென்னை*
*விதிக்கிற்றியே."*

– நாச்சியார் திருமொழி 1–1–3.





**அழகிய ஊமத்தை மலர்களாலும், முருக்க மலர்களாலும் முக்காலமும் எம்பெருமான் திருவடிகளை அர்ச்சனை செய்து வணங்கும் ஆண்டாளுக்கு அருளாமல் வாளாவிருந்தால் பெண்ணின் வருத்தமறியாதவன் என நெஞ்சமெல்லாம் எரியும்படி சுடு சொற்களை பேசும்படியாகிவிடுமே. அவ்வாரின்றிக்கே கொத்தான மலர்களையுடைய அம்புகளை எறிந்தவாறே, கோவிந்த நாமத்தினை நெஞ்சினிலே தரித்தவண்ணம் பரம்பொருள் விளக்காய் வேங்கட மலையிலே பிரகாசிக்கும் வித்தகனாய் எம்பெருமானின் திருமேனி ஒளிச்சோதியிலே சேர்க்கும் நியமனத்தினை மன்மதனிடம் ஆண்டாள் நாச்சியார் பிரார்த்திக்கிறாள்.**



## வேங்கட வாணன்

*"கட்டெழில் சோலை நல்வேங்கடவாணனை*
*கட்டெழில் தென்குருகூர்ச் சடகோபன் சொல்*
*கட்டெழில் ஆயிரத்திப்பத்தும் வல்லவர்*
*கட்டெழில் வானவர் போக முண்பாரே."*

– திருவாய்மொழி 6–6–11.



**அழகான சோலைகள் சூழ்ந்த வேங்கடமலையிலே சேவை சாதித்தருளும் திருவேங்கடவன் விஷயமாக அழகிய தென் குருகூரில் அவதாரம் செய்த ஸ்வாமி நம்மாழ்வாரின் அழகிய திருவாய் மொழி பாசுரங்களில் ஆயிரத்தில் இப்பத்து பாசுரங்களை பரம பக்தியுடன் சேவிக்கும் பாகவதோத்தமர்கள் மிகவும் அழகியதான ஸ்ரீவைகுண்டப் புருஷார்த்தம் பெற்றவர்களாய் எம்பெருமானின் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் அடையப் பெறுவார்கள் என திருவேங்கடவனின் வாத்சல்ய குணத்தினைப் போற்றித் துதி செய்து தலைக்கட்டுகிறார் ஸ்வாமி நம்மாழ்வார்.**

**அவதாரங்களிலே காணக்கிடக்கும் அனைத்து ஸ்வரூப ரூப குண விசேஷங்கள் திருவேங்கட மலையிலே காட்டி கொண்டு அடியார்களின் அனைத்து பிரார்த்தனைகளையும் நிறைவேற்றி வைத்து அடியார்களை நாள்தோறும் பெருக்கியவண்ணம் திருமலையில் சேவைசாதிக்கும் திருவேங்கடவன் வித்தகன்தானே.**

இதுவரை வந்த பெட்டிச் செய்திகளை தொகுத்து ஓர் கட்டுரையாக அளித்தவர்
திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி.

ஸ்வாமிக்கு சமர்பித்தது யார் என்று கோபத்துடன் கேட்டார். அதற்கு ஸ்வாமி "குருவநம்பி" என்ற குயவர் மிகுந்த பக்தி கொண்டு நாள் தோறும் மண்பாண்டங் களை எல்லாம் செய்து முடித்தபின் மீதமுள்ள மண்ணில் இந்த மலரை எனக்கு செய்து சமர்ப்பிக்கின்றான் என்று கூறினார். மிகுந்த பக்தி கொண்ட அந்த பக்தனைப் பார்த்து தன் தவற்றை உணர்ந்த தொண்டைமான் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான்.

ஸ்வாமி தொண்டைமானிடம் கூறியபடி ஸ்ரீதேவி பூதேவியருடன் விக்ரக வடிவில் இந்த தொண்டமநாட்டில் தோன்றினாராம். அந்த வேங்கடவனை "வீட்டில் பிறந்த பெருமாள்" என்று அழைத்தார். ஸ்வாமி ஸ்ரீதேவி பூதேவி யருடன் ஆஸன மூர்த்தியாகக் காட்சி தந்தார். அபய ஹஸ் தத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கிறார். தொண்டை மான், தொண்டமநாட்டில் ஸ்வாமிக்கு ஆலயம் நிர்மா ணித்து, அதைச் சுற்றிக் கோட்டையைக் கட்டுவித்தார்.

### ஆலய அமைப்பு :

தொண்டமநாட்டில் ஸ்வாமி ஆலயத்தில் கரு வறைக்கு எதிராக உள்ள அந்தராளத்தில் தொண்டை மானின் விக்ரகம் தரிசனமளிக்கிறது. அந்தராளத்தில் லக்ஷ்மி நாராயணருடைய விக்ரகமும் உள்ளது. முக மண்டபத்தில் பகவத் ராமாநுஜர், ஸ்ரீராமர், ஆஞ்சனேய ஸ்வாமி விக்ரகங்களும் உள்ளன. இந்த ஆலய விமான கட்டிடம் திருமலையில் உள்ள ஆனந்த நிலைய விமானத் தைப் போல் உள்ளது. இந்த இரண்டையும் ஒருவரே நிர்மானித்தார் என்பதை இதன் மூலம் நாம் அறிய முடி யும். இங்கு ஸ்வாமி அமர்ந்த கோலத்தில் சுமார் பத்து அடி உயரத்தில் உள்ளார். இங்கு ஸ்வாமிக்கு அர்ச் சனை, பூஜைகள், உத்சவங்கள் எல்லாம் கண் கொள் ளாக் காட்சியாக மிக அருமையாக நடைபெற்று வரு கின்றன. பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் இவ்விடத் திற்கு வருகை புரிந்து ஸ்வாமியை வழிபட்டு அருள் பெறுகின்றனர். திருமலை திருப்பதி தேவஸ்தானம் 2008 ஆம் ஆண்டு இந்த ஆலயத்தை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பராமரித்து வருகின்றது.


பக்தர்கள் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின்
பல்வேறு சேவைகள், விவரங்கள் குறித்து அறிய
கீழ்காணும் இலவச எண்களில் தொடர்பு கொள்ளவும்.
**1800-425-4141 / 1800-425-111111**



# திருமலையில் "கருட" சேவை

செல்வன். சி.வாசுதேவா, திருப்பதி

புரட்டாசி மாதம் என்றாலே உடனே நம் நினைவுக்கு வருவது "திருமலை". அந்த புனிதமான புரட்டாசி மாதத்தில்தான் பிரம்மாண்ட நாயகனான "திருமலையப்ப ஸ்வாமி"க்கு நடைபெறும் பிரம்மோத்ஸவம் மிகவும் சிறப்புடையது. அந்த பிரம் மோத்ஸவத்திற்கெல்லாம் சிகரமாக அமைவது திருமலையப்ப ஸ்வாமிக்கு ஐந்தாம் நாள் இரவு நடைபெறுகின்ற "கருட சேவை" ஆகும். இந்த பிரம்மோத்ஸவம் "கருடக்கொடி" ஏற்றத்துடனே துவங்குகிறது. விஷ்ணுவின் வாகனமான கருடன், அந்த கருடக் கொடியின் வாயிலாக அனைத்து தேவர்களையும் பிரம்மோத்ஸவத்திற்கு அழைப்பதாக ஐதீகம். பிரம்மோத்ஸவத்தின் இறுதி நாளும் கருடக்கொடி இறக்கத்துடன் இனிதே நிறைவடைகிறது. இதன் நடுவில் பிரம்மோத்ஸவத்தின் ஐந்தாம் நாளன்று இரவு திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெறும் சேவையே "கருட சேவை" என்கிற கருடோத்ஸவம். இதனை காண்பதற்கு பல்வேறு இடங்களிலிருந்து லக்ஷக்கணக்கில் மக்கள் கூட்டம் கூட்டமாக திருமலையில் கூடுவர்.

ஏழு மலைகளில் "கருடாத்ரி" மலையும் ஒன்று. அதுமட்டுமல்லாமல் இந்த திருமலையில் ஒரு பகுதி "கருட வடிவில்" அமைந் திருப்பதையும் காணலாம். இந்த கருட சேவையில் திருமலையப்ப ஸ்வாமியை மூலமூர்த்திக்கு அணிவிக்கும் சிறப்பு ஆபரணங்களான "மகர கண்டி", "லக்ஷ்மி ஹாரம்" மற்றும் "சஹஸ்ர நாம மாலை" போன்றவற்றால் அலங்கரிப்பர். சூடிக் கொடுத்த நாச்சியாரான ஆண்டாள் என்கிற கோதா தேவி அவதரித்த ஊரான ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்து கொண்டு வரப்படும் அழகிய பூமாலையையும் திருமலையப்ப ஸ்வாமிக்கு அலங்கரிப்பர். சென்னையிலிருந்து "திருப்பதி குடை" என்ற பெயரில் ஒன்பது குடைகள் மற்றும் மங்களப்பொருட்களை பக்தர்கள் நடையாக நடந்து, திருமலைக்கு கொண்டு வந்து, திருமலையப்ப ஸ்வாமிக்கு சமர்ப்பிப்பர். ஆந்திர மாநில அரசு சார்பில் திருமலையப்ப ஸ்வாமிக்கு சிறப்பு வாய்ந்த பட்டுவஸ்திரங்களையும் சமர்ப்பிப்பது வழக்கம்.

இவ்வாறாக பிரம்மோத்ஸவ ஐந்தாம் நாள் இரவு "கருட சேவை"யில் திருமலையப்ப ஸ்வாமியின் திருப்பாதங்கள் கருடனின் திருக்கரங்களில் பதியுமாறு வைத்து, சூடி கொடுத்த நாச்சியாரின் திருமாலையுடனும், மகர கண்டி, சஹஸ்ர நாம மாலை மற்றும் லக்ஷ்மி ஹாரத்துடனும், புத்தம் புதிய பட்டு வஸ்திரங்களுடனும், புதிய குடைகளுடனும் திருமலை திருமாடவீதிகளில் திருவுலா வந்து பக்தர்கள் கேட்கும் வரங்களை வாரி வழங்கும் திருமலையப்ப ஸ்வாமியை வார்த்தைகளால் வருணிக்க இயலாத ஒன்று. அதனை நாம் நேரில் சென்று கண்டால் தான் கருடசேவையின் சிறப்பை அறிய இயலும். வாருங்கள் கருட சேவையை காணலாம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்

## 30-09-2019 முதல் 08-10-2019 வரை

## பக்தர்களும் கலைக்குழுவினரும்



30-09-2019 திங்கள்
இரவு : பெரிய சேஷ வாகனம்



01-10-2019 செவ்வாய்
பகல் : சிறிய சேஷ வாகனம்



01-10-2019 செவ்வாய்
இரவு : ஹம்ச வாகனம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்

## 30-09-2019 முதல் 08-10-2019 வரை

## பக்தர்களும் கலைக்குழுவினரும்



02-10-2019 புதன்
பகல் : சிம்ம வாகனம்



02-10-2019 புதன்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்



03-10-2019 வியாழன்
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்



03-10-2019 வியாழன்
இரவு : சர்வபூபால வாகனம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்

## 30-09-2019 முதல் 08-10-2019 வரை

## பக்தர்களும் கலைக்குழுவினரும்



04-10-2019 வெள்ளி
இரவு : கருட வாகனம்

05-10-2019 சனி
பகல் : ஹனுமத் வாகனம்

05-10-2019 சனி
இரவு : யானை வாகனம்

04-10-2019 வெள்ளி
பகல் : பல்லக்கில்
மோகினி அவதாரம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்

## 30-09-2019 முதல் 08-10-2019 வரை



06-10-2019 ஞாயிறு
பகல் : சூரியப்பிரபை வாகனம்



06-10-2019 ஞாயிறு
இரவு : சந்திரப்பிரபை வாகனம்



07-10-2019 திங்கள்
இரவு : குதிரை வாகனம்

## பக்தர்களும் கலைக்குழுவினரும்



கலியுக ஆரம்பத்தில் ஜம்புத்தீவீப மண்டலம் பாரத நாட்டில் கங்கை நதிக்கு தெற்கே 200 யோஜனை தூரத்தில், கிழக்கு கடற்கரைக்கு மேற்கு 5 யோஜனை தூரத்தில், நாராயண மலை மீது ஸ்வாமி புஷ்கரிணிக்கு மேற்கில் கன்யா பாத்ரபத(புரட்டாசி) மாதம் திரு வோணம் நட்சத்திரத்தில் சித்த யோக சுப நேரத்தில் தேவதைகள் பூஜிக்கப்பட்ட, உலகை காப்பவரும் பரம புருடனுமான ஸ்ரீஸ்ரீநிவாசர் அவதரித்தார் என பத்ம புராணம் கூறுகிறது.

அப்படி அவதரித்த ஸ்வாமியை பிரம்மாதி தேவர்கள் தரிசித்தனர். அந்த சமயத்தில் ஸ்வாமிக்கு உற்சவம் வைபவமாக நடத்த வேண்டும் என்று கோரினர். அதற்கு ஸ்வாமியும் ஒப்புக்கொண்டார். அதன்படி பிரம்மா ஒன்பது நாட்கள் உற்சவங்களை நடத்தவும், வாகன சேவைகளில் ஸ்வாமியை திருவீதி உலா வருவதற்கு ஏற்பாடுகளையும் செய்தார். அதன்படி முதன் முதலாக உற்சவத்தை, துவஜாரோஹணம் நிகழ்ச்சியுடன் ஆரம்பித்து, கருடப்படக் கொடியை ஏற்றி தேவதைகளுக்கு அழைப்பு விடுத்து உற்சவத்திற்கு ஏற்பாடு செய்தார். அதற்கு முன்பாக இந்திராதி திக்பாலகர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் கூட அஷ்டதிக் பாலகர்களாக பெயர் பெற்றவர்கள்.

இவர்கள் பிரம்மோத்சவத்திற்கு வந்து, திருமாட வீதிகளில் உள்ள எட்டு திசைகளிலும் கொலுவீற்றிருந்து ஸ்வாமி வாகனங்களில் திருமாட வீதிகளில் உலா வரும்போது அவருக்கு திருஷ்டி ஏற்படாமலும், துஷ்ட சக்திகள் அருகில் வராமல் இருக்கவும், பிரம்மோத்ஸவங்கள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதில் முக்கியத்துவம் வகிக்கின்றனர். பிரம்மோத்ஸவ சமயத்தில் பிரம்மா, குபேரன் சமர்ப்பித்த திவ்யாபரணங்களையே ஸ்வாமிக்கு அலங்கரிக்கிறார்களாம்.

அப்படி பிரம்மோத்சவத்தில் மிகவும் முக்கியத்துவம் பெறும் இந்த அஷ்டதிக் பாலகர்கள் யார்? அவர்களுடைய சிறப்புகள் என்ன என்பதை இந்த பிரம்மோத்சவ சமயத்தில் தெரிந்து கொள்வோம்.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு திசைகளோடு ஆக்னேயம், நைருதி, வாயு, ஈசான்னியம் என எட்டு திசைகள் சேர்த்து அஷ்ட திசைகள் என்பர்.






## அஷ்டதிக்பாலகர்களின் வரலாறு :

### 1. இந்திரன் :

இந்திரன் தேவர்களுக்கு அரசனாக வேதங்களில் புகழப்பட்டான். இவர் கிழக்கு திசைக்கு அதிபதி. இவர் அதிதியின் குமாரன். மனைவியின் பெயர் சசிதேவி. ஆயுதம் வஜ்ராயுதம். வாகனம் – ஐராவதம். வசிப்பது அமராவதி பட்டணம். பாற்கடலில் பிறந்த ஐராவதமே இந்த யானை. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த யுத்தத்தில் அசுரர்களை தோற் கடித்து தேவர்கள் வெற்றி பெற்றது தங்களுக்கு கிடைத்த பெரும் பெருமை என்று தேவர்கள் பாவித்தனர்.

அந்த வேளையில் அவர்களுக்கு சூன்யபிரதேசத்தில் பரப்பிரம்மம் மிகவும் ஒளிச் சுடராக தென்பட்டது. அந்த ஒளியைப் பார்த்து அதிசயித்த தேவர்கள் அந்த ஒளி என்னவென்று தெரிந்து கொள்ள முயன்றனர். அக்னியும் வாயுவும் சென்று சக்தியின் ஒளியே என்று புரியாமல் பின் திரும்பினர். பிறகு இந்திரன் சென்ற நேரம் பார்த்து அந்த மாய ஒளி மறைந்து விட்டது. அப்போது திவ்யமங்களகரமான உமா தேவி தோன்றினார். அந்த யக்ஷகன் யாரென்று உமாவை கேட்க அவர் பரப்ரம்மன் என்றும், அவரின் அனுக்ரகத்தால்தான் நீங்கள் வெற்றியடைந்தீர்கள் என்றும் கூறி னாள். இந்திராதி தேவர்கள் அனைவரும் சென்று அந்த பரப்ரம்மனை சேவித்து வந்தனர். அதன் பிறகுதான் பரப்பிரம்ம ஸ்வரூபத்தை குறித்து இந்திரன் தெரிந்து கொண்டான்.





### 2. அக்னி தேவன் :

பஞ்சபூதங்களில் அக்னியும் ஒருவர். 7 கைகள், 7 நாக்குகள், 2 தலைகள் உள்ள இவர் எப்போதும் புன்முறுவலுடன் இருப்பார். மனைவி ஸ்வாஹா தேவி. ஆயுதம் சக்தி. வாகனம் செம்மறி ஆடு. இருப்பிடம் தேஜோ வதி பட்டிணம். இந்த அக்னி சிவ தத்துவம் உள்ளவர். இவர் சிறு வயதாக இருக் கும் போது, இவருக்கு 12 வது வயதில் கண்டம் உள்ளது எனக் கூறினர். தாய் தந்தை ஆணையின் பேரில் காசி நகரத்திற்குச் சென்றார். அங்கு சிவனை குறித்து கடுந்தவம் புரிந்தார். அப்பொழுது தேவேந்திரன் இவருக்கு வரம் கொடுப்பதாகக் கூறினார். ஆனால் மறுத்துவிட்டு சிவபெருமான் தோன்றும் வரை கடுந்தவம் புரிவேன் என்று கூறி தவம் இருந்தார். கோபம் கொண்ட தேவேந்திரன் வஜ்ராயுதத்தால் அடிக்க மூர்ச்சையடைந்தார். அப்போது சிவபெருமான் தோன்றி அக்னிக்கு வரங்களை அளித்தார். அஷ்டவசுக்களில் அக்னியும் ஒருவர். பரப்ரம்ம வடிவைத் தெரிந்து கொள்ள முதன் முதலில் ஆவலாக இருந்தவர். ஆகவே அனைவராலும் சேவிக் கப்படுபவர்.




### 3. யமதேவன் :

யமன் பித்ரு கணாதிபதி. தென் திசைக்கு அதிபதி யாவார். தாய் தந்தையர் சூரியன் சஞ்சக்னா தேவி. மனைவி சியாமளா



தேவி. ஆயுதம் தண்டம். வாகனம் எருமை. சம்யமனி பட்டிணம். யமன் மஹா உக்ரமான தர்மனாவார். இவருடைய சகோதரி யமுனை நதி. சித்ரகுப்தன், லேகரி, சண்டன், மஹாசண்டன் இவருடைய சேவகர்களாவர். தர்மம், நியாயம் பார்ப்பதில் இவருக்கு ஈடு இணை கிடையாது. சனீஸ்வரன் யமனுக்கு சகோதரன். பாவ புண்ணியங்கள் பார்ப்பவன். இந்த யமனுக்கு ஆலமரம் என்றால் மிகவும் விருப்பம்.


8

**4. நைருதி தேவன் :**

நைருதி தென்மேற்கு திசைக்கதிபதி. நல்ல புகழைப் பெற்றவன். மனைவி தீர்காதேவி. ஆயுதம் குந்தம். வாகனம் நரன். கிருஷ்ணாங்கன பட்டிணத்தில் வாசம் செய்கிறவர். முற்பிறவியில் "பிங்களாக்ஷன்" என்ற பெயரில் பிறந்து குலத்தொழிலை செய்யாமல் ஒரு வர்த்தகனாக இருந்து வந்தவன். இப்படி இருக்கையில் பிங்களாக்ஷகன் சிறிய தந்தையார் தாரகன் என்பவன் மஹா துர்மார்க்கன். அவன் சிலருடன் சேர்ந்து, வழிப்போக்கரை மிரட்டி அவர்களை கொடுமை செய்தான். வழிப்போக்கர்களின் கூச்சலைக் கேட்டு பிங்களாக்ஷன் வந்து அவர்களை காப்பாற்ற தன் சிறிய தந்தையாருடன் போரிட்டு போரில் மரணமடைந்தான். பிறருக்கு உதவி செய்வதிலும் வல்லவனான பிங்களாக்ஷன் புண்யலோகம் சென்றான். நல்ல குணம் கொண்ட நைருதி உலக அதிபதியாக நியமிக்கப்பட்டு சிறப்பு பெற்றான்.


7

**5. வருண தேவன் :**

யாக சமயங்களில் அவிர்பாகத்தை கொடுப்பதற்கு அழைப்பு விடுக்கப்படும் வருண தேவன் மேற்கு திசைக்கு அதிபதி. நீருக்கு அதிபதி. மனைவி காளிகா தேவி. ஆயுதம் வருண அஸ்திரம். வாகனம் முதலை. இருப்பது ஸ்ரத்தாவதிபட்டிணம். இவருக்கு சுசிஷ்மந்தன் என்ற பெயரும் உண்டு.

சிறிய வயதில் சுசிஷ்மந்தன் நண்பர்களுடன் சேர்ந்து தெப்பக்குளக்கரையில் விளையாடிக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு முதலை அவனை விழுங்கி கடற்கரைக்கு கொண்டு சென்றது. உடன் இருந்த நண்பர்கள் கர்த்த முனியிடம் சுசிஷ்மந்தனை முதலை விழுங்கி விட்டது எனக் கூறினர். கர்த்தமன் கடுமையான தவம் செய்து கொண்டிருந்தார். சிவதூதன் கடற்கரை அருகே வந்து சமுத்திரனை பார்த்து இவனை ஏன் இங்கு கொண்டு வந்தாய் எனக் கேட்டான். கர்த்தமுனி குமாரன் என்று தெரிந்த பிறகு சமுத்திர ராஜன் பயந்து அந்த சிறுவனை சிவனிடம் அனுப்பினான். சிவன் கர்த்த முனியிடம் அந்தச் சிறுவனை சேர்த்தார். சிவ தரிசனம் செய்தபிறகு சுசிஷ்மந்தனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது. தந்தையின் ஆணையின் பேரில் காசிக்குச் சென்று சிவனைக் குறித்து கடுந்தவம் செய்தான். சிவன் அவர் முன் தோன்ற அவரிடம் வருணபதம் அளிக்க வேண்டுமென வரம் கேட்டான். வருணனாகி வருணலோகத்திற்கு அதிபதியாக பிரசித்தி பெற்றான்.


5


6



## 6. வாயு தேவன் :

பஞ்சபூதங்களில் வாயுதேவனும் ஒருவன். வாயு திசைக்கு அதிபதி. மிகவும் பலசாலி. ஜீவகோடிகளுக்கு பிராணநாடி. உயிரைக் காப்பதில் பஞ்சமூர்த்தி தத்துவம். அனைத்து சக்திகளையும் பெற்றவன். வாயுதேவன் முன் பிறவியில் பூதாத்மன் என்ற பிராம்மணன். மனைவி அஞ்சனா தேவி. ஆயுதம் த்வஜம். வாகனம் மான். இருப்பிடம் கந்தவதி பட்டினம். வாயுதேவன் குஞ்ஜரனின் பெண்ணான அஞ்சனா என்ற வானர பெண்ணை பார்த்து மோகம் கொண்டான். வாயுதேவனின் அனுக்ரகத்தால் தன் பதிவிரதை தர்மம் கெடாமல் ஆஞ்சனேயரை பெற்றாள். வாயுதேவன் புராண, இதிகாசங்களில் ஏராளமான இடங்களில் தரிசனம் தருகிறார். அக்னி தேவனுக்கு நல்ல நண்பன்.

## 7. குபேர தேவன் :

சகல தேவர்களும் இவரை சேவிப்பர். வடக்கு திசைக்கு அதிபதி. தனாதிபதி. பாக்கியசாலி. இவருடைய ஆயுதம் கட்கம். வாகனம் குதிரை. இருப்பிடம் அலகாபுரி. ராவணப்ரம்மா இவருடைய சகோதரன். குபேரன் பிரம்ம தேவனை நோக்கி தவம் செய்து இலங்கை நகரை வரங்களாகக் கோரி னான். பிரம்மாவும் அனுக்ரகித்தார். புஷ்பக விமானத்தை யும் வழங்கினார்.

ராவணன் கர்வத்துடன் அனைவரையும் கொடுமை படுத்திக் கொண்டு தன் சகோதரனான குபேரனைக் கூட இம்சைக்கு ஆளாக்கி புஷ்பக விமானம், இலங்கை நகரத்தையும் கைப்பற்றினான். குபேரன் சிவனின் துணையால் அலகாபுரி பட்டிணத்தை பெற்றான். கலியுக தெய்வமான ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாசரின் திருமணத்திற்கு குபேரன் கடன் வழங்கினான். அரச மரத்தினை சாக்ஷியாக வைத்துக் கொண்டு ஸ்வாமிக்கு கடன் வழங்கினார். அதற்கான வட்டியை ஸ்வாமி இன்று வரை செலுத்திக் கொண்டே உள்ளார். ஸ்வாமி மஹாலக்ஷ்மி அருட்பார்வையால் குபேரன் உண்மையாகவே தர்மாத்மன், தன்யாத்மன் ஆனான்.

தெலுங்கு மூலம் : திரு. எம்.வி. ரமணா
தமிழாக்கம் : திருமதி. ஏ. அருணா

## 8. ஈசான்ய தேவன் :

சாக்ஷாத் ஈசான்யதிசைக்கு அதிபதி சிவன். பார்வதி தேவி இவருடைய மனைவி. ஆயுதம் திரிசூலம். வாகனம் ரிஷபம். இருப்பிடம் யசோவதி நகரம். பார்வதி, பரமேஸ்வரன் ஆதிதம்பதியர். இவர் கோரிக்கைகளை நிறைவேற்றுவதால் போளாசங்கரன் என்றும் அழைக்கப்படுகிறார். மஹாசக்தி உடையவர். மும்மூர்த்திகளில் ஒருவர். பூதகண சம்பத்து கொண்டவர். நொடிப்பொழுதில் பஸ்மம் செய்பவர். மூன்றாவது கண்ணை திறந்தால் அனைத்தும் சாம்பலாகி விடும். கைலாசம் இவரது இருப்பிடம். உலக நன்மைக்காக ஆலஹால விஷத்தையே அருந்தியவர். விஷ்ணு மூர்த்திக்கு உற்ற நண்பன். லிங்க வடிவில் பூஜையை ஏற்றுக் கொள்பவர். மேற்கூறிய அஷ்டதிக் பாலகர்களுடன் சேர்ந்து பிரம்மோத்சவத்தில் நாமும் ஸ்வாமியை தரிசித்து அவரின் பரிபூரண அருளுக்கு பாத்திரமாவோம்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

### உடைமைகள் பாதுகாப்பு மையங்கள்

1) அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு பாதையின் ஆரம்பத்தில் உடைமைகள் வைக்கும் கௌண்டர்கள் உள்ளன. மலைவழிப் பாதையில் நடந்து வரும் பக்தர்கள் தங்களுடைய உடைமைகளை இலவசமாக இங்கே வைக்கலாம். திருமலையில் ஜி.என்.சி. டோல்கேட் அருகில் உள்ள கௌண்டரில் லக்கேஜை திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம்.

2) திருமலையில் பல பகுதிகளில் உடைமைகள் வைக்கும் கௌண்டர்கள் உள்ளன. பக்தர்கள் தங்களுடைய கைபேசி, காலணிகளை பைகளில் வைத்து தாழிட்டு உடைமைகள் பாதுகாக்கும் கௌண்டரில் பாதுகாப்பாக வைக்கலாம். தரிசனத்திற்குப் பிறகு பி.எ.சி–4ல் லக்கேஜை திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம்.

3) திருமலையில் சர்வ தரிசனம், திவ்ய தரிசனம், ரூ.300/– சிறப்பு தரிசனம் கட்டிடத் தொகுதிகளில் உடைமைகள், கைபேசிகள் பெற்றுக் கொள்ளும் கௌண்டர்கள் உள்ளன. தரிசனத்திற்குப் பிறகு பி.ஏ.சி–4ல் திரும்பவும் உடைமைகள், கைபேசிகளை பெற்றுக் கொள்ளலாம்.



# யான் விரும்பும் திருவேங்கடம்

திரு. ஆர்.கண்ணன், பெங்களூரு.

திருவேங்கடம் = திரு+வேம்+கடம். திரு என்றால் செல்வம் அன்றிக்கே மஹாலக்ஷ்மி கடாக்ஷம் பெற்றது என்று பொருள். வேம் என்றால் பாபங்கள் – நம்மை சம்ஸாரத்தில் ஆழ்த்தும் கடு வினைகள். கடம் என்றால் போக்கடிப்பது என்று பொருள். ஆகவே திருவேங்கடம் என்னும் க்ஷேத்ரம் மஹாலக்ஷ்மி கடாக்ஷம் பெற்று செல்வம் கொழிக்கும் ஸ்தானம் என்றாயிற்று. இங்கு நின்றருளும் எம்பெருமான் திருவேங்கடவனை சேவித்தால் கடுவினைகள் எல்லாம் ஒழிந்து போகும்.

இதைத்தான் ஸ்வாமி தேசிகன்,

*''கடுவினையர் இரு வினையும் கடியும் வெற்பு... புண்ணியத்தின் புகல் இது எனப் புகழும் வெற்பு''* என்று அதிகார சங்க்ரஹத்தில் (43) அருளிச் செய்துள்ளார். ஆகவே *''இருள் தருமா ஞாலத்தில் இனிப் பிறவி வேண்டாம்''* என்பதற்காக அவசியம் திருவேங்கட மாமலையில் திருவேங்கடவனை சேவித்து அவனது திருவருளைப் பெற வேண்டும்.

பரமபதத்தில் நம் போன்ற ஜீவாத்மாக்களை உய்விக்கும் பொருட்டு, பூலோகத்திற்கு இறங்கி வந்து, திருவேங்கட மாமலையில் அர்ச்சாவதாரமாக அருள் பாலிக்கிறான், அழகான இயற்கை வளமிக்க திருமலையில் ஏழு மலைகளுக்கு நடுவே ஆனந்த விமானத்தின் அடிக்கீழ் நித்யவாசம் செய்கிறான். அவன் திருமார்பில் *''அகலகில்லேன் இறையுமென்று''* அலர் மேல்மங்கைத் தாயார் பிரகாசிக்கிறாள். பக்தர்களுக்கு சேவை சாதித்து உகக்கிறாள். தன்னை அடியார்கள் அனைவரும் சேவிக்க வேண்டும் என்ற திருவுள்ளத்தால் தர்ம தரிசனம், சிறப்பு தரிசனம், முதியோர்கள் – மாற்றுத் திறனாளிகள் தரிசனம், ஆர்ஜித சேவைகள் இவைகள் மூலம் காலை 3 மணி முதல் இரவு வெகு நேரம் வரை பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குக் காட்சி தருகிறான். நமக்காக இவ்வளவு



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்

*கா தே காந்தா கஸ்தே புத்ர:*
*ஸம்ஸாரோऽய-மதீவ விசித்ர:।*
*கஸ்ய த்வம் வா குத ஆயாத:*
*தத்வம் சிந்தய ததிதம் பிராத:॥*

**மனிதனை நோக்கி அழைக்கிறார் ஆதிசங்கரர்... எப்படி? குழப்பம் மிகுந்தவனே என்று...! உன்னால் நேசிக்கப் படும் உன்னுடைய "அன்பு மனைவி" என்பது யார்? உன்னுடைய "மகன்" என்பது யார்? "நீ எங்கிருந்து வந்தாய்"? இந்த ஸம்ஸாரம் (மனைவி, மகன், மகள் என்ற உறவெல்லாம்) என்பது மிகவும் விந்தையானதே...!**

**இவள் உன்னுடைய மனைவி என்றால்–"நீ யாரைச் சேர்ந்தவன்?" "எங்கிருந்து வந்தாய்" (நீ தோன்றுவதற்கு முன்) உன்னுடைய பின்னணி என்ன? போன்ற உண்மைகளை ஆதாரங்களை ஆலோசிப்பாயாக.**

**(நாம் அனுபவிக்கும் சொந்தம், பந்தம், பாசம் எதுவுமே சாஸ்வதமல்ல என்பது மறைமுக உபதேசம்).**

**– திரு. சீதாராமன், சென்னை.**



எளிமையுடன் அவதரித்திருக்கும் எம்பெருமானை விரும்பாதவர் உண்டோ?

இத்திருத்தலம் மிகவும் புனிதமானது. புராணங்களாலும், ஆழ்வார்கள் அருளிச் செயல்களாலும் புகழப்பட்ட திவ்ய தேசம் திருவேங்கடம். எம்பெருமான் சிறப்பாக உகந்த திவ்ய தேசங்கள் – 4 என்று பூர்வர்கள் கூறுவார்கள். அவை கோயில் (திருவரங்கம்), திருமலை (திருவேங்கடம்), பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்) மற்றும் திருநாராயண புரம் (மேல்கோட்டை) ஆகியவை. அவைகளுள் திருவரங்கத்திற்கு அடுத்தபடியாக ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்ய தேசம் என்ற பெருமை திருவேங்கடத்திற்கு உண்டு.

இத்திருத்தலத்திற்கு மட்டுமல்ல. இதனையும் தாங்கி நிற்கும் திருமலைக்கும் சிறப்புண்டு. திருமலையின் சிறப்பை நம்மாழ்வார் மற்றும் திருமழிசைப்பிரான் ஆகியோர்கள் தம் பிரபந்தங்களில் அருளிச் செய்துள்ளனர்.

நம்மாழ்வார் **''பரன் சென்று சேர் திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே''** (திருவாய்மொழி 3–3–8) என்றும், திருமழிசைப்பிரான்,

**''வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும்**
**மெய்ம்மையால்**
**வேங்கடமே மெய் வினை நோய் தீர்ப்பதுவும் -**
**வேங்கடமே**
**தானவரை வீழத் தன் ஆழிப்படைதொட்டு**
**வானவரை காப்பான் மலை''**

(நான்முகன் திருவந்தாதி – 48) என்றும் அருளிச் செய்துள்ளனர். ஸ்வாமி தேசிகனும் இந்த மலையின் சிறப்பை அற்புதமாக அருளிச் செய்கிறார்.

**''கண்ணன் அடி இணை எமக்குக் காட்டும் வெற்பு...**
**விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு**
**வேங்கடவெற்பு என விளங்கும் வேத வெற்பு''**

என்றும் அதிகார சங்க்ரஹத்தில் (43) அருளிச் செய்துள்ளார்.

மேலும் தன்னுடைய தயா சதகத்தில்,

**''திருவேங்கடவனின் தயையே கல் உருவம் பெற்றதோ என்னலாம்படி திருமலையாய் விளங்குகிறது. அப்படிப்பட்டத் திருமலையை முந்துற முன்னம் வணங்கி வழிபடுகிறேன்''** என்று முதல் சுலோகத்தில் அருளிச் செய்துள்ளார்.

### திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## 2019, நவம்பர் மாத விழாக்களும், பண்டிகைகளும்

| | |
|---|---|
| 1 | மணவாள மாமுனிகள் சாத்துமுறை |
| 2 | சேனை முதலியார் திருநட்சத்திரம் |
| 3-4 | திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம் |
| 4 | வேதாந்த தேசிகர் சாத்துமுறை, பொய்கையாழ்வார் திருநட்சத்திரம், பிள்ளை லோகசார்யார் திருநடசத்திரம் |
| 5 | பூதத்தாழ்வார் திருநட்சத்திரம் |
| 6 | பேயாழ்வார் திருநட்சத்திரம் |
| 8-12 | நாராயணவனம் ஶ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 11-12 | நகரி ஶ்ரீகரிய மாணிக்க ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 12 | திருப்பதி ஶ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் அன்னாபிஷேகம் |
| 16 | திருப்பதி ஶ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி லக்ஷ வில்வார்ச்சனை |
| 22 | திருச்சானூர் ஶ்ரீபத்மாவதி தாயார் குங்குமார்ச்சனை |
| 22-டிச.1 | திருச்சானூர் ஶ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம் |
| 22-23 | நாகுலாபுரம் ஶ்ரீவேதநாராயண ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 24 | தன்வந்தரி ஜெயந்தி |
| 25 | திருப்பதி ஶ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் கார்த்திகை சோமவாராபிஷேகம் |

இவ்வளவு சிறப்புப் பெற்ற திருமலையை அனைவரும் விரும்புவது ஸஹஜம் அல்லவா!

திருவேங்கடவனை லக்ஷக்கணக்கான அடியார்கள் விரும்பிச் சேவிப்பதற்கு அவன் அருளும் வரத்தினால் மட்டுமல்ல. அவனை எளிதில் அணுகி அவனைக் கண்டு களிக்க சிறப்புமிக்க வசதிகள் இக்காலத்தில் அமைந்துள்ளன. திருப்பதி–திருமலையை சாலை, இரயில், ஆகாய விமானம் மூலம் அடைந்து விடலாம். மலைக்குச் செல்ல அநேகம் ஊர்திகள், திருமலையில் தங்க அவரவர்களுக்கேற்றபடி சத்திரங்கள், அறைகள் ஆயிரக்கணக்கில் அமைந்துள் ளன. திருமலையில் அன்னக்கூடங்கள் பல பல. மலையில் பல புனித இடங்களுக்குச் சென்று வர இலவச பேருந்து முதலியன. இலவச மருத்துவ வசதிகள், க்யூ வரிசை யில் இருப்பவர்களுக்கு இருக்கைகள், சிற்றுண்டி வசதிகள், இலவச முடி காணிக்கை செலுத்துதல் வசதி எல்லாமே நம் கவலைகளைப் போக்குகின்றன.

மேலும் இக்காலத்தில் இணையதளம் மூலம் ஆர்ஜித சேவைகள் செய்வது நம்மு டைய திருமலை யாத்திரையை உற்சாகப் படுத்துகிறது.

மூன்று யாத்திரைகளை சிறப்புமிக் கது என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

**அக்ரூரர் யாத்திரை :**

கண்ணபிரானை கோகுலத்திலிருந்து மதுரைக்கு அழைத்துவர அக்ரூரர் புறப்படு கிறார். அவர் மனம் முழுவதும் மகிழ்ச்சி. எப்போது எம்பெருமானை பார்க்கப் போகி றோம். அவனோடு பேசி மகிழப்போகி றோம் என்ற எண்ணமே அவர் யாத்திரை யில் குடி கொண்டிருந்தது.

**அர்ச்சிராதி மார்க்க யாத்திரை :**

எம்பெருமானை அடைய ஒரு உபா யத்தை செய்பவர்கள் சரீரத்தின் முடிவிலே அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமபதத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அப்படி வழியெல்லாம் ஆனந்தத்தை அனுபவிக்கும் அவர்கள் எப்போது எம்பெருமானையும் பிராட்டியையும் கிட்டி அவர்கள் உகந்த கைங்கர் யங்களைச் செய்து பேரின்பத்தை அடையப்போகிறோம் என்றே எண்ணிக் கொண்டிருப்பார்கள்.

**திருமலை யாத்திரை :**

எப்போது திருப்பதியை அடையப்போகிறோம். எப்போது திருமலையில் எம்பெருமானை சில நொடிகளாவது கண் குளிரப் பார்க்கப்போகிறோம் என்று அடியார்கள் செல்வர்.

திருமலைக்கு போனபின் பெரும் பயனைக்காட்டிலும் போகும் போதே ஏற்படும் மகிழ்ச்சியே அலாதி.

திருமலை யாத்திரையின் போது நாம் பெரும் இன்பம் கட்டுக்கடங்காது. இதைத்தான் ஸ்வாமி தேசிகன் *"முக்தானுபூதிம் இஹ தாஸ்யதி மே முகந்த"* (இந்த மேதினியிலேயே திருவேங்கடவன் மோக்ஷாநந்தத்தை தரப்போகிறான்) என்று தயா சதகத்தில் பிரார்த் தித்தார் போலும். பக்தர்கள் பாகவதர்களோடு கூடி எம்பெருமானைக் கண்டு அனுபவிப்பதுதானே மோக்ஷ ஆனந்தம்.

இப்படி பலவகையிலும் சிறப்பு மிகுந்த திருவேங்கடத்தை விரும்பும் கோடிக்கணக்கான அடியார்களில் ஒருவனான அடியேனும் நிறைந்த மனதுடன் விரும்புவதும் அடியேன் செய்த பாக்கியமே.

*"விநா வேங்கடேசம் நநாதோ நநாத:*
*ஸதா வேங்கடேசம் ஸ்மராமி ஸ்மராமி"*


**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**வாசகர்களுக்கு அறிவிப்பு!!**

**"ஸப்தகிரி பொன்விழா மலர்" கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன**

**தி.தி.தே. சமய மாத இதழான ஸப்தகிரி கலியுக கண் கண்ட தெய்வ மான திருவேங்கடமுடையானின் வைபவத்தையும், திருமலை குறித்தும் பிரதி மாதம் தவறாமல் வாசகர்களுக்கு வழங்குகிறது. ஆறு மொழிகளிலும் வெளிவருகின்ற ஆன்மீக, அறநெறி பத்திரிக்கைகளில் முன்னிலையில் உள்ளது.**

**ஸப்தகிரி "சிறப்பு பொன்விழா இதழை" வெளியிட கருதுகிறது. ஆதலால் வாசகர்கள் ஸப்தகிரி குறித்து தங்கள் அனுபவங்களை எழுதி எங்கள் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். அவற்றை பரிசீலித்து ஸப்தகிரியில் பிரசுரிக்கப்படும்.**

**கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி : பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், தி.தி.தே. அச்சக வளாகம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி–517 507. கட்டுரைகளை தட்டச்சு செய்து** tamilsapthagiri50years@gmail.com **என்ற இ–மெயிலிற்கு அனுப்பவும்.**

**– பிரதான ஆசிரியர்**

ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா!!

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## பிருது சக்கரவர்த்தி முக்தியடைதல்



தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

பிருது சக்கரவர்த்தி யாகம் ஒன்றைச் செய்யத் தொடங்கினான். அந்த யாகத்திற்கு பிரமரிஷிகளும், தேவர்களும், தேவரிஷி களும் வந்தனர். அங்கு வந்திருந்த வணக் கத்திற்குரிய அனைவருக்கும் முதலில் பிருது சக்கரவர்த்தி தன் பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொண்டான். அந்தச் சபையில் பிருது சக்கரவர்த்தி நட்சத்திரங்களுக்கு இடையில் ஒளிவீசும் பௌர்ணமி சந்திரன் போல விளங்கினான். முக்தி நிலையினை விரும்பியவனாகிய அவன் இறைவனின் சிந்தனையோடே நாட்டை ஆண்டு வந்தான். அவன் தன் மனைவியான அர்சி மூலமாக ஐந்து பிள்ளை களைப் பெற்றான். அவர்கள், விஜிதாசுவன், தூமகேதன், ஹர்யக்ஷன், திரவிணன், விருகுவு என்பவர்கள் ஆவர். பிருது சக்கர வர்த்தி மிகவும் இறைபக்தியுடையவன். அக்காரணத்தால் அவன் மக்களை அவர்களு டைய விருப்பு வெறுப்புகளை அறிந்து, நல்ல முறையில் காத்து வந்தான். மேலும், இறைவனுடைய படைப்புகள் அனைத்தை யும் காக்கும் படியும் மக்களைக் கேட்டுக் கொண்டான். அவனுடைய ஆணையை மீறு வது என்பது நெருப்போடு விளையாடு வதைப் போன்றது. மிக்க வீரமுடையவனான அவன் இந்திரனை ஒத்தவனாவான். பூமியைக் காட்டிலும் பொறுமை மிக்கவனாகிய அவன் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் சொர்க்கத்தைப் போன்றவன். மேலும் மக்களுக்குக் கற்பகத் தருவைப் போன்றவன். கடலைப் போன்ற ஆழம் உடைய அவனுடைய உள்ளத்தை யாரும் முழுமையாக அறிந்து கொள்ள முடியாதவரா யினர். அவன் மேரு மலையைப் போல உறுதியுடையவனாக விளங்கி னான். அவனுடைய அறிவும், கல்வியும் எமதர்ம ராஜாவிற்குச் சமமாக இருந்தது. அவன் செல்வாக்கு இமய மலையளவு உயர்ந்திருந்தது. குபேரனைப் போன்ற செல்வ செழிப்பும், அழகினில் மன்மதனைப் போன்றும் இருந்தான். சிங்கத்தைப் போன்றவனும், அநுராகத்தில் அவன் சுயம்புவ முனியையும், ஆளுமையில் பிரம்மனைப் போன்றும் திகழ்ந்தான். இதனால், அவன் புகழ் உலகம் எங்கும் பரவியது. இராம பிரானை மக்கள் புகழ்ந்து போற்றியவிதமாக இவன் புகழும் ஓங்கி வளர்ந்தது.

பிருது சக்கரவர்த்தியின் ஆட்சி எல்லோராலும் பாராட்டும் வித மாக இருந்தது. சக்கரவர்த்தி தனக்கு வயதாவதை உணர்ந்து, தன் மகளைப் போன்றவளாகிய பூமியைத் தன் பிள்ளைகளிடம் ஒப்ப டைத்துவிட்டு தன் மனைவியோடு கானகம் சென்று தவம் செய்யப் புறப்பட்டான். சில நாள் காய் கனி கிழங்கு வகைகளையும், சில நாள் இலைகள் சருகுகளையும், சில நாள் வெறும் நீரை மட்டுமே உட் கொண்டும், பின் சில நாள் வெறும் வாயுவை மட்டுமே உணவாகக் கொண்டும் தவம் செய்தான். தவம் செய்வதில் ரிஷிகள் மேற்கொள் ளும் நியமங்கள் அனைத்தையும் கடைப்பிடித்து ஒழுகினான். வெயில் காலங்களில் கழுத்தளவு நீரில் மூழ்கி நின்றும் தவம் செய் தான். பிருது சக்கரவர்த்தி காமக் குரோதாதி உணர்ச்சிகளையும் பிராணாதி வாயுக்களையும் கட்டுப்படுத்தி உக்கிரமான தவம்

செய்தான். இப்படியாக கடும் தவம் செய்வதற்குக் காரணம் அவனிடம் இருந்த அளவு கடந்த கிருஷ்ண பக்தியே ஆகும். தேகத் தியாகம் செய்ய வேண்டிய நேரம் நெருங்கியதும் தன் மனதை முழுவதுமாகக் கிருஷ்ண பக்தியில் செலுத்தினான். பின்பு பிரம்மானு பூதியில் திளைத்தவாறே பிராணவாயுவை காற்றோடும், உடலை பூமியிலும், தேகாக்னியை தீயிலும், தன் ஆன்மாவை தவாக்கினியிலும் கரைத்தான்.

பிருது சக்கரவர்த்தியைப் போலவே அவன் மனைவி அர்சியும் தவத்தை மேற்கொண்டாள். சுகுமாரியாகிய அரசி தனக்கு பழக்கமில்லாத ஒன்றாக தவம் இருந்தாலும் தன் கணவரை பின் தொடர்ந்து கட்டுப் பாடுடன் செயல்பட்டாள். மேலும், தரையில் படுத்தும், தழைகள் இலைகளை உண்டும் தவம் காத்தாள். எனவே அவள் உடல் மிகவும் குன்றியது. இருந்தாலும், கணவனின் வழியை பின் தொடர்வதில் அவளுக்கு வருத்தம் ஒன்றுமில்லை. அப்படியாக கணவன் சேவையிலேயே காலம் கழித்த அர்சி தன் கணவர் தேகத்தியாகம் செய்ததைப் பார்த்து சிறிது நேரம் துக்கித்து அழுத பின்பு உயர்ந்த சிதையை ஏற்படுத்தி அதில் தன் கணவரின் உடலை வைத்தாள். பின்பு தன் கணவருக்குக் கடைசியாகச் செய்ய வேண்டிய அனைத்து காரியங்களையும் செய்து முடித்து பின் நதியில் நீராடி எழுந்தாள். தேவர்களை வணங்கினாள். பின்பு எரிந்துக் கொண்டிருக்கும் தீயை வலம் வந்து தன் கணவரின் திருவடியை நினைத்தபடி தானும் அத்தீயில் புகுந்தாள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த தேவப் பத்தினிகள் தன் கணவரோடு சேர்ந்திருந்து அவளை வாழ்த்தினார்கள். அவர்கள் மேல் பூமாரி பொழிந்தனர். தேவப்பத்தினிகள் அனைவரும் தமக்குத்தாமே இவ்வாறு சொல்லிக் கொண்டனர்.

“மஹாராணி அர்சி மிகவும் புண்ணியம் செய்தவளாவாள். சக்கரவர்த்தியான பிருதுவுக்கு தர்ம பத்தினியான இவள், லட்சுமிதேவி விஷ்ணுவை ஆராதித்தது போலவே, தன் கணவரை ஆராதித்தாள். அப்படிப்பட்ட தூயவளான அவளைப் பாருங்கள்! தான் செய்த புண்ணியக் காரிங்களால் அவள் தன் கணவனை பின் தொடர்ந்து சென்றாள். இந்த உலகத்தில் மனிதர்களின் வாழ்வு மிகவும் குறைந்த காலமே ஆகும். இருந்த போதிலும், பக்தி யோகத்தில் தன்னை உட்படுத்திக் கொண்டவர்கள் உண்மையிலேயே முக்தி மார்க்கத்தில் செல்பவர்கள் ஆவர். எனவே அவர்கள் நிச்சயமாக இறைவன் இருப்பிடமான வைகுண்டம்


திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி

## திருமலை புனித யாத்திரையை இனிதாக்குவது எப்படி?

* திருமலைக்கு செல்லும் முன்பே இரயில் மற்றும் பேருந்து டிக்கட்டுகள், தங்கு வசதிகள் மற்றும் சேவை டிக்கட்டுகளுக்கு முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
* திருப்பதியில் தங்கியிருக்கும் போது ஓய்வு நேரத்தில் உள்ளூர் ஆலய தரிசனம் செய்யுங்கள்.
* திருமலைக்கு நடந்து செல்பவர்களுக்கு வசதியாக திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து அலிபிரி மற்றும் ஸ்ரீவாரிமெட்டு வரை இலவசப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
* யாத்திரிகர்கள் தங்கள் உடைமைகளை அலிபிரி மற்றும் ஸ்ரீவாரிமெட்டு அடிவாரத்தில் உள்ள கௌண்ட்டரில் செலுத்திவிட்டு, மலை ஏறிச்சென்று திருமலையில் இலவசமாக திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.
* தி.தி.தேவஸ்தானம், காட்ரோடுகளில் பழுதடையும் வாகனங்களை சரிபார்ப்பதற்கு ரோந்து பழுதுபார்ப்பு வாகனத்தை ஏற்பாடு செய்துள்ளது.
* உங்கள் திருமலை யாத்திரையை விடுமுறை அல்லாத நாட்களில் தொடருங்கள்.
* தங்கு வசதிக்காக உங்கள் குடும்ப உறுப்பினர் அனைவரும் சி.ஆர்.ஓ. அலுவலகத்தில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு நபர் மட்டும் க்யூவில் காத்திருக் கலாம். மற்றவர்கள் சி.ஆர்.ஓ. அலுவலகத்திற்கு பக்கத் தில் உள்ள யாத்திரிகர்கள் வசதிக்கூடத்தில் தங்கி ஓய்வு எடுக்கலாம். அங்கு அனைத்து வசதிகளும் உள்ளன.
* தகவல் அறிவதற்கு, இரயில் நிலையம், விமான நிலையம், ஆர்.டி.சி. பேருந்து நிலையம், அலிபிரி பேருந்து நிலையம், சத்திரங்கள், அலிபிரி டோல்கேட் மற்றும் ரேணிகுண்ட்டா இரயில் நிலையத்தில் உள்ள தகவல் மையங்களை அணுகுங்கள்.
* திருமலை புனிதம் மற்றும் பரிசுத்தத்தை பாதுகாத்திட தாங்கள் தேவஸ்தானத்துடன் ஒத்துழையுங்கள்.

செயலாட்சி தலைவர்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமானுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்த சாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக் கோயிலில் இடம் பெற்றுள்ளனர்.

☎ 0877-2264592.

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும்.

☎ 0877-2264584.

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷியால் இங்குள்ள சிவலிங்கம் தோற்று விக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது.

☎ 0877- 2264587.

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ 0877-2264586.

செல்வது உறுதி. அவர்களுக்கு கெடுதல் என்று ஒன்றுமில்லை".

தேவபத்தினிகள் இவ்வாறாகத் தமக்குத்தாமே உரையாடிக் கொண்டிருக்கையிலேயே அர்சி தன் கணவர் சென்ற உலகத்திற்கே தானும் சென்று சேர்ந்து விட்டாள். பிருது சக்கரவர்த்தியின் அற்புதமான இச்சரித்திரத்தை மைத்திரேயன் விதுரனுக்கு விவரித்துக் கூறினார் என்று பாகவதத்தில் சொல்லப்பட்டுள்ளது. திவ்வியமானதும் பெருமைக்குரியதுமான இச்சரித்திரத்தை கேட்பதினால் உண்டாகும் நல்ல பயன்கள் என்னவென்று பார்ப்போம்.

பிருது சக்கரவர்த்தி நல்ல குணங்களை மிகவும் கவனமாகவும், உறுதியுடனும் வர்ணிப்பவர்களும், படிப்பவர்களும், கேட்பவர்களும், இச்சரித்திரத்தை பிறர் கேட்கும்படியாக செய்பவர்களும் பிருது பெற்ற அந்த மேலான உலகத்தை இவர்களும் பெறுவார்கள். அதாவது இவர்களுக்கு வைகுண்டத்தில் வாசம் செய்யும் பாக்கியம் உண்டாகும். பிருது சக்கரவர்த்தியைப் பற்றி படித்தறியும் அந்தணர்கள், அந்தணர்களுக்கான தகுதி முழுவதும் பெற்றவர்களாக விளங்குவர். க்ஷத்திரியர்கள் உலகத்தையே ஆளக்கூடிய சக்கரவர்த்தியாகத் திகழ்வர். வைசியர் மற்ற வைசியர்களுக்கும் அதிகமான பசுக்கூட்டங்களுக்கும் அதிபதியாவார்கள். சூத்திரன் உத்தமனாகவும் உண்மையான பக்தனாகவும் இருப்பான். மேலும் பிருது சரித்திரத்தைக் கேட்பதினால் பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் நிறைய பிள்ளைகளைப் பெறுவார்கள். தரித்திரன் தனவான் ஆவான். இச்சரித்திரத்தை மீண்டும் மீண்டும் கேட்பதினால் மனிதனுக்கு சமுதாயத்தில் நல்ல பேரும் புகழும் உண்டாகும். முரடனாய் இருப்பவனும் சிறந்த பண்டிதனாய் விளங்குவான். எல்லாவிதமான அமங்களங்களும் விலகிச் சென்று விடும். ஆயுள் அதிகரிக்கும். சொர்க்கத்தை அடைவான். கலிகாலத்து துன்பங்களிலிருந்து விடுபடுவான். தர்ம சிந்தனைகள் வளரும். எனவே இவ்வாறான நல்லவைகள் நம் வாழ்வில் உண்டாக வேண்டும் என விருப்பம் உடையவர்கள் பிருது சக்கரவர்த்தியின் சரித்திரத்தை படிப்பதும் கேட்பதும் எல்லா விதங்களிலும் நன்மை பயப்பதாகும். வெற்றியை நாடும் அரசன் தேரேறி செல்லும் முன் பிருது சரித்திரத்தை கேட்டால் பகை நாட்டு அரசன் கூட தம் முயற்சி ஏதுமின்றியே தமக்கு கப்பம் கட்ட காத்திருப்பான். எவரொருவர் இச்சரித்திரத்தை கேட்கிறார்களோ அவர்கள் விஷ்ணு லோகத்தை அடைவார்கள்.

பாகவத கதை சாரம் தொடரும்...

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

**தொண்டரடிப்பொடியாழ்வார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...**

(பண்டு திருப்பள்ளியெழுச்சி பத்துரைத்தான்) – பண்டு – பழமை. திருப்பள்ளி எழுச்சி – எம்பெருமானைத் துயிலுணர்த்தல். திருப்பள்ளியெழுச்சிக்குப் பழமையாவது *"உத்திஷ்ட புருஷஹரீ லோஹித பிங்கலாக்ஷி"* என்று வேதமும் புருஷன், அரி என்ற இரு திருநாமங்களையும் செந்தாமரைக்கண்ணனாயிருக்கும் இருப்பையும் இட்டு திருப்பள்ளி எழுச்சி பாடினதாகும். மேலும், இராமாவதாரத்தில் விச்வாமித்ரர் இராமனைக் காலைக்கடன்களைச் செய்ய *"கௌசல்யா ஸுப்ரஜா ராமா பூர்வாஸந்த்யா ப்ரவர்த்ததே உத்திஷ்ட..."* என்கிறபடியே என்று எழுப்புகிறார். கிருஷ்ணாவதாரத்திலும் பெரியாழ்வார் கண்ணனை யசோதைபாவனையில் எழுப்பும்போது *"அரவணையாய் ஆயரேறே அம்மமுண்ணத் துயிலெழாயே"* என்கிறார்.

இது பற்றியே இவ்வாழ்வாரும் அரங்கனை பள்ளி உணர்த்தும் வகையில் திருப்பள்ளியெழுச்சியில் ஒருகால் சொன்னாற்போலே பத்து பாசுரத்திலும் *"அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே"* என்று அருளுகிறார். இதில் தம் பக்கல் ஆராத காதலாலே உறங்கிய பெரிய பெருமாளைத் திருப்பள்ளி உணர்த்துகிறார். இதில் *"தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி என்னும்"* *"அடியனை அளியன் என்றருளி"* என்கையாலே காயிக கைங்கர்யத்தை இனிதாகக் கைக்கொண்டபடி சொல்லிற்று. மேலும் *"அடியார்க்கு ஆட்படுத்தாய்"* என்று அவன் அடியார்கள் உகந்த கைங்கர்யத்தை வேண்டுகிறார். இதில் *"அயோத்தியெம்மரசே அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே"* என்று நான்காவது பாசுரத்திலும், *"இலங்கையர்கோன் வழிபாடு செய்கோயில் எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே"* என்று ஐந்தாவது பாசுரத்திலும் இராமாவதார பரமாகச் சொன்னது காண்க. இதுபற்றியே *"ப்ராபோதகீம் ஸூக்தி மாலாம் ய: அக்ருத தம் பகவந்தம்..."* என்று திருப்பள்ளியெழுச்சிக்கு அமைத்த தனியனில் திருமாலையாண்டான் அருளிய படியே எந்த ஆழ்வார் திருப்பள்ளியுணர்த்துமதான பாமாலையை அருளிச் செய்தாரோ அப்படிப்பட்ட ஞானம் முதலிய குணங்கள் அமைந்த தொண்டரடிப் பொடியாழ்வாரை வணங்குகிறேன் என்கிறார்.

(பாவையர்கள் கலவிதனைப் பழித்த செல்வன்) – இளமையிலேயே அரங்கன் திருத்தொண்டில் ஈடுபட்ட இவ்வாழ்வார், பெரிய பெருமாளின் மாயையினால் தேவதேவி என்னும் தாசிக்கு வசப்பட்டுப் பெருமாளுக்குப் பூமாலை கட்டும் கைங்கர்யத்தை இழந்து, அவரையும் மறந்தார். அதனால் முன் வினைப் பயனாகக் கள்வனாகி சிறை வாசம் இருந்தார். பெரிய பெருமாள் அருளாலே விடுதலை கிடைத்தது. ஆழ்வாரும் இந்த இழிசெயலை நினைத்து அநுதாபம் கொண்டு தாசியோடு தொடர்பு கொண்டதன் பிராயச்சித்தமாக பாகவதர்களின் ஸ்ரீபாத தீர்த்தத்தைப் பருகி தூயவரானார்.

## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்

இதுபற்றியே தாம் அருளிய திருமாலையில், *"சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோடு இசைந்த காலம் மாதரார் கயல்கண் என்னும் வலையுள் பட்டு அழுந்துவேனை"* என்று பழித்து வெறுத்திருந்தார். இப்படி வேறு விஷயத்தில் அகப்பட்டு பின்வாங்க முடியாமல் இருந்த ஆழ்வாரின் மனத்தில் அரங்கன் வந்து புகுகைக்கு எதிர் பார்த்திருந்தான். ஆழ்வாருக்கு எம்பெருமானிடம் பகைமையின்மை பிறந்த அளவிலே *"போதரே என்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த"* என்கிறபடியே அவர் நெஞ்சில் புகுந்து தன் பக்கல் ஆதரம் பெருகும்படி திருவரங்கன் தன் அழகைக்காட்டக் கண்டு அநுபவிக்கப்பெற்றார். அதனால் கைங்கர்யச் செல்வனானார் என்றபடி.

(தொண்டு செய்து துளபத்தால் துலங்கினான்) – துளபம் – துளசி – திருத்துழாய். வனமாலையின் அம்சமான இவ்வாழ்வார் இளமையிலேயே வேத சாஸ்த்ரங்களையும் கற்று திருவரங்கனுக்கு ஆட்செய்ய எண்ணினார். திருவரங்கம் வந்து அரங்கனைப் பெரும் காதலோடு சேவிக்க, அரங்கனும் தம் வடிவழகைக் காட்டித் தம் பக்தராம்படி செய்தார். இதுபற்றியே புண்டரீக முனிவரைப் போலேயும், கிருஷ்ணாவதாரத்தில் மாலாகாரரைப் போலேயும், செண்பக மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி முதலான எண்வகைப் பூக்களைத் தொடுத்துச் சாத்திய பெரியாழ்வாரைப் போலவும், தாமும் திருத்துழாய் மாலை கட்டும் தொண்டு செய்ய நினைத்து, திருநந்தவனம் அமைத்து காலந்தோறும் பலவகைப் பூமாலைகளையும், திருத்துழாய் மாலையையும் கட்டி எடுத்துக் கொண்டு பெரிய பெருமாளுக்கு சமர்ப்பித்து வாழ்ந்து வந்தார். இதுபற்றியே இவ்வாழ்வாரே தம்முடைய கைங்கர்யத்தை *"துளபத் தொண்டு ஆய"* என்று பாசுரமிடுகிறார். இதற்கு உரையிட்ட பெரிய வாச்சான்பிள்ளை, இவ்வாழ்வார் திருத்துழாயாழ்வாருக்கு அடிமை செய்யுமவர். உறுதிப் பொருளின் எல்லை நிலமான பாகவதர்களுக்கு கைங்கர்யம் செய்வதில் நிலைநின்றவர் என்று போற்றுவர். "துளபம்" என்று கூறியது பாகவதர்களையும் சொல்லும். மேலும் *"துளபத்தொண்டு ஆய"* என்கையாலே அபசாரம் தட்டாத திருத்துழாய்க்குத் தொண்டு செய்வதாகும். அமுதனாரும் இராமாநுச நூற்றந்தாதியில் *"செய்யும் பசுந்துளபத்தொழில் மாலை"* என்பர். இதற்கு *"மிக்க சீர்த்தொண்டரான ஆழ்வாராலே செய்யப்பட்டதாய், அவருடைய கை தொடுதலாலே வந்த புதுக்கணிப்பெல்லாம் நிறத்திலே காணலாம்படி இருக்கிற திருத்துழாயாலே தரமாகத் தொடுத்த திருமாலை"* என்று சுவைபட உரையிடுவர் மாமுனிகள். திருப்பள்ளியெழுச்சி பிரபந்தத்திலும் *"தொடைஒத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி அடியேனை"* என்கிறார். அதாவது ஒழுங்காகத் தொடுக்கப் பெற்ற திருத்துழாய் மாலையும், பூக்குடலையும் விளங்கும் தோளையுடைய தொண்டரடிப்பொடி ஆழ்வார் என்னும் பெயருடைய அடியவன் என்னும் தம்முடைய அடிமையின் சிறப்பை விளங்கும்படி இருந்தவர். அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும் ஆசார்ய இருதயத்தில் (85) இவ்வாழ்வாரின் தொண்டை நினைத்து "துளசீப்ருத்யர்" என்று பெயர் சூட்டுகிறார்.



(தொண்டரடிப்பொடியாழ்வார் துணைப்பதங்கள்) – தொண்டர் அடிப்பொடி *"பக்தாங்க்ரிரேணு"* என்று பட்டர் பொதுத்தனியனில் இவ்வாழ்வாரை அழைப்பர். அதாவது எல்லையான பாகவதர்களுக்கு அடிமையாம் தன்மையே நிலைநின்ற ஸ்வரூபம் என்று நிச்சயித்து அதுவே அடையாளமான தொண்டரடிப்பொடி என்றபடி. *"அன்பர் தாள் தூளி"* என்பர் மாமுனிகள். இதற்கு, அகங்காரத்தோடு கூடினதான பிராம்மண பிறவியை துன்பம் விளைவிக்கும் என்று எண்ணி அது இல்லாத பிறவிகளான பாகவதர்களுடைய ஸ்ரீபாதத் தூளி என்றதுவே அடையாளமாம்படியான ஸ்ரீதொண்டரடிப்பொடியார் என்று விரித்து உரைப்பர் பிள்ளைலோகம் சீயர். இவ்வாழ்வாரை *"துன்னுபுகழ்த் தொண்டரடிப்பொடி"* என்பர் வேதாந்த தேசிகர். *"தொண்டர் பாதம் தரும் துகள்"* என்றும் *"மெய்யன்பர் கால் தூள்'* என்றும் பிள்ளை பெருமாள் அய்யங்கார் திருவரங்கக் கலம்பகத்தில் கூறுவர். ஆழ்வார் – அரங்கனுடைய மங்கள குணங்களாகிய அமுத வெள்ளத்தில்

மூழ்கி மிகவும் ஈடுபட்டு ஆழ்ந்து இருப்பவர். (துணைப் பதங்கள்) – ஒப்பற்ற திருவடிகள். அமுதனாரும் **"அரங் கத்தையன் கழற்கணியும் பரன் தாள்"** என்று கொண் டாடுவர். அதாவது **"ஐயனே அரங்கனே"** என்னும்படி பரமபந்துவாம் தன்மை தோற்ற கோயிலிலே படுத்துக் கொண்டிருக்கும் பெரிய பெருமாளுடைய திருவடிக ளுக்கு அலங்காரமானவராய், அடிமையில் எல்லை யிலே நிலைநிற்கையாலே, அடிமைக்குத் தமக்கு மேற் பட்டார் இல்லை என்னும்படி இருக்கும் ஸ்ரீதொண்டரடிப் பொடியாழ்வார் திருவடிகள் என்றவாறு. இத்தகைய திருவடிகளையொழிய வேறு விரும்பாத இராமாநுசர் என்று போற்றுவர் அமுதனார். ப்ர.ப. அண்ணாவும் வரவர முனி சதகத்தில் **''யத் பாதரேணுவஹநேந சுகந்தமௌளி ஸ்தம் ப்ரஹ்ம கந்தமதி முக்தபந்த:''** என்கிறபடியே எந்த தொண்டரடிப் பொடியாழ்வாரின் ஸ்ரீபாதரேணுவை தரிக்கிறபடியால் நல்ல வாசனையு டைய முடியையுடையவர்கள் பிறவி பந்தத்திலிருந்து விடுபட்டு ப்ரஹ்ம ஸம்பந்தத்தை அடைகின்றனரோ, அந்த தொண்டரடிப் பொடியாழ்வார் திறத்து பக்தி உடையவர் மணவாள மாமுனிகள் என்று உரைப்பர். அத்தகைய ஆழ்வார் திருவடிகளை நாமும் தினமும் போற்றி வாழ்வோமாக.

**ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே சரணம்**

வாழித்திருநாமம் வளரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஒரு நாள் நன்கொடை திட்டம்

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடை யாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. எனவே,* **"ஒரு நாள் நன்கொடை திட்டம்"** *கொண்டுவரப்பட்டுள்ளது.*

*அது எங்ஙனே எனில் ஒரு நாளைக்கு ஆகும் செலவு :*

| | | | |
|---|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - | 7 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - | 11.5 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - | 11.5 இலட்சம் |
| | மொத்தம் | - | 30 இலட்சம் |

0877-2264258
0877-2264375
0877-2264237

- திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இந்தத்தொகையை நன் கொடையாளர்களிடமிருந்து பெற விழைகின்றது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் /நிறுவனங்கள்/ நிறுமங்கள் / அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.
- இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.30 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.7 இலட்சமோ/ மதிய உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ/ இரவு உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ அளிக்கலாம்.
- தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.
- திருமலை அன்னதான கட்டிடத் தொகுதியில் நன்கொடையாளர் பெயர் காட்சியாக்கப்படும்.
- ஒருநாள் மட்டும் ஒரு முறை திருமலை அன்னதான கட்டிடத்தொகுதியில் உணவு பரிமாற நன்கொடையாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் :**

"சிறப்பு அலுவலர், ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம் நிர்வாகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி"

www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.

41

# 108 திவ்விய தேசவைபவம்







# திருவஹீந்த்ரபுரம்

– திரு. உருபட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

சோழ நாட்டுக்கும், தொண்டை நாட்டுக்கும் இடைப் பட்ட நாடு – நடுநாடு. இங்கு உள்ள திவ்ய தேசங்கள் இரண்டு. ஒன்று – திருவஹீந்த்ரபுரம். மற்றொன்று – திருக்கோவலூர் – இரண்டுமே மிகப் பழைய, வரலாற்றுச் சிறப்புள்ள திவ்ய தேசங்கள்.

18 புராணங்களில், பிரம்மாண்ட புராணம், ஸ்காந் தம், நாரதீயம் இவைகளில், இத்தலம் மிக விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. நாரதர், பிரம்மாவின் அருளால் இத்தலத்தை அடைந்ததாக பிரம்மாண்ட புராணம் சொல்கிறது. திருப்பாற்கடலுக்குச் சென்றும் பின்பு, வைகுந்தம் சென்றும் தரிசிக்க இயலாத பகவானை, த்வாரபாலகர்கள் சொல்லியபடி, மார்க்கண்டேயரும், பூதேவியும் தவம் செய்யும் இந்தத் தலத்துக்கு வந்து, சனக, சனந்தன முனிவர்கள் யாவரும் தரிசித்தார்கள் என்றும், அவர்கள் பிரார்த்தனைப்படி பகவான் இங்கு தேவநாதனாகக் கோயில் கொண்டுள்ளான் என்றும் கூறுவர். ஒரு சமயம் தேவநாதனுக்குத் தாகம் வர, அவருடைய தாகம் தீர்க்க கருடன் விரைந்து பறந்து சென்று மேற்கே உள்ள பரந்து விரிந்துள்ள மலையில் ஒரு ரிஷியின் கமண்டலத்தை மூக்கால் கவிழ்த்து, நீர் அதினின்றும் பெருக, அந்த நீரை மூக்கால் நிலத்தைக் கீறி, ஆறாக ஆக்கி, இந்த இடத்துக்குக் கொண்டு வந்தார் என்றும், அதுவே கருட நதி என்று கோவிலுக்கு மேற்கே, தெற்கிலிருந்து வடக்காக இவ்விடத்தில் ஓடுகிறது என்றும், கருடன் நீரைக் கொணர்வதற்குள் ஆதிசேஷன் நிலத்தை, தன் வாலால் அடித்து, பாதாளத்திலிருந்து நீரைக் கொண்டு வந்து தேவநாதனுக்கு சமர்ப்பித்தார் என்றும், இதுவே சேஷ தீர்த்தம் என்கிற பெயரில் கிணறு வடிவத்தில் கோவிலுக்குள் உள்ளது என்றும், தேவநாதன், சேஷ தீர்த்தத்தைத் தன்னுடைய பிரசாதங்களுக்காக உபயோகப்படுத்துமாறும், கருட நதி என்கிற வ்ரஜா தீர்த்தத்தைத் தன்னுடைய திருமஞ்சனத்துக்கு உபயோகப்படுத்துமாறும், தீர்த்த வாரிக்கு உகந்தது என்றும் ஆணையிட, இன்றளவும், அவ்வாறே நடந்து வருகிறது என்பர். இவ்வூர் பக்தர்கள், புற்றுக்குப் பால் தெளிப்பதில்லை என்றும் ஆதி சேஷன் கிணற்றில் பாலைச் சேர்ப்பது வழக்கம் என்றும் கூறுவர்.

மார்க்கண்டேயர், பிரம்மனை வேண்ட, பிரம்மனும், விச்வகர்மாவின் உதவியால் இங்கு நகரை நிர்மாணித்து, பிரம்ம தீர்த்தக் கரையில் தவமிருந்து, இத்தலத்தில், தேவநாதனுக்குப் பக்கலில் இருந்து, பிரம்மோத்ஸவம் வருடாவருடம் நடத்துகிறார் என்றும், பூதேவியும் பகவானின் இன்னொரு பக்கத்தில் எழுந்தருளி இருக் கிறாள் என்றும் சொல்வர். தேவநாதனை எப்போதும் துதிக்க, சிவபிரானும் பிரம்ம தீர்த்தக் கரையில் தவ மிருந்து, பாடலநகரம் அமைத்து, முப்புரத்தை எரிக்க ஆற் றல் பெற ஓம் நமோ தேவநாதாய என்கிற மந்திரத்தை உச் சரித்து, அருள் பெற்றதாகவும் வரலாறு.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**தலைக்கவசம்! உயிர் கவசம்!!**



திருப்பதி – திருமலை மலைவழிச்சாலையில் இருசக்கர வாகங்களில் பயணம் செய்யும் பக்தர்கள் மலையை ஏறும் போதும், இறங்கும் போதும் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிதல் அவசியமாகும்.

வாகனம் மலைவழிச் சாலையில் ஏறும் பொழுது 28 நிமிடமும் மலைவழிச் சாலையில் இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக சென்றால் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

**வாகனம் ஓட்டுபவர்களுக்கு ஓட்டுனர் உரிமம் இருந்தால் மட்டுமே மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படும்.**

– கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புத் துறை


தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நடந்த மஹா யுத்தத்தில், தேவர்கள் இவ்வெம்பெருமானைத் தலைவராகவும், அசுரர்கள் சிவபிரானைத் தலைவராக வும் ஏற்றுச் சண்டை செய்ததாகவும், சிவன் சூலாயுதத்தை எம்பெருமான் மீது ஏவ, தேவநாதன் சக்ராயுதத்தை ஏவ, சுதர்சனர் த்வய மந்திரத்தைச் சொல்லி, சூலத்தைத் தன்னுடைய கரத்தால் பிடித்ததாகவும் எம்பெருமான் தானே மும்மூர்த்தியும் என்பதை சிவனுக்கு உணர்த்தியதாகவும், அதனால் தேவர்களுக்கு எல்லாம் தலைவன் என்கிற பொருளில், தேவநாதன் என்கிற திருநாமம் ஏற்பட்டதாகவும் சொல்வர்.

த்ரேதா யுகத்தில், அனுமன் சஞ்சீவி பர்வதத்தை இமயத்திலிருந்து பெயர்த்து, இலங்கைக்குக் கொண்டு செல்லும் போது, ஒரு சிறிய கல் கீழே சிந்தியதாகவும் அதுவே ஔஷதகிரி என்றும், இங்குள்ள ஸௌகந்திக வனத்தில், மார்க்கண்டேயர் தவமிருந்து, தாமரை மலரில் மூன்று வயதுப் பெண் குழந்தையைப் பெறும் பேற்றைப் பெற்றார் என்றும், இக்குழந்தை அருகில் இருந்த சமுத்திரத்தில் அலைகள் அடுக்கடுக்காக வர அவற்றைப் பார்த்து ஆனந்தமடைந்தாள் என்றும், ஆதலால் தரங்க முக நந்தினி என்கிற திருநாமத்துடன், மணப்பருவத்தில், தேவநாதனை மணந்தாள் என்றும், மார்க்கண்டேயர் இந்த எம்பெருமானை அச்யுதன், ஸ்திரஜ்சயோதிஸ், தாஸஸத்யன் என்று புகழ்ந்து இங்கேயே தாயாருடன் நித்ய வாஸம் செய்ய வேண்ட, பகவானும் இங்கு தங்கி அருள்பாலிக்கிறார் என்றும் சொல்வர்.

ப்ருகு மஹரிஷி பொற்றாமரைக்குளத்தருகே தவம் செய்து, பிரம்மன் அருளால், மஹா லக்ஷ்மியைக் குழந்தை வடிவில் மகளாக அடைந்ததாகவும், திருமண வயதில் பார்க்கவி ஹேமாப்ஜவல்லி என்கிற திருநாமத் துடன் இந்த எம்பெருமானுக்கு, விவாஹம் செய்து கொடுத்துத் தானும் இங்கு பகவானின் இடப்புறத்தில் இருந்து இப்போதும் சேவித்துக் கொண்டு இருப்பதாகவும் சொல்வர்.

இந்திரனுக்கு, வஜ்ராயுதத்தை அருளி, வ்ருத்தாசு ரனை அழிக்க அருள் செய்தவர் இந்த எம்பெருமான் என் றும் தல வரலாறு சொல்கிறது. ஆதிசேஷன், இந்நகரை நிர்மாணித்து தேவநாதனுக்கு அர்ப்பணித்தார் என்றும், அதனால் அவர் அஹீந்த்ரபுர நாதன் என்றும் இந்த தலம் அஹீந்தரபுரம் என்றும் வழங்கப்படுகிறது என்றும் கூறுவர். அஹீந்த்ரன் என்றால் ஆதிசேஷன். இது தமிழில் அயிந்த்ரன் என்று மாறுகிறது. ஆதலால், அயிந்த்ரபுரம்.

### திருவயிந்த்ரபுரம் :

இங்குள்ள கல்வெட்டுக்களில், இந்த எம்பெருமான், வினை தீர்த்த மன்னவன் என்றும், ஏழிசை நாதப் பெருமாள் என்றும் புகழப்படுகிறார்.

திருமங்கை ஆழ்வார், அடியார்க்கு மெய்யாகிய தெய்வநாயகன் என்றும், மூவராகிய ஒருவன் என்றும், ***“தேவர் தானவர் சென்று சென்று இறைஞ்சத் தண் திருவயிந்தரபுரத்து மேவுசோதி”*** என்றும் புகழ்கிறார்.

ஸ்வாமி தேசிகன், ***“ஆர்க்கும் கருணை பொழிவான் அயிந்தையில் வந்து அமர்ந்த கார்க்கொண்டல்”*** என்கிறார். அயிந்தை வாழும் மஞ்சு எனவே அருள் பொழியும் வள்ளல் என்கிறார். அருள் கொடுத்து, வினை தவிர்க்கும் அடியவர்க்கு மெய்யனே என்கிறார். அருள் தர எண்ணி அயிந்தை வந்தன; அடியவர்க்கு மெய்யர் மலர்ப் பதங்களே என்கிறார்.

நரசிம்ம பக்தனாகிய பிரகலாதன், இத்தலத்துக்கு அருகில் உள்ள கிருஷ்ணாரண்ய க்ஷேத்ரத்தில் (சிங்கிரிகுடி என்கிற சிங்கிரிகோயில்) ந்ருஸ்ம்ஹ அநுஷ்டுப் மஹாமந்திரத்தை ஜபித்துத் தவம் செய்து, நரசிம்மனையே நேரில் தரிசிக்கப் பெற்றான்.

இந்தத் திவ்ய தேசத்தில், கலியுகத்தில், பகவானின் மணியின் அம்சமாக ஒரு மஹாசார்யன் அவதரிப்பார் என்றும், அவர் இங்கு ஔஷத கிரியில் அரச மரத்தடியில் தபஸ் செய்து ஸ்ரீஹயக்ரீவரை நேரிலேயே சேவிப்பார் என்றும், ஸ்வாமி தேசிகன் அவதரிக்கப் போவதை திவ்ய

தேச அனுபவ மாலை சொல்கிறது (ஸ்ரீபராங்குச தாசன் என்னும் பேரறிஞர்).

| | | |
|---|---|---|
| பெருமாள் | – | மூலவர் : தெய்வ நாயகன். உத்ஸவர் – தேவநாதன், மேவுசோதி, அடியவர்க்கு மெய்யன், தாஸசத்யன், ஸ்திர ஜ்யோதி, அநகஜ்யோதி, மூவராகிய ஒருவன், த்விஷந்நாதன் விபூதி நாதன், கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம். |
| தாயார் | – | ஹேமாம்புஜவல்லி, வைகுண்ட நாயகி, பார்க்கவி, தரங்க முக நந்தினி. |
| தீர்த்தம் | – | கருட நதி, சேஷ தீர்த்தம், சந்த்ர தீர்த்தம், பூ தீர்த்தம், ப்ரம்ம தீர்த்தம். |
| விமானம் | – | ஸுத்வஸத்வ விமானம், சரித்ர விமானம், சந்த்ர நிர்மித விமானம். |
| ப்ரத்யக்ஷம் | – | கருடன், சந்திரன், ஆதிசேஷன், இந்திரன், சிவன் ப்ருகு, மார்க்கண்டேயர். |
| ஆகமம் | – | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – | திருமங்கை ஆழ்வார் |

**சிறப்புகள் :**

இத்தலத்து எம்பெருமான் மூவராகிய ஒருவன். தலைச்சடையும், நெற்றிக்கண்ணும் சிவபிரானைக் குறிக்க, திருக்கரத்தாமரை மலர் பிரம்மனைக் குறிக்க, சங்கும் சக்கரமும் மஹாவிஷ்ணுவைக் குறிக்க... இவர் மூவராகிய மூர்த்தி, பரமாசார்யன் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன், தனது இருபதாவது வயதிலேயே, ஔஷத கிரியில் கருடனைத் தியானித்து, ஹயக்ரீவ மந்திரோ பதேசம் பெற்று, அதை அநேகமாயிரம் தடவை ஆவ் ருத்தி செய்து, ஸ்ரீஹயக்ரீவன் நேரில் பிரசன்னமாகி, அநுக்ரஹம் பெற்ற திவ்ய தேசம். ஸ்ரீஹயக்ரீவன் கோவில் கொண்டுள்ள ஔஷதகிரி. (இங்கு மலையில் அடியேன், அன்பர்கள் துணையுடன் நிர்மாணித்த மஹா மண்டபம்... ஸ்ரீஹயக்ரீவன் சந்நிதிக்கு எதிரே உள்ளது) ஸ்வாமி தேசிகனால், ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரம் அருளப் பட்ட திவ்ய தேசம்.

*“ஜ்ஞாநாநந்தமயம் தேவம் நிர்மலஸ்படிகாக்ருதிம்*

*ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே”*

கருத்மான் விஷயமாக கருட தண்டகம், கருட பஞ்சாசத், சக்கரத்தாழ்வான் விஷயமாக சுதர்சனாஷ்ட கம், ராமபிரான் விஷயமாக ரகுவீர கத்யம், கோபாலன் விஷயமாக கோபால விம்சதி இன்னும் பலப்பல ஸ்தோத் ரங்களும், நூல்களும் இங்கு தான் இயற்றப்பட்டன. ஸ்வாமி தேசிகனின் தெய்வீக ஆற்றல்களுக்கெல்லாம் சான்றுகளாக, அவராலேயே கட்டப்பட்ட திருமாளிகை யும், அவரே வடிவமைத்துக் கட்டிய திருக்கிணறும், அவரே வடித்துக் கொடுத்த அருள் மழை பொழியும் அவரது அர்ச்சாத்திருமேனியும் இங்கு தான் உள்ளன. ஸ்வாமி தேசிகன், இந்த எம்பெருமான் விஷயமாக அருளிய, தெய்வநாயக பஞ்சாசத் சம்ஸ்க்ருதத்திலும், அச்யுத சதகம் ப்ராக்ருத பாஷையிலும் வேறு எந்தத் திவ்ய தேசத்திலும் இல்லாத அருமையான க்ரந்தம். ஸ்வாமி தேசிகன் அருளிய மும்மணிக்கோவை, நவமணி மாலை இந்தத் திவ்ய தேசத்து எம்பெருமானின் பெருமை யைப் பறைசாற்றுகின்றன. ஸ்வாமி தேசிகன் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர், கவிதார்க்கிக ஸிம்ஹம் என்றெல்லாம் பெரிய பெருமாளாலும், பெரிய பிராட்டியாலும் சன்மானிக்கப்பட்டார்.

**த்யான சுலோகம்**

*“சித்தமே ரமதாம் அஹீந்த்ர நகராவாஸீ துரங்கோந் முகா நந்த:*
*ஸ்ரீஸகதைவ நாயக ஹரி:தேவேந்த்ர ஸாக்ஷாத் க்ருத:।*
*பூர்வாம் போதி முக:ககேந்த்ர ஸரிதஸ் தீராச்ரயஸ் ஸர்வதா,*
*ச்லாக்யே சந்த்ர விநிர் மிதேச பகவாந் திஷ்டந் விமாநோத்தமே॥”*

-------

*“ப்ரணதஸுரகிரீட ப்ராந்த மந்தாரமாலா*
*விகளிதமகரந்த ஸ்நிக்த பாதாரவிந்த: ।*
*பசுபதி விதி பூஜ்ய: பத்ம பத்ராயதாக்ஷ:*
*பணிபதி புரநாத: பாதுமாம் தேவநாத: ॥”*

*-ஸ்வாமி தேசிகன் - தேவநாயக பஞ்சாசத்*

---

**பாசுரம்**

*“வையமேழும் உண்டு ஆலிலைவைகியமாயவன் அடியவர்க்கு*
*மெய்யனாகிய தெய்வநாயகனிடம் மெய்தகுவரைச் சாரல்*

மொய்கொள்மாதவி செண்பகம் முயங்கிய முல்லையங்
கொடியாட
செய்யதாமரைச் செழும்பணைதிகழ்தரு திருவயிந்திர
புரமே

– திருமங்கை ஆழ்வார்

“அன்பு அணிந்த சிந்தையராய் ஆய்ந்தமலர்த்தூவி
முன் பணிந்து, நீர் எமக்கு மூர்த்தியரே … என்பர்
எம் ஐந்திரபுரத்தார்க்கு இன் தொண்டரானார்
தமை இந்திர புரத்தார்தாம்”

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

**நாமாக்கள்**

361. ஓம் ஸர்வ லக்ஷண லக்ஷண்யாய நம:
(மஹாபுருஷ லக்ஷணங்களால் ச்ரீயபதி என அறியப்படுபவனே)
ஓம் ககுத்மிந்யை நம:
(எல்லா லோகங்களுக்கும், தானே ஈச்வரி என்பதைக் காட்டும் அடையாளங்களை உடையவளே)

362. ஓம் லக்ஷ்மீவரதே நம:
(எப்போதும் பிரியாத மஹாலக்ஷ்மியுடன் சேர்ந்திருப்பவனே)
ஓம் கம்புக்ரீவாயை நம:
(சங்கு போன்ற வட்டமான திருக்கழுத்தை உடையவளே)

363. ஓம் ஸமிதிஞ்ஜயாய நம:
(எல்லா யுத்தங்களிலும் ஜெயிப்பவனே)
ஓம் ஸுஜகநாயை நம:
(அழகிய இடுப்பு முன்பக்கத்தை உடையவளே)

364. ஓம் விக்ஷராய நம:
(பக்தர்களிடம் எப்போதும் ப்ரீதி உள்ளவனே)
ஓம் ரக்தபாண்யை நம:
(தாமரையின் உட்பக்கம் போலச் சிவந்த உள்ளங்கையை உடையவளே)

365. ஓம் ரோஹிதாய நம:
(தாமரையின் உட்புற வர்ணமுள்ளவனே)
ஓம் மநோரமாயை நம:
(தரிசிப்பவர் மனத்திற்கு மகிழ்ச்சி அளிப்பவளே)

366. ஓம் மார்க்காய நம:
(பக்தர்களால் தேடப்படுபவனே)
ஓம் பத்மிந்யை நம:
(உயர்ந்த ஜாதிப் பெண்ணின் லக்ஷணங்களை உடையவளே)

367. ஓம் ஹேதவே நம:
(எல்லாவற்றுக்கும் காரணமானவனே)
ஓம் மந்தகமநாயை நம:
(மென்னடை உடையவளே)

368. ஓம் தாமோதராய நம:
(யசோதையால் வயிற்றில் கயிற்றால் கட்டப்பட்டவனே)
ஓம் சதுர்தம்ஷ்ட்ராயை நம:
(அழகிய நான்கு முன்பற்களை உடையவளே)

369. ஓம் ஸஹா: நம:
(எதையும் பொறுத்துக் கொள்பவனே)
ஓம் சதுர்புஜாயை நம:
(நான்கு வித புருஷார்த்தங்களையும் தாமதியாது தர, நான்கு திருக்கரங்களை உடையவளே)

370. ஓம் மஹீதராய நம:
(பூமியை நிலை நிறுத்துபவனே)
ஓம் ஸுபரேகாயை நம:
(மங்கள ஸுசகமான கைரேகைகளை உடையவளே)

ஸ்ரீமதே ஹேமாப்ஜவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீதேவநாத பரப்ரஹ்மணே நம:

இத்தலம் கடலூர் நகருக்கு அருகில் உள்ளது. அடிக்கடி பேருந்து வசதி உண்டு.

திவ்ய தேச வைபவம் வளரும்...





பகவத் கீதை – இளைய சமுதாயம்

# அறிவுறுத்துதல், கடமையை போதித்தல்


தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்.

அறிவுறுத்துவர் பலர் காணப்படுவர். ஆனால் அறிவுறுத்தலோடு கடமையை போதிப்பவர்கள் மிகவும் அரிதாகவே இருப்பர். மானிடருக்கு பரம எதிரியும், பெரிய நோயும் பயமே என்று பகவத்கீதை அறிவுறுத்துகிறது. அதோடு மட்டுமின்றி கடமையை போதிக்கவும் செய்கின்றது.

“ஓ பார்த்தா! அலியின் தன்மையை அடையாதே. உனக்கு இது பொருத்தமானதன்று. ஓ பார்த்தா! இழிந்த உள்ளத்தின் தளர்ச்சியை விடுத்து எழுந்து நில்” – பகவத் கீதை 2.3

ஒவ்வொரு மானிடரிடமும் சக்தி மறைந்து இருக்கும். ஆனால் பயத்தினால் சக்தியானது அழிந்து விடுகின்றது. எனவே செயலில் ஈடுபடுவதன் வாயிலாகவும், உற்சாகத்துடன் பணி புரிவதன் வாயிலாகவும், லட்சயத்தை மீண்டும் மீண்டும் மேற்கொள்வதன் வாயிலாகவும் சக்தியானது பெருகிக் கொண்டே இருக்கும். அர்ஜுனன் போர்க்களத்தில் எதிரில் இருப்பவர்களைக் கண்டவுடனே அவர்கள் அனைவரும் உறவினர்களே, எனவே அவர்களுடன் எவ்வாறு போர் புரிவது என்று பயந்தான். அவர்கள் அனைவரையும் கொல்ல வேண்டுமே என்கிற பயம் அவனுக்கு ஏற்பட்டது. அதனால் அவன் சக்தியற்றவனாயினான். மனதளவில் உண்டான பலவீனமே சக்தி இழப்பிற்கான காரணமாகின்றது.

மாணாக்கர்களும் கூட இவ்விதமாகவே பல சமயங்களில் இதய பலவீனத்திற்கு ஆளாகின்றனர். அதுவும் முக்கியமாக தேர்வு நேரங்களிலும், நேர்முகத் தேர்வு நேரங்களிலும், ஏதாவது நுழைவுத் தேர்வு எழுதும் போதும் இதய பலவீனம் ஏற்படுகின்றது. இந்த இதய பலவீனம் மோசமானது என கீதை கூறுவதோடு மட்டுமின்றி, “கடமையை போததிக்கவும் செய்து இதய பலவீனத்தை



விடுத்து எழுந்து கடமையை செய்” என உற்சா கத்தை அளிக்கின்றது. எத்தனையோ பேர் உயர்ந்தவர்கள் எதிரில் இருப்பி னும் மனதைரியம் உடையவன் பின்வாங்காமல் தைரியமாக முன் னேறிச் செல்வான்.

ராமபிரான் சாக்ஷாத் இறைவ னேயாவார். அவருக்கு உதவி புரிய மகாபலம் கொண்ட வானர வீரர்கள் இருந்தனர். வானர வீரர்கள் அனை வரும் ஒன்று சேர்ந்து இலங்கைக்கு பாலம் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். பெரிய பெரிய கற்களை, பாறைகளை, மரங்களை கொண்டு வந்து கடலில் வீசி பாலத்தை கட்டத் துவங்கினர். இவர்களின் ராம சேவையை கண்டு, ஒரு சிறிய அணில் தானும் ராமபிரானின் சேவை யில் பங்கு பெற வேண்டும் என எண்ணியது. தன்னுடைய எண்ணம் அற்பமானது என்று அதற்கு எந்த வொரு சங்கோசத்தையும் அளிக்க வில்லை. அதற்கு மலையளவு தைரி யம் இருந்தது. வானர வீரர்களின் பலத்திற்கு இது பயப்பட வில்லை. தன்னைத் தானே தாழ்த்திக் கொள் ளவுமில்லை. அதனுடைய இதயம் பலவீனமடையவுமில்லை. நேராகச் சென்று சிற்சிறிய மணல்களை கொண்டு சென்று கடலில் வீசியது. அதனின் பணி வானரர்களுக்கு சிரிப்பை வர வைத்தது. சில வீரர்கள் அதனுடைய செயலைக் கண்டு சிரித் தனர். ஆனால் அது தன் பணியை நிறுத்தவில்லை. அதே போன்று தன்னுடைய செயல் சிறுமையானது என்றும் கூட எண்ணவில்லை. இதற்கி டையில் ராமபிரானுக்கு அந்த அணி லின் பக்தி தெரிய வந்தது. உடனே அந்த தேவாதி தேவன் அவ்விடத் திற்கு வந்து ஒரு திருக்கரத்தால் அணிலை தூக்கிக் கொண்டு, மற்றொரு திருக்கரத்தால் அன்புடன் தடவினார். ராமபிரான் காட்டிய அன்பே அணிலின் தோள் மீது கோடுகளாக இப்பொழுதும் காணப்படுகிறது. அக் கோடுகளே நமக்கு உத்வேகத்தை அளிக்கிறது. முயற்சிப்பவர்களுக்கு வெற்றியானது கண்டிப்பாகக் கிடைக்கும். தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளாமல், மனவலிமையை விடாமல் யாரொருவர் வெற்றிப் பாதையில் உள்ளனரோ அவர்களுக்கு பெரியோரின் நல்லாசியும் கண்டிப்பாகக் கிடைக்கும்.

லட்சய பாதைக்கு மூன்று சிறப்பான பண்புகள் உண்டு. அவை அவர் களிடம் தீவிரமான விருப்பம் இருக்கும். அவர்களுக்கு நிலையான லட்ச யம், அவர்களுக்கு நிறைந்த சங்கல்பம் இருக்கும். இம்மூன்றின் வாயிலாக அவர்கள் நிச்சயமாக திறமையானவர்களாக ஆகின்றனர். ராமதூதனான அனுமனுக்கு அளவற்ற சக்தியுண்டு. அந்த சக்தி எங்கிருந்து வந்தது. ராமனுக்கு பணிவிடை செய்ய வேண்டுமென்ற விருப்பத்தினால் வந்தது. இலங்கைக்கு சென்று சீதை இருக்குமிடத்தை தெரிந்து கொள்வதே அனுமனின் லட்சயமாக இருந்தது. அனுமனின் சங்கல்பமானது வைரத்தை விட திடமாக இருந்தது. ஆகவேதான் அனுமன் நூறு யோஜனை தூரமுள்ள கடலையும் தாண்டி, சீதையைக் கண்டு, ராவணனை அவமானப்படுத்தி திரும்பி வந்தார். ஆகவே இளைஞர்கள் தீவிரமான விருப்பத்துடன் திடமான லட்சயத்துடன் முன்னோக்கிச் சென்றால் வெற்றிகளைப் பெறலாம்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 38க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ச் | சூ | ர் | 2 அ | ர் | னு | சா | ச் | ரு | 3 தி |
| ரு | ன் | வா | ழ் | 4 ஆ | 5 ல | ட் | சா | ர் | ச் | ச | னை |
| வ | சா | | | | ங் | | 6 ச | ட | கோ | ப | ர் |
| ல் | பி | 7 தோ | மா | லை | கா | 23 நா | ர | த | ர் | | |
| லி | ம் | மா | ம் | ம் | ர | தி | ஸ் | தா | ப | 8 சு | 9 பா |
| க் | ந | ம் | ள | ன் | ப் | ந் | | ர | ட | ப | |
| கே | த | ர | பா | ய | பி | வ | | த் | 10 கை | த் | |
| ணி | த் | 24 பி | 11 நே | ரி | ரி | வ் | | 12 பு | | ரா | |
| | 13 மூ | | | 14 சூ | ய | 15 செ | ன் | ச | வா | நி | 16 ஸ்ரீ |
| 17 து | ரி | யோ | த | ன | ன் | த | த் | சா | ச் | னை | 18 ஆ |
| ன் | ய | ரி | 19 சூ | ள் | க | ர் | வா | ழ் | லா | த | 20 மு |
| 21 தி | ரு | ந | றை | யூ | ர் | | தி | ப | ப் | ரு | 22 தி |



# ஆயுர் வேதம்

# நாவல் பழம்

தொடர்

தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
: 90007 61390.
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா.

நாவல் பழம் நாம் உண்பதற்கு மட்டுமின்றி ஆரோக்கியத்திற்கும் அரு மருந்தாக உதவுகிறது. பழம் மட்டுமின்றி நாவல் மரத்தின் அனைத்துப் பகுதிகளும் மருத்துவத்திற்கு பயன்படுகிறது.

மேகதேவன் நாவல் பழமாக மாறினார் என்ற ஓர் கருத்தும் உண்டு. நாவல் பழம் ஸ்ரீகிருஷ்ணர் நிறத்தில் இருப்பதால், கிருஷ்ணருக்கு உகந்த பழமாகப் பாவித்து ஸ்வாமிக்கு படைத்து பக்தர்கள் பூஜிக்கிறார்கள்.

சமஸ்கிருதத்தில் ஜம்பூ என்று சொல்லப்படும் இந்த நாவற்பழம் பழவகைகளில் மிகவும் சிறந்தது. ஆகையால் பலேந்திரா என்றும், நீல வண்ணத்தில் இருப்பதால் நீல பழம் என்றும், வாசனை மிகுந்த இலைகளைக் கொண்டதால் சுரபி பத்ரா என்றும், குயில்களுக்குப் பிடித்த பழமாதலால் கோகிலேஷ்டா என்றும், பிகபக்ஷ என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இதனை ஆங்கிலத்தில் Blackbery என்றும் கூறுவர். இந்நாவல் பழம் மிர்டேசி என்னும் தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. இதன் அறிவியல் பெயர் சைஜிஜியம் க்யூமினி.

### மூலவியாதி குணமாக :

நாவல் பழங்கள் கிடைக்கும் காலங்களில் நாள்தோறும் வெறும் வயிற்றில் ஒரு கப்பில் 5–7 நாவல் பழங்களை எடுத்துக் கொண்டு அதில் 3–4 சிட்டிகை உப்பு சேர்த்து அந்த பழங்களை சாப்பிட வேண்டும். பருவ காலங்களில் கிடைக்கக்கூடிய இந்த நாவல் பழங்களை 2 வருடம் தொடர்ந்து, உண்டால் நல்ல பலன் கிட்டும். இப்பழம் மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை கிடைக்கப் பெறும்.

### சிறுநீரகக் கோளாறுகளுக்கு :

நாள்தோறும் இரண்டு வேளை 1–3 கிராம் நாவல் கொட்டையின் பொடியை 100 மி.லி. நீரில் கலந்து குடித்தால் உறக்கத்தில் சிறுநீர்கழிப்பது குறைந்து வரும்.

### முகப்பருவிற்கு :

நாள்தோறும் ஒரு முறை நாவல் பழக்கொட்டைப் பொடியில் தகுந்த அளவு பால் கலந்து முகத்திற்கு தடவி, ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வெதுவெதுப்பான நீரில் கழுவினால் முகப்பருக்கள் நீங்கி முகம் பொலிவுடன் காட்சியளிக்கும்.

### பல் சம்பந்தப்பட்ட வியாதிகள் குணமாக :

நாள்தோறும் 1–2 முறை நாவல் பழகொட்டைப் பொடியில் பல் துலக்கினால் பல்வலி, ஈறுகள் வலி மற்றும் வீக்கம் ஆகியவை நீங்கும்.

### சர்க்கரை வியாதி குறைய :

நாவல் பழக்கொட்டை பொடி, சிறு குறிஞ்சான் பொடி, நெல்லிக்காய் பொடி, மஞ்சள் பொடி ஒவ்வொன்றையும் 100 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு, நாள் தோறும் மூன்று வேளையும் உணவு உட்கொள்வதற்கு 15 நிமிடத்திற்கு முன் அரை டீஸ்பூன் பொடியை 50 மி.லி. நீரில் கலந்து உட்கொண்டால் சர்க்கரை வியாதி கட்டுக்குள் இருக்கும். அதனால் வரக் கூடிய பக்க விளைவுகள் ஏற்படாமல் இருக்கும்.

### வயிற்றுப்போக்கு குறைய :

நாவல் பழக்கொட்டை பொடி, மாங்கொட்டைப் பொடி, கரக்காய் பொடி ஆகியவற்றை 50 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு நாள்தோறும் மூன்று வேளை 1–2 கிராம் பொடியை 100 மி.லி. நீரில் கலந்து உட்கொண்டால் சீதபேதி, இரத்தப்போக்கு போன்ற வயிற்றுப் போக்குகள் குறையும்.

### முகம் மேல் உள்ள கரும் மச்சங்கள் குறைய :

நாவல் பழ விதைப் பொடி, காய்ந்த எலுமிச்சை தோல் பொடி, கடலைமாவு

## சிறுவர் பகுதி விடைகள்

1. 7
2. காஞ்சீபுரம்
3. இராமாயணம், மகாபாரதம்
4. வில்வம்
5. பிரகலாதன்
6. ரஷ்ய மொழியில்
7. நம்மாழ்வார்
8. அரையர் சேவை
9. தொண்டரடிப்பொடியாழ்வார்
10. வைகானஸம், பாஞ்சராத்ரம்

தொகுப்பு : திரு. கோவிந்தன், கடலூர்.

ஆகியவற்றை சம அளவில் எடுத்துக் கொண்டு, நாள் தோறும் ஒருமுறை அதனுடன் தேவையானளவு பன்னீர், 7–8 சொட்டுகள் பாதாம் எண்ணெய் ஆகியவை யும் நன்கு கலந்து முகத்திற்கு பூசி சிறிது நேரம் கழித்து முகம் கழுவினால் முகம் பளபளப்பாகவும் பொலிவுட னும் காட்சியளிக்கும்.

### தீப்புண் மற்றும் கொப்பளங்களுக்கு :

தகுந்த அளவு நாவல்பழ இலைகளை எடுத்துக் கொண்டு, அதனை கொதிக்கும் நீரில் சிறிது நேரம் ஊற வைத்து, பின் உலர்ந்த துணியால் நன்கு துடைத்து அந்த இலைகளை தீப்புண்களின் மேல் இட்டு தூய்மை யான துணியால் கட்ட வேண்டும். இவ்வாறு 12 மணி நேரத்திற்கு ஒரு முறை இலைகளை மாற்றிக் கட்டினால் தீப்புண் ஆறி விடும். இம்மருத்துவத்தை கிராமப் புறங்களில் இப்பொழுதும் பின்பற்றி வருகின்றனர்.

### உடல் துர்நாற்றம் நீங்க :

400 மி.லி. நீரில், 50 கிராம் நாவல் பட்டை மற்றும் இலைகளை நன்கு இடித்து 100 மி.லி. ஆகும் வரை கொதிக்க வைத்து, சற்று ஆறிய பின் உடலெல்லாம் பூசி ஒரு மணி நேரத்திற்குப் பிறகு குளித்தால் உடல் துர்நாற்றம் நீங்கி புத்துணர்ச்சி ஏற்படும்.

### இரத்தம் தூய்மையாக :

நாவல் மர இலைகள் எறித்து நன்கு ஆற வைத்து பொடி செய்து 1–2 கிராம் பொடியை தகுந்தளவு தேனு டன் குழைத்து சாப்பிட்டால் இரத்தம் தூய்மை யாவது டன் உடல் அரிப்பு, சொரி, சிரங்கு, படர்தாமரை போன்ற தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் நீங்கும்.

### மாதவிடாயின் போது அதிக இரத்தப்போக்கு குறைய :

நாவல் மரப்பட்டைப் பொடி, சந்தனம் பொடி ஒவ்வொன்றையும் 25 கிராம் வீதம் எடுத்து கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் நான்கு முறை 1–2 கிராம் பொடியை 50 மி.லி. நீரில் தகுந்தளவு சர்க்கரை கலந்து குடித்து வந்தால் அதிக இரத்தப்போக்கு, வலி ஆகியவை குறையும்.

நாவல் பழங்களை அதிகம் தின்றால் தொண்டை யில் வலி, கரகரப்பு ஏற்படும். இருமல் கூட வரும். ஆகை யால் உப்பு மிளகு சேர்த்து உண்டால் பிரச்சனை வராது.

குறிப்பு : மருத்துவரை கலந்தாலோசித்தல் மிக்க நலன் பயக்கும்.

ஆயுர்வேதம் வளரும்...

### திருமலைக்கு வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

- தங்களுடைய முகவரியையும், தொலைபேசி எண்ணையும் ஒரு சிறு காகிதத்தில் எழுதி உங்களுடன் பயணிக்கும் குழந்தை மற்றும் முதியோரிடம் வைத்துக் கொள்ளும்படி அளியுங்கள். ஒரு வேளை அவர்கள் காணாமல் போனால் அவர்களை தங்களிடம் சேர்ப்பதற்கு இது உதவியாக அமையும்.
- திருமலையில் இருக்கும் போது தங்களுடன் பயணிப்போர் எவரேனும் தவறி காணாமல் போனால் காவல் வளாகத்திற்கு (1வது டவுன் காவல் நிலையம், 2வது டவுன் காவல் நிலையம், குற்றவியல் காவல் நிலையம்) வந்து சேர வேண்டும் என்று முன் கூட்டியே தகவலை பகிர்ந்துக் கொள்ளவும்.
- திருமலையில் அறைகள், தரிசனம், பிரசாதங்களுக்கு தளாரிகளை நம்பாதீர்கள். தி.தி.தே. கௌண்ட்டர்கள் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளுங்கள்.
- அன்னியர் தரும் உணவு பொருட்களை வாங்க வேண்டாம். அவர்கள் கூறும் வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள்.
- உங்களுடைய விலையுயர்ந்த பொருட்கள், நகைகள், பணம் ஆகியவற்றை அறையிலோ, வாகனத்திலோ வைத்து விட்டுச் செல்ல வேண்டாம்.



# 2019 அக்டோபர் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| | (யுரேனஸ்) | | ராகு |
| (நெப்ட்யூன்) | **அக்டோபர் - 2019**<br>3 – சுக்ரன் – துலாம்<br>14 – ப்ளூட்டோ – வ.நி. | | |
| | 17 – சூரியன் – துலாம்<br>23 – புதன் – விருச்சிகம் | | |
| (ப்ளூட்டோ)<br>கேது<br>சனி | கு ரு | சந்திரன்<br>புதன் | செவ்வாய்<br>சூரியன்<br>சுக்ரன் |

**மேஷம்**

உங்கள் ராசி நாயகன் ஆறாமிடத்தில் உலவிடுவதால் வெற்றி வாய்ப்புகள் கூடும். எதிரிகளின் வலிமை குன்றும். புதன்–சுக்ரன் பரிவர்த்தனை பெற்றுள்ளதால் குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். விருந்து, விழா என்று சென்று வருவீர்கள்.

**ரிஷபம்**

புதன் – சுக்ரன் பரிவர்த்தனை பெற்று உலவிடுகின்றனர். ஆரோக்கியம் சீராகும். சுக்ரனின் சுயவீடாகிய துலாத்தில் உலவிடுவதால் புதிய ஆடை, அணிமணிகள் சேரும். பெண்களுக்கு உற்சாகமான போக்கு தென்படும். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பர்.

**மிதுனம்**

மாத ஆரம்பத்தில் புதன் சந்திரனுடன் இணைந்து ஐந்தில் உலவிடுவது சிறப்பாகும். மாணவர்கள் கல்வி–கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். அரசு சம்பந்தமான காரியங்கள் லாபம் தரும். உடன் பிறப்புகள் பக்கபலமாக இருப்பார்கள். அண்டை அயலார்களுடன் இருந்து வந்த மோதல் போக்கு அகலும்.

**கடகம்**

மனதில் தைரியமும் உற்சாகமும் நிறைந்திருக்கும். விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் வெற்றி வாகைச் சூடுவர். தொழில் நிமித்தமாக அடிக்கடி பயணம் மேற்கொள்ள வேண்டி வரலாம். வாகனம் மற்றும் பயணம் சார்ந்த தொழிலில் நல்ல லாபம் ஈட்டலாம்.

**சிம்மம்**

ராசி நாயகன் சூரியன் மாதப்பிற்பாதியில் நீசம் பெறுகிறார். பாக்கியஸ்தானத்தில் செவ்வாய் இரண்டிலும், சுகஸ்தானத்தில் குருவும் சஞ்சரிப்பதால் தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாத இறுதியில் விசாக நட்சத்திரத்தில் சூரியன் உலவிடும்போது கைவிடப்பட்ட காரியங்கள் கூட நடைபெறும்.

**கன்னி**

அர்த்தாஷ்ட சனியின் அமைப்பு இருந்தாலும், தொழில் வகையில் திடீரென சில மாற்றங்களைச் செய்யும் சூழ்நிலை உருவாகும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். நிலம், மனை, வீடு வாங்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். மாதப் பிற்பாதியில் செலவினங்கள் கூடவே செய்யும்.

**துலாம்**

வக்ர சனியின் இயக்கம் நீங்கி விட்டது. ராசி நாயகனும், பாக்கியாதிபதி புதனும் இணைந்து உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பத்தாமிடத்து சந்திரனும் மாத ஆரம்பத்தில் உள்ளதால் தொழிலில் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்வீர்கள்.

**விருச்சிகம்**

ராசிநாதன் செவ்வாய் லாபஸ்தானத்திலும், குரு ராசியிலும் உலவிடுவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். சூரியன் துலாத்தில் உலவுவதால் உத்தியோகத்தில் இடமாற்றம் எதிர்ப்பார்க்கலாம். சகாயஸ்தானாதிபதி இரண்டில் உலவிடுவதால் உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும்.

**தனுசு**

ராசிநாயகன் விரய வீட்டில் சஞ்சரிப்பினும், செவ்வாய் தொழில் ஸ்தானத்திலும், சூரியன் 11லும் சஞ்சரிப்பதால் தொழில் வளர்ச்சி கூடும். பணப்பெருக்கம் அதிகரிக்கும். சனியின் பார்வை தொழில் வீட்டிற்கு ஏற்படுவதால் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொண்டு புதிய தொழிலிலும் ஈடுபடுவீர்கள்.

**மகரம்**

பத்தாமிடத்தில் சூரியன் உள்ளதால் பங்குதாரர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகக் கூடும். புதன்–சூரியன் இணைந்து பத்தில் உலவிடும் காலத்தில் திடீர் மாற்றங்கள் பலவும் வந்து சேரும். அடுத்தவர்களிடத்தில் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடம் வந்து சேரும்.

**கும்பம்**

ராசி நாயகன் லாபஸ்தானத்திலும், தனஸ்தானாதிபதி குரு தொழில் வீட்டிலும் சஞ்சரிப்பதால் தொழில், வியாபாரம், உத்தியோகம் ஆகியவற்றில் முன்னேற்றம் தென்படும். துணிச்சலான காரியங்களில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். மனத்தில் தெளிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**மீனம்**

ராசி நாயகன் குரு ஒன்பதிலமர்ந்து உங்கள் ராசியை நோக்குகிறார். சனி பத்தாமிடத்தில் உலவிடுவதால் தொழில் ரீதியாக வெளிநாடு செல்லும் வாய்ப்பைப் பெறுவீர்கள். இரண்டிற்குரிய செவ்வாய் ராசியை நோக்குவதால் சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _______________
(பெரிய எழுத்துக்களில்) _______________
_______________
_______________
_______________

மாவட்டம் & பின்கோடு எண் __________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஓ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

# பக்தர்கள் சேவையில்...



திருமலை திருப்பதி தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் ஸ்ரீமாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னப்பிரசாதக் கூடத்தை தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் எதிர்ப்பாராது திடீரென பார்வையிட்டு அங்கு உணவு உட்கொள்ளும் பக்தர்களிடம் அன்னப்பிரசாத வசதியின் விவரங்களைக் குறித்து கேட்டறிந்த போது...

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரால் ஒவ்வொரு வருடமும் ஸ்ராவண (ஆவணி) மாதத்தில் நடத்தப்படுகின்ற “மனகுடி” நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 2019 ஆகஸ்ட் 08 ம் தேதி வியாழக்கிழமை ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களுக்குப்பட்ட 11,500 ஆலயங்களுக்கு அனுப்புவதற்காக திருமலை ஆலயத்தில் அது சம்மந்தப்பட்ட பொருட்களுக்கு பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர் சிறப்பு பூஜைகள் நடத்தியபோது





2019, ஜுலை 16ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று தமிழ் நாடு காஞ்சிபுரம் திவ்வியத் திருத்தலமான ஸ்ரீவரதராஜ ஸ்வாமி ஆலயத்தில் 40 வருடங்களுக்கு ஒருமுறை தரிசனமளிக்கும் ஸ்ரீஅத்திவரதராஜ ஸ்வாமி வைபவத்தை தரிசித்து, தி.தி.தே. சார்பில் பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர் பட்டு வஸ்திரங்களை சமர்ப்பித்த போது...

2019 ஆகஸ்ட் 23ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று, கோகுலாஷ்டமி பண்டிகையை முன்னிட்டு தி.தி.தேவஸ்தான ஸ்ரீவேங்கடேஸ்வரா கோஸம்ரக்ஷணசாலை ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி ஆலயத்தில் வைபவமாக நடைபெற்ற கோபூஜை மஹோத்ஸவத்தில் பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் பங்கு கொண்டு கோபூஜையை நடத்தினார். அங்கு நிகழ்ச்சிக்கு வந்திருந்த பக்தர்களுக்கு கோபூஜை மகாத்மியம், கோவின்(பசு) வைபவம் குறித்து கூறினார். பின்னர் பசு பாதுகாப்பிற்காக தி.தி.தே. அமுல்படுத்தி வரும் அமுல்படுத்த போகும் விதிமுறைகளையும் எடுத்து இயம்பினார்.



Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.




சித்தூர் மாவட்டம், காணிப்பாக்கத்தில் உள்ள ஸ்ரீவரசித்தி விநாயக ஸ்வாமி ஆலய பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு 2019, செப்டம்பர் 10ஆம் தேதியன்று தி.தி.தே. சார்பில் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.ஒய்.வி.சுப்பா ரெட்டி தம்பதியினரும், திருமலை ஆலய சிறப்பு அதிகாரி திரு.ஏ.வி. தர்மா ரெட்டி தம்பதியினரும் பட்டு வஸ்திரங்களை பக்தியுடன் சமர்ப்பித்தனர்.



சித்தூர் மாவட்டம், காணிப்பாக்கம் ஸ்ரீவரசித்தி விநாயக ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தில் தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்களை சமர்ப்பிக்க வருகை புரிந்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பா ரெட்டி தம்பதியினருக்கு காணிப்பாக்கம் ஆலய செயலாட்சித் தலைவர் திரு.தேமுள்ளு ஆலய மரியாதையோடு, அவர்களுக்கு தீர்த்தப் பிரசாதங்களை வழங்கினார்.



2019, ஆகஸ்ட் 23ஆம் தேதி தி.தி.தே. திருப்பதியில் உள்ள ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலையில் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயத்தில் வைபவமாக கோபூஜை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்கள் அங்குள்ள ராமகோடி ஸ்தூபம் அருகில் கோடி ராம நாமம் எழுதினார். இது “ஸ்ரீராம நாம” ஸ்மரணையானது பக்திக்கும், முக்திக்கும் வழிக்காட்டும் என்னும் உண்மையை பக்தர்களுக்கு காட்டிடும் சம்பவம்




திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் தி.தி.தே. நிர்வகித்த ஸ்ரீவரலக்ஷ்மி விரதம் நிகழ்ச்சியின் திருக்காட்சி
இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட உயர் அதிகாரிகளும், பக்தர்களும்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams 25-09-2019
Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742,
Postal Regd.No.TRP/12 - 2018-2020 Licensed to post without prepayment
No.PMGK/RNP/WPP-04/2018-2020

